

# தமிழரசு

16-8-1993 ரூ.3





பூவையர் மகிழும் வண்ணம்
புதுமைகள் படைத்திடும் கதர்பட்டுப் புடவைகள்
அணியும் அழகே ஓர் ஆனந்தம்

அனைத்து

# காதிகிராப்ட்

அங்காடிகளில் கிடைக்கும்



DIPR/273/Dis/MS/93/7

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை - 600 108

# இந்த இதழில்...

**சுதந்திரத் திருநாட்டின் பெயரையும் புகழையும்**
**என்றென்றும் நிலைநாட்டுவோம்!**
-மாண்புமிகு முதல்வர் உரை ... 2
சென்னையில் செயற்கை மழை ... 9
நெல்லை மாவட்டச் சுதந்திரச் சுடர்மணிகள் ... 11
'வெள்ளையனே வெளியேறு'
இயக்கத்தின் வீர வரலாறு ... 15
பேரூராட்சிகளின் பெரும்பணிகள் ... 17
மகளிர் நலனில் மகத்தான பணிகள் ... 21
இதன் வயது - 100 ... 24
நெல்லையில் நெல்குவிக்கும் சகோதரர்கள் ... 27
மக்கள் நல்வாழ்வில்
மருத்துவமனையின் பங்கு ... 29
களிமண்ணில் கைவண்ணம் ... 31
பெரியார் மாவட்டத்தில்
அறிவொளி இயக்கம் ... 33
நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டத்தில்
-பாசன வாய்க்கால் தூர்வாரும் பணிகள் ... 35
வெறிநாய்க்கடி ... 37
மாணவர் பக்கம் ... 40
*அமரர் ப. ஜீவானந்தம்* ... 43
— கவிதை
எழில்மிகு குற்றாலத்தில் ... 44
ஏற்றமிகு சாரல் விழா
கண் மருத்துவம்
—டாக்டர் பதில்கள் ... 46
நூல் நயம் ... 48

**தமிழரசு**


திருவள்ளுவர் ஆண்டு 2024

ஆடித் திங்கள் - 32

மலர்: 24 இதழ்: 4

16-8-1993

விலை: ரூபாய் மூன்று



# சுதந்திரத் திருநாட்டின் பெயரையும் புகழையும் என்றென்றும் நிலைநாட்டுவோம்!

## மாண்புமிகு முதல்வர் அவர்களின் சுதந்திரத் திருநாள் சிறப்புரை

புகழ்மிக்க தலைமைச் செயலகக் கோட்டை முகப்பில், நம் பாரத தேசத்தின் இலட்சியத் திருக்கொடியை, தமிழ்ப் பெருமக்களின் மேலான நல்லாதரவோடு, மூன்றாவது முறையாக ஏற்றி வணங்குவதில், பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். இந்த வாய்ப்பினை எனக்கு அளித்த, எனது அன்பிற்கினிய தமிழக மக்களுக்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டாண்டுக் காலமாய், அடிமைப் பட்டிருந்த அவலம் நீங்கி, ‘ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே’ - என, ஆனந்த சுதந்திரப் பண் பாடி... ஆண்டுகள் நாற்பத்து ஆறு கழிந்து, நாற்பத்து ஏழாம் ஆண்டு சுதந்திரத் திருநாளில், நமது உள்ளங்களில் மகிழ்ச்சி பொங்க, இங்கே நாம் குழுமியுள்ளோம்.

### தியாகச் சுடர்கள்

நாட்டின் சுதந்திரத் தாக வேள்வியில், அன்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டதோடு, இன்று நாம் இந்தப் புண்ணிய பூமியில், சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்கு, காரணகர்த்தர்களாய்த் திகழ்ந்திட்ட, தியாகச் சுடர்களை நினைவு கூர்ந்து, நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்க, நமது கடமைகளை எண்ணிப் பார்க்க வேண்டிய நன்னாள் தான், இந்நாள்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், இந்நன்னாளைப் பற்றிக் குறிப்பிடும்போது -

**‘‘வெள்ளையர்களின் கணக்குத் தீர்ந்த நாள், இந்தியர்கள் கணக்குப் பார்க்கும் நாள்’’**

**எனச் சிறப்பாகக் குறிப்பிட்டார்கள்.**

அந்த அடிப்படைத்தத்துவத்தை மனதிலே கொண்டு தான், நாடு விடுதலை பெற்றதன் தலையாய நோக்கங்களை, உண்மையாக எய்துவதில், உங்கள் சகோதரியின் தலைமையில் இயங்கும் இந்த அரசு, முழு மூச்சுடனும், உறுதியுடனும், அயராது செயல்பட்டு வருகின்றது.

நம் அரசியல் அமைப்பு, தெளிவு படுத்திச் சுட்டிக் காட்டியுள்ளபடி, ‘‘இறுதி எஜமானர்கள் மக்கள் தான்’’ என்ற கோட்பாட்டில், அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ள எங்கள் அரசு. அம்மக்களின் விருப்பத்தையும், தேவைகளையும் நிறைவேற்றி வைப்பதில், முனைப்புடன் உள்ளது.

### தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினை

மக்களின் நம்பிக்கை வீண் போகாமல் பணியாற்றிட வேண்டும், என்ற அடிப்படை இலக்கைக் கொண்டுள்ள அரசாகத் திகழுகிற காரணத்தால் தான், தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையான, காவிரி நதிநீர்ப் பிரச்சினையில், அண்மையில் நமது உரிமையை நிலைநாட்டிட, உயிரையும் பணயம் வைத்து, காலவரையற்ற உண்ணா அறப்போரினை, அண்ணல் காந்தியடிகளின் அற வழியில் நான் மேற்கொண்டு, இந்தியத் துணைக் கண்டத்தின் கவனம் முழுவதையும் ஈர்த்து, இன்றைக்கு இந்தப் பிரச்சினைக்கு, ஒரு புதிய திருப்புமுனையை ஏற்படுத்தி உள்ளோம்.




காவிரி நதியில் நீர் பெறுவது என்பது, காலம் காலமாக, நாம் பெற்று வந்துள்ள உரிமை என்பதோடு, தமிழகத்தின் ஜீவ நாடியே, அதிலே அடங்கியுள்ளது என்பதால் தான், இதே கோட்டை முகப்பில், நான் முதன் முதலாக, 1991 ஆகஸ்ட் 15-ஆம் நாள், கொடியேற்றி உரையாற்றியபோது, காவிரி நதிநீர்ப் பிரச்சினையை, முக்கிய பொருளாகக் குறிப்பிட்டிருந்தேன். அதனைத் திரும்பவும் நினைவுபடுத்துவது, இன்றைய சூழ்நிலையில், மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அன்றைக்கு நான் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்:

**காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை, இந்த அரசின் முழுக் கவனத்தையும், முயற்சியினையும் தற்போது ஈர்த்துள்ளது. தமிழ்நாட்டின் ஜீவாதாரப் பிரச்சினையும், மாநிலம் முழுவதும், ஒட்டுமொத்தமாக குரல் கொடுத்துச் செயல்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையுமான, காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையில், நாம் நியாயம் கேட்டு, மத்திய அரசைத் தலையிடக் கோரி வருகிறோம். நீதி எவர் பக்கம் என்பதை, இந்தியத் துணைக் கண்டமே அறிந்துள்ளதால், இப்பிரச்சினையில், நாட்டை ஆளும் தலைமைப் பொறுப்பிலுள்ள மைய அரசு, தனது**

கடமையைச் செய்தாலே போதுமானது. இந்தச் சுதந்திர நன்னாளில், அந்த நியாயத்தின் குரலை, அனைவரும் கேட்கிற வகையில், நாம் உரத்த குரலில் மீண்டும் முழங்குவோம். காவிரி நதிநீர்ப் பிரச்சினை, தமிழ்நாட்டின் ஒவ்வொரு தனி மனிதனின் பிரச்சினை ஆகும்.

There is no scope anymore for negotiations or talks to settle this issue. We want only a judicial settlement which must be honoured by one and all.

காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க, இனிப் பேசிப் பயனில்லை. நீதிமன்ற ஆணை ஒன்றே, இனி இப்பிரச்சினைக்குத் தீர்வாக அமைய முடியும் என்பதை, வற்புறுத்திட விரும்புகிறேன். அத்தகைய நீதித் துறை ஆணை, ஒவ்வொருவராலும் மதிக்கப்பட வேண்டும்; ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அது தவிர, இனி பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை, அரசின் சார்பில், ஆணித்தரமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.''

இவ்வாறு, இதே கோட்டைக் கொத்தளத்தில் இருந்து, நான் கூறியபடி, ''நீதிமன்றமான காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு ஒன்றே, சரியான தீர்வாக அமையும்; அது ஒவ்வொருவராலும் மதிக்கப்பட வேண்டும். அதனை நிறைவேற்றித் தர வேண்டிய கடமையும், கட்டாயமும், மைய அரசுக்கு உண்டு.'' நமது இந்த நிலையை வற்புறுத்தி, மத்திய அரசை நடவடிக்கை மேற்கொள்ளச் செய்திட, எடுத்துக் கொண்ட அனைத்து முயற்சிகளும், பலன் தராமல் போன காரணத்தால் தான், உச்சகட்ட முயற்சியாக, எனது உயிரைப் பணயம் வைத்து, உண்ணாவிரத அறப் போராட்டத்தை மேற்கொண்டேனே தவிர, சிலர் கூறுவது போல், இது திடீர் நடவடிக்கை அல்ல, என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

## தமிழக மக்களின் நலன் காக்கப்பட வேண்டும்!

எனக்கு என் உயிர் முக்கியம் அல்ல. தமிழகத்தின் தன்மானம் காக்கப்பட வேண்டும்; தமிழக மக்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்பது தான், என் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்த அடிப்படையில் அமைந்தது தான், அந்த உண்ணாவிரதப் போராட்டமாகும். என்னைக் குறை கூறும் அரசியல் வாதிகள், இதனை, நம் தன்மான உயிர்ப் பிரச்சினையாக எடுத்துக் கொண்டு இருந்திருப்பார்களானால், இந்த நடவடிக்கையினையும் பிரச்சினை ஆக்கி இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு மக்கள் நலன் பெரிதல்ல; தமிழகத்தின் தன்மானம் பெரிதல்ல; அவர்களைப் பொறுத்த மட்டில், எப்படியாவது இந்த அரசையும், என்னையும் குறை கூறி, அரசியல் ஆதாயம் தேட வேண்டும் என்பது தான் முக்கிய நோக்கம்; குறிக்கோள்; இவையன்றி வேறு எதுவும் இல்லை. அவர்கள் என் போராட்டத்தை விமர்சனம் செய்வதை விடுத்து, மத்திய அரசை வற்புறுத்தி, காவிரியில் தண்ணீர் பெற முயற்சித்திருக்க வேண்டும். போராடக் கூட முன் வந்திருக்க வேண்டும். காலை வாரி விடக் காலம் பார்த்துக் கொண்டிருப்பவர்களை எல்லாம், கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், தமிழகத்தின் உரிமைக் குரலை உணர்த்திடும் வகையில் தான், என் போராட்டத்தைத் தொடங்கினேன்.

தமிழகத்தையே ஓரணியில் திரட்டிய, மகத்தான அப்போராட்டத்திற்குப் பின்னர் தான்; சட்டப்படியும் நியாயப்படியும், ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய மத்திய அரசு, முதன் முறையாக, நடுவர் மன்றத் தீர்ப்பின் இடைக்கால ஆணையை நிறைவேற்றும் வகையில், கண்காணிப்புக் குழுவினையும், செயலாக்கக் குழுவினையும் நியமிக்க ஒப்புக்கொண்டது.





**நா**ட்டு விடுதலைக்காகச் சிறையில் வாடியவர்கள், தீவுகளுக்குத் துரத்தப்பட்டவர்கள் மண்டை பிளக்கப்பட்டவர்கள், குடும்பச் சுகத்தை இழந்தவர்கள், தடியடியால் இறந்த குமரன், தூக்குமேடை ஏறிய பகத்சிங், சொத்தைப் பறிகொடுத்த சிதம்பரம் பிள்ளை போன்ற வீரத் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்த வேண்டும். அவர்கள் சிந்திய இரத்தமும், கண்ணீரும் நமது வீர வணக்கத்திற்கு உரியன. அவர்கள் நமக்கு வழிகாட்டிகள்.

இருபதாண்டுக் காலமாகப் பேசிப் பேசியும்; முறையிட்டு முறையிட்டும்; பல நேரங்களில் போராடிப் போராடியும்; தீர்வு காண முடியாத காவிரிப் பிரச்சினைக்கு, எனது அறப்போராட்டம், ஒரு புதிய பாதையை வகுத்துக் கொடுத்துள்ளது என்றே கருதுகிறேன்.

நாம் பெற்றுள்ள வெற்றியின் பலனை அடைகிற வகையில்; காவிரியில் தண்ணீர் திறந்துவிடச் செய்வது வரையிலான, அனைத்து நடவடிக்கைகளிலும், சற்றும் தயக்கம் காட்டாமல், தன்னை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய கடமையினை, மத்திய அரசு உடனடியாகச் செய்திட வேண்டும் என்பது, எனது சுதந்திரத் தினக் கோரிக்கை மட்டுமல்ல; இது தமிழகத்தின் ஒட்டு மொத்த உரிமைக் குரல். இந்தக் குரல் மத்திய அரசைத் தட்டி எழுப்பிட வேண்டும். இன்னும் தாமதம் என்பது, சுதந்திரப் பூமியின் அமைதிப் பூங்காவாகத் திகழும், ஒரு பகுதி மக்களின் ஜீவாதார உரிமை, கட்சி பேதங்களின் அடிப்படையில், நியாயமான காரணங்கள் இன்றி, புறக்கணிக்கப்படுவதாக ஆகிவிடும் என்பதை, எனது எச்சரிக்கையாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

என் அறப் போராட்டத்தைத் தொடர்ந்து, அமைக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்ட, கண்காணிப்புக் குழுவும், செயலாக்கக் குழுவும், இன்னும் அமைக்கப்படவில்லை. இதனைச் சுட்டிக் காட்டியும், உடனடியாகக் காவிரியில் தண்ணீர் திறந்து விடக் கோரியும், பிரதமருக்கு நேரடிக் கடிதம் ஒன்று எழுதியுள்ளேன். ஆனால், அக்கடிதத்திற்கு, இதுகாறும் பதில் ஏதும் இல்லை; உறுதியளித்த வண்ணம், எவ்வித நடவடிக்கையும் இல்லை.

மத்திய அரசு இப்பிரச்சின்னையில், தமிழக மக்களின் நலனை, முற்றிலும் புறக்கணிக்கும் போக்கிலேயே, தொடர்ந்து செயல்படுகிறது; தனிப்பட்ட முறையில், எனக்கெதிரான போக்கில் நடந்துகொள்வதாக நினைத்து, நாட்டின் கூட்டாட்சி முறைத் தத்துவத்திற்கே, கேடு விளைவிக்கும் முயற்சியில், மத்திய அரசே ஈடுகிறது, என்றே கருத வேண்டியுள்ளது.

''பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்போம்'' என்ற முழக்கத்தை, உள்ளபூர்வமாக ஏற்றுக் கொண்டவர்களாக இருந்தால், வேற்றுமையில் ஒற்றுமை கண்டு, நாம் கட்டிக் காத்துவரும் ஒருமைப்பாட்டு உணர்வுகளுக்குக் குந்தகம் உண்டாக்கும் முயற்சிகளில் ஈடுபட மாட்டார்கள்.

தனது பொறுப்பினைத் தட்டிக் கழித்து, தமிழக மக்களின் நலனில், ஒரு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வரும், மத்திய அரசின் இப்போக்கு, ஒட்டு மொத்த இந்திய நாட்டின் ஒருமைப் பாட்டுக்கே, குந்தகம் உண்டாக்கி விடுமோ, என்ற அச்சத்தின் காரணமாகத் தான், எனது இந்த எச்சரிக்கையினை, இந்த நேரத்தில் தெரிவிப்பது, எனது கடமை எனக் கருதுகிறேன்.

**கச்சத் தீவு**

உணர்வுப்பூர்வமான இன்னொரு பிரச்சினையினையும், எனது முதல் சுதந்திர நாள் கொடியேற்று விழா உரையின் போது, தெரிவித்திருந்தேன். ஆழகடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும், ராமேஸ்வரம் பகுதி மீனவர்களுக்கு, இழைக்கப்படும் இன்னல்களைக் களைய ஒரே வழி, உடனடியாகக் கச்சத் தீவில், நமக்குள்ள உரிமையை மீட்பது தான் என, அன்றைக்கே குறிப்பிட்டிருந்தேன். தமிழகச் சட்டமன்றத்திலும், ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. பல நாள் கழித்து, பிரதமரிடமிருந்து எனக்கு வந்த பதிலில், நமது கோரிக்கை, விரிவான பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நமது மீனவச் சகோதரர்கள், மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்று, இலங்கை ராணுவத்தின் தொல்லைக்கு ஆளாகாமல், அபாயம் இன்றித் திரும்பி வர முடியுமா, என்ற நிச்சயமற்ற தன்மை இருக்கும்போது, மத்திய அரசு விரைந்தும், அழுத்தமாகவும் இது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே, எனது 'சுதந்திரத் தின வற்புறுத்தல்' எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள்**

இம்மாதம் 8-ஆம் தேதியன்று, சென்னையில் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் நிகழ்ந்த, குண்டு வெடிப்புச் சம்பவத்தில், 11 பேர் இறந்து போனது, ஒரு சோகமான, துயரமான நிகழ்ச்சியாகும். இத்தகைய சூழ்நிலையில், தமிழக அரசும், காவல்துறையும் தங்களுடைய கடமைகளை, முழுமையுடனும், விரைந்தும் ஆற்றும் வகையில், நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதிலும் அரசியல் ஆதாயம் தேடுவதற்கென்றே, பொறுப்பற்ற சிலர், வேண்டாத பல அறிக்கைகளைக் கொடுத்து வருகிறார்கள்.

அமைதிப் பூங்காவாகத் திகழும் தமிழகத்தில், வன்முறையைத் தூண்டிவிட்டு, ஒரு வன்முறைக் கலாச்சாரத்தை, தங்கள் சொந்த நலனுக்காக உருவாக்க, ஒரு சில தீய சக்திகள், திட்டமிட்டு முயன்றுகொண்டு வருகின்றன. வன்முறையும், பயங்கரவாதமும், இந்தியாவின் பல பகுதிகளில், தலைவிரித்தாடும் சூழ்நிலையிலும், தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாக ஒற்றுமையை வலியுறுத்தும் மாநிலமாக, நல்லெண்ணத்தை உருவாக்கும் நாட்டின் ஒரு அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. பொது அமைதிக்குப் பங்கம் விளைவித்து, அரசியல் ஆதாயம் தேடுபவர்கள், யாராக இருந்தாலும், அவர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில், யார் ஈடுபட்டு இருந்தாலும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, தண்டனை வழங்க, நான் ஒரு போதும் தயங்க மாட்டேன்.

இந்த வழக்கை, மத்திய புலனாய்வுத் துறை, C.B.I. எடுத்துக் கொண்டு, மேல் விசாரணை மேற்கொள்ள வேண்டும், என்று நான் குறிப்பிட்டது, ஏதோ தமிழக காவல் துறையினரால், இந்தப் பணியைச் செய்ய முடியாததனால் கூறியதாக, சிலர் குற்றம் காண்கிறார்கள். என் தலைமையின் கீழ் இயங்கும், தமிழகக் காவல் துறை, திறமையுடனும் ஆற்றலுடனும் செயல்படத் தக்க, ஒரு தலை சிறந்த காவல் படை என்பதை, இந்திய நாடே

ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம், பல மாநிலங்கள் தொடர்புடைய பிரச்சினை களை மட்டுமல்லாது, அயல் நாடுகள் தொடர்புடைய பிரச்சினைகளையும், உள் அடக்கியதாகக் கருதப்படுவதால் தான். இதை மத்திய புலனாய்வுத் துறை, விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தினேன். பொது வாக எந்த ஒரு வழக்கிலும், ஒரு மாநிலம் மட்டுமல்லாது. பிற மாநிலங்களின் தொடர்பும், அயல்நாடுகளின் தொடர்பும் இருக்குமானால், அவ்வழக்கை சி.பி.ஐ. விசாரிப்பது, நடைமுறையில் இருந்து வரும் ஒரு வழக்கமாகும். விசாரணை துரிதமாகவும், விரைவாகவும் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான், எடுத்த உடனேயே இந்த வழக்கை, காவல்துறை CID குற்றப்பிரிவிற்கு, அதாவது Crime Branch C.I.D.-க்கு, மாற்ற ஆணை இட்டிருந்தேன். எதிலும் கட்சி அரசிய லைக் கலப்படம் செய்யும் சிலர், இதை யும் குறை கூறியுள்ளார்கள்.

### குற்றவாளிகளைக் கண்டுபிடித்தே தீருவோம்!

டெல்லியிலிருந்து ஒரு அமைச்சர் வந்த பின்பு தான், தமிழக அரசும், தமிழகக் காவல் துறையும், நடடிவக்கை எடுக்க ஆரம்பித்தது, என்பது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உண்டாக்க வேண்டும் என்றே, ஒரு மத்திய அமைச்ச ரைச் சென்னைக்கு அனுப்பி, அரசியல் ஆதாயம் தேட முயற்சி செய்திருக் கிறார்கள். மத்திய அமைச்சர் ஒருவர் வந்து தான், இந்தத் தமிழக அரசையும் காவல் துறையையும் செயல்பட வைக்க வேண்டும் என்ற நிலை இங்கே இல்லை. அவர்கள் வந்தாலும் வராவிட்டாலும், பொறுப்புடனும், கடமையுணர்வுடனும், செயலாற்றும் திறமையும் ஆற்றலும், இந்தத் தமிழக அரசுக்கும், காவல் துறைக் கும் நிறையவே உண்டு.

எங்கள் கடமைகளை எவ்வாறு செய்ய வேண்டும் என்று யாரும் இந்த அரசுக் கும், காவல் துறைக்கும் புதிதாகப் பாடம் கற்றுத் தர வேண்டிய அவசியம் இல்லை. மத்திய அமைச்சர் ஒருவர் இங்கே வந்து, ''புலனாய்வுப் பணிகளைத் துரிதமாகச் செய்யுங்கள்'' என்று, நம் காவல் துறை யினருக்கு அறிவுறுத்துகிறார். இது தேவையா? இவர் இவ்வளவு தூரம் சென்னைக்கு வந்து இதைச் சொல்லா விட்டால், நம் தமிழகக் காவல் துறை யினர் அப்பணியைத் துரிதமாகச் செய்ய மாட்டார்களா? அதே மத்திய அமைச்ச ரிடம், ''இந்த வழக்கு விசாரணையை

## விடுதலை நாள் விழா

இந்தியாவின் 47-வது விடுதலை நாள் விழா சென்னைக் கோட்டைக் கொத்தளத்தில் 15.8.'93 அன்று கொண்டாடப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தை வந்தடைந்த போது அங்கே குழுமியிருந்தோர் வான் பிளக்கும் வாழ்த்தொலி வழங்கி அவரை மகிழ்ச்சியோடு வர வேற்றனர். பள்ளி மாணவ, மாணவியர் சீருடை களுடன் சாலையில் அணிவகுத்து நின்று அழகுக்கு அணி சேர்த்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், இ.ஆ.ப., அவர்கள் முப்படை அதிகாரிகள், காவல்துறை உயர்அதிகாரிகள் சென்னை நகர செரீப் திரு. சுரேஷ் கிருஷ்ணா ஆகியோரை அறிமுகம் செய்து வைத்தார்.

காவல்துறையினரின் அணிவகுப்பு மரி யாதையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

சரியாக, காலை 8.30 மணிக்குக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத் தார். தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்து பூமாரி பொழிய, தேசிய கீதம் இசைக்கப்பட்டது. தேசியக் கொடிக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வணக்கம் செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கோட்டைக் கொத்தளத்தில் சுதந்திர தின விழாச் சிறப்புரை ஆற்றினார்.

சிறப்புரை ஆற்றிய பின்பு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் ஊனமுற்ற குழந்தை களுக்கு இனிப்பும், காலைச் சிற்றுண்டியும் வழங் கினார்.

உடல் ஊனமுற்றோர் நலம் மற்றும் மகளிர் நலம் போன்ற துறைகளில் சிறப்பாகப் பணி புரிந்ததற்காக, மனநலம் குன்றியோர் கல்வி மற்றும் மறுவாழ்வு மையமான பாத்வே (Pathway) விற்கு 1992-1993க்கான முதல்வர் விருதினை யும், தொட்டில் குழந்தைத் திட்டத்தின்கீழ், பெண் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் பெண் சிசு வதைத் தடுப்பு போன்ற சீரிய பணி புரிந்ததற்காக, கர்ண பிரயாக் மற்றும் எஸ்.ஓ.எஸ். குழந்தைகள் கிராம சாட்நாத் இல்லத்திற்கு (Karna Prayag and SOS Children's Village Chatnath Homes) விருதினை யும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர் பெரு மக்கள், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. கே.ஏ. சுவாமி, முப்படை அதி காரிகள், காவல்துறை அதிகாரிகள், உயர் அதிகாரிகள், விடுதலைப் போராட்ட வீரர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் முதலானவர்கள் விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்தனர்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
கரு. சண்முகசுந்தரம்



மத்தியப் புலனாய்வுத் துறைக்கு, C.B.I.-க்கு எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று நான் கோரினால், உடனே அவர், ''தமிழகக் காவல் துறையினர் மிகவும் திறமை வாய்ந்தவர்கள். அவர்களாலேயே இந்த வழக்கு விசாரணையை நடத்த முடியும்'' என்கிறார். நான் தலைமை ஏற்றிருக்கும் தமிழகக் காவல் துறையினரின் திறமை பற்றி, அந்த மத்திய அமைச்சர் சொல்லித் தான் நாம் தெரிந்து கொள்ள வேண்டுமா? தமிழகக் காவல் துறையின் மீது, இந்த அரசிற்கும் எனக்கும், முழு நம்பிக்கை உண்டு. இதுவரை அவர்கள் எடுத்த எந்தக் காரியத்திலும், வெற்றி காணாமல் விட்டதில்லை. எனவே, இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவத்திலும், குற்றவாளிகளை, தமிழகக் காவல்துறை நிச்சயம் கண்டுபிடித்தே தீரும்.

## இடைத்தேர்தல்கள்

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகமாகி, பயங்கரவாதம் தலை தூக்கியபோது, நான் என் உயிரைத் துச்சமாக மதித்து, அவர்களை அடக்கினேன், ஒடுக்கினேன். என் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், மக்கள் நலனுக்காக, நான் எவ்வித அச்சமும் இன்றி, செயலாற்றி வருவதை, இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். ஒரு ஜனநாயக அமைப்பில், குடிமக்களின் அடிப்படை உரிமைகளில், ஒன்றாகக் கருதப்படுவது, எவ்விதத் தடங்கலும் தலையீடுமின்றித், தேர்தல்களில் பங்குபெறும் உரிமையாகும். அண்மையில், நிகழ்ந்த, இடைத் தேர்தல்கள் பற்றிய குளறுபடிகள், ஒரு வலுவான ஜனநாயக அமைப்பெனக் கருதப்பட்டு வந்துள்ள, இந்திய நாட்டின் ஆட்சி அமைப்பு முறையின், அடித்தளத்தையே தகர்க்கும் முயற்சி, எனக் கருத வேண்டியுள்ளது.

எல்லா மாநில இடைத் தேர்தல்களையும், ஒட்டு மொத்தமாக ஒத்தி வைப்பதாக அறிவித்தவுடன், நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும், நீதி மன்றங்களும், அம்முடிவுக்கு எதிராகக் கருத்துக்களைத் தெரிவித்த பின்னரும் கூட, உரிய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாமல், பின்னர், நீதிமன்றங்களின் நடவடிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும், தவிர்த்துக் கொள்ளும் நோக்கத்துடன், தமிழ்நாட்டைத் தவிர, ஏனைய மாநிலங்கள் அனைத்திலும், வரும் செப்டம்பர் மாதம் 10-ஆம் தேதிக்குள், இடைத் தேர்தல்கள் நடைபெறும் என அறிவித்திருக்க வைப்பதும், மத்திய ஆட்சியினர், ஜனநாயகத்திற்கு எதிராகத் தொடுத்திருக்கும் பாணம், என்றே கருத வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டு மக்களுக்குச் செய்த துரோகங்களுக்காக, அம்மக்கள் தங்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்திடுவார்கள், என்ற அச்சத்தோடிருப்பவர்களை, காத்திடும் ஒரே நோக்கத்தோடு, ஜனநாயகத்தின் அடித்தளத்தையே, அசைத்திடும் முயற்சியில் ஈடுபடுவோர், எவ்வளவு பெரிய இடத்தில் இருப்பவர்களாக இருந்தாலும், அவர்களின் இத்தகைய செயலைக் கண்டிக்க, நாட்டின் அனைத்துத் தரப்பு மக்களும், முன் வர வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இடைத் தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால், எனக்கோ அல்லது எங்கள் ஆட்சிக்கோ, எவ்வகையிலும் தனிப்பட்ட இழப்போ, பாதிப்போ ஏற்படப் போவதில்லை. ஆனால், ''ஒரு வலுவான ஜனநாயக அமைப்புள்ள நாடு இந்தியா'', என உலக அரங்கில், நாம் பெற்று வந்துள்ள நற்சான்று, பறிபோய் விடுமோ என்ற ஆதங்கத்தாலும், மத்திய ஆட்சியும், தலைமைத் தேர்தல் கமிஷனும், இந்த இடைத் தேர்தல்களை நடத்தும் விஷயத்தில், செய்துள்ள பித்தலாட்டங்களைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

எந்த ஒரு அரசியல் கட்சியும், பலம் பொருந்தியதாகவும், சக்தி வாய்ந்ததாகவும், மக்கள் ஆதரவைப் பெற்றதாகவும் இருந்தால் தான், அதனை நேரடியாக அரசியல் களத்தில் சந்தித்து மோதிடச் சக்தியற்றவர்கள், இவ்வாறு குறுக்கு வழியில் தொல்லை கொடுப்பதையும் இடையூறு செய்வதையும், தங்கள் வாடிக்கையாக வைத்துக் கொள்வர். ஆனால், இவற்றையே தனது அணுகுமுறையாக, ஓர் நாட்டின் ஆட்சி கொண்டிருக்குமேயானால், ஒரு நல்ல கூட்டாட்சி அமைப்பில் இயங்கும், ஜனநாயக நாடென்று, நம்மை யார் ஏற்றுக் கொள்வார்கள்?

இந்த அச்சத்தின் காரணமாக எழுந்ததே, இந்த எனது வெளிப்பாடாகும். அது தவிர, இவர்கள் தரும் இன்னல்

களுக்கோ, இடையூறுகளுக்கோ, நாட்டு மக்களின் நல்லாதரவைப் பெற்றுள்ள, என் தலைமையிலான இந்த அரசு, துளியும் அஞ்சப் போவதில்லை. தமிழக மக்களுக்காகவும், ஜனநாயக உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும், எத்தனை இன்னல்கள் வந்தாலும், அவற்றை ஏற்கத் தயாராக இருக்கிறேன்.

### சுதந்திரக் காற்றின் சுகம்!

பொறுப்பற்ற சில அரசியல்வாதிகள் ஏற்படுத்தும் சலசலப்புக்கு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வாரிசு ஆன நான், என்றும் அஞ்சமாட்டேன் என்று, இந்த விடுதலை நாளில் உறுதி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு நம்முடைய உயிர்ப் பிரச்சினையிலும், உரிமைப் பிரச்சினையிலும், எதற்கும் அஞ்சாமல் குரல் கொடுத்து வந்துள்ள உங்களது அரசு; சுதந்திரக் காற்றின் சுகத்தை, நாட்டு மக்கள் அனைவரும் அனுபவித்திடும் வகையில், பலவேறு முற்போக்கான, மனிதாபிமான மிக்க வளர்ச்சிப் பணிகளையும், விரைந்து செய்து வருகிறது என்பதைக் குறிப்பிட வேண்டியது, எனது இன்றியமையாக் கடமை ஆகும்.

### குடிநீர்ப் பிரச்சினை

சென்னை மாநகரில் குடிநீர்ப் பிரச்சினை, ஒவ்வொரு ஆண்டும், பொது மக்களை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கி வருகிறது. பருவ மழை அடிக்கடி பொய்த்து வருவதாலும், நிலத்தடி நீர் மிகவும் குறைந்துவிட்ட காரணத்தாலும், மக்கள் தொகைப் பெருக்கத்தாலும், சென்னை மாநகருக்கு நாள்தோறும் தேவைப்படும், 55 மில்லியன் காலன் குடிநீர் கிடைப்பது, அரிதாகவே உள்ளது.

இந்த ஆண்டு, குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக, உங்கள் அரசு மேற்கொண்ட போர்கால நடவடிக்கைகளால் தான், ஓரளவிற்கேனும், மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்ய முடிந்தது. எப்படியேனும் வருங்காலங்களில், சென்னை நகரக் குடிநீர்ப் பிரச்சினைக்கு, ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்ற உறுதியை மேற்கொண்டுள்ளேன். அதை நிறைவேற்றுகிற வகையில், எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன்.

தெலுங்கு கங்கைத் திட்டம் மூலம், ஆந்திர மாநிலத்திலிருந்து, கிருஷ்ணா நதி நீரை, சென்னைக்குக் கொண்டு வருவதற்கான பணிகளை, தமிழக அரசு முழு முயற்சியுடன் செயல்படுத்திய போதிலும்,



இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த இலட்சக்கணக்கான தியாகிகளுக்கு இந்நாளில் நமது அஞ்சலியைக் காணிக்கை ஆக்குவது நமது நீங்காக் கடமை ஆகும்.

வேறு ஒரு மாநிலத்தின் பங்கும் அதில் இருப்பதால், காலதாமதம் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. மேலும், வேகமாக வளர்ச்சி அடைந்து வரும், சென்னை மாநகரத்தின் எதிர்காலக் குடிநீர்த் தேவையை, ஒரு திட்டத்தின் மூலம் மட்டுமே, நிறைவு செய்ய இயலாது. எனவே நம் மாநிலத்திலேயே இருக்கின்ற, ஒரு நீர் ஆதாரத்திலிருந்தே, குடிநீரைச் சென்னைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணத்துடன், வீராணம் ஏரியிலிருந்து நீர் கொண்டு வரும் புதியதொரு திட்டத்தைப் பரிசீலித்தோம். ஏறத்தாழ இரண்டு மாதங்களுக்கு முன்பு, இதற்கான திட்ட அறிக்கையை, உடனடியாகத் தயாரிக்க நான் ஆணையிட்டேன். தீர்க்கமான ஆய்வுக்குப் பின்பு, 464 கோடி ரூபாய் செலவில், பழைய வீராணம் திட்டம் போல் அல்லாது, ''புதிய வீராணம் குடிநீர்த் திட்டமாக'', தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் நுட்பத்தையும், தரமுள்ள குழாய்களையும் பயன்படுத்தி, இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம், சென்னை மாநகருக்கு, தினமும் 40 மில்லியன் காலன் குடிநீர் கிடைக்கும்.

### உலக வங்கியின் நிதி உதவி!

464 கோடி ரூபாய் நிதி ஆதாரங்களை, எவ்வாறு திரட்டுவது என்பது, இந்த அரசுக்கு ஒரு பெரிய சவாலாக இருந்தது. பொதுமக்களுக்கு, மிக முக்கியமாகத் தேவைப்படும் இந்தத் திட்டத்திற்கு, உலக வங்கியின் நிதி உதவியைப் பெறுவது, என முடிவெடுத்து, அதற்கான பேச்சுவார்த்தைகளை, உலக வங்கி அலுவலர்களிடம், தமிழக அரசு அதிகாரிகள் நடத்தினார்கள்.

குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், என்ற நமது உள்ளக்கிடக்கையை, நன்கு புரிந்து கொண்ட உலக வங்கி அதிகாரிகள், இத்திட்டத்தை நன்கு பரிசீலித்து, ஏற்றுக்கொண்டு, இதற்கு நிதி உதவி வழங்க, சமீபத்தில் முடிவெடுத்துள்ளனர் என்ற மகிழ்ச்சியான செய்தியை, உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

எத்தனை இன்னல்கள் வந்தாலும், எத்தனை இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டியிருந்தாலும், இந்தப் புதிய வீராணம் குடிநீர்த் திட்டம், வரும் 1994-ஆம் ஆண்டு, ஜனவரி மாதத்தில் தொடங்கப்படும் என்பதையும், 1995-ஆம் ஆண்டு, ஜூன் மாதத்திற்குள் முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதையும், இந்தச் சுதந்திரத் தின நன்னாளில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தொழில் வளர்ச்சி

விரைந்து முன்னேற்றம் காண வேண்டும், என்ற நமது நோக்கத்திற்கு, நாட்டில் மிகுந்திருக்கும் ஏழ்மையும், வறுமையும், மிகப் பெரிய தடையாக இருப்பதை உணர்ந்து, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு, முன்னுரிமை கொடுத்து வருகிறோம்.

தொழில் துறைத் தேக்கமும், அதன் காரணமாக உருவாகி வரும் வேலை இல்லாத் திண்டாட்டமும், நமது பொருளாதார வளர்ச்சியின் அடித்தளத்தையே, தகர்த்தெறிந்து விடும் என்ற உண்மையை உணர்ந்து, தொழில் துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம்.

நாட்டின் பிரபலமான தொழில் அதிபர்கள் அனைவரையும், நேரில் அழைத்து, அவர்களில், உடனடியாகத் தொழில் தொடங்க முன் வந்தவர்களுக்கு, உடனடி அனுமதியினை அன்றைக்கே வழங்கியதால் மட்டும், 20,000 கோடி ரூபாய்க்கான தொழில்கள், தமிழகத்தில் உருவாகிட, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவை மட்டுமின்றி, நடுத்தர மற்றும் சிறுதொழில்களின் விரைவான வளர்ச்சியில், இந்த அரசு, தனிக் கவனம் செலுத்தி, ஆக்கமும் கொடுத்து வருகின்றது.

### வியத்தகு வேளாண் உற்பத்தி!

விவசாயத் துறையில், பாதகமான பலவேறு இயற்கைச் சூழ்நிலைகள், கடந்த இரண்டாண்டுகளாக இருந்தும்கூட, இந்த ஆண்டு மட்டும், 1 கோடியே ஒரு இலட்சம் மெட்ரிக் டன், உணவு தானிய உற்பத்தி செய்து, இதுவரை இல்லாத ஒரு



''பெண்ணிற்கு மதிப்புக் கொடுங்கள்; உரிமை கொடுங்கள்; வணக்கம் செலுத்துங்கள். பெண்ணை மதித்துப் போற்றலே நாகரிகம், அவளைக் கட்டுப்படுத்தல் - அடிமைப்படுத்தல் - கொடுமையாக நடத்தல் - அநாகரிகம்''.

-தமிழ்த்தென்றல் திரு.வி.க.

சாதனையை நிகழ்த்தியுள்ளோம்.

வியத்தகு உற்பத்தியில் தங்களை ஈடு படுத்திக் கொண்டுள்ள, வேளாண் பெருமக்களுக்குத் துணையிருக்கும் வகையில்தான், விவசாய மோட்டார் பம்பு செட்டுகளுக்கான மின்சாரத்தைத் தொடர்ந்து இலவசமாகவே கொடுத்து வருகிறோம். அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் என்பது, தமிழகத்தில் மட்டுமே, தொடர்ந்து இருந்து வரும் தனிச் சலுகை என்பது, குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளன்று கூட, ஒரு புத்தாடை வாங்கி அணிவதற்கான சக்தி இல்லாதவர்களாக, ஏழ்மையிலும் வறுமையிலும் வாடும், விவசாயத் தொழிலாளர்களின் நிலை அறிந்து, கடந்த இரண்டு ஆண்டுகளாக, பொங்கல் திருநாளின்போது, ஒவ்வொரு முறையும் 45 கோடி ரூபாய் செலவில், 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு, இலவச வேட்டி சேலைகள் வழங்கி, இது ஏழைகளின் துயரத்தை துடைக்கும், மக்கள் அரசு என்ற பெயர் எடுத்துள்ளோம்.

மின்வெட்டே இல்லாத மாநிலம் தமிழகம், எனப்பெயர் எடுக்கும் அளவுக்கு, மின் உற்பத்தியிலும், விநியோகத்திலும், சாதனை நிகழ்த்திக் காட்டியுள்ளோம்.

சமுதாயத்தின் அடித்தளத்தில், ஒடுக்கப்பட்டுக் கிடந்த, தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களின் உயர்வுக்கு, வெறும் சட்டங்களும், கண்துடைப்பான திட்ட அறிவிப்புக்களும் மட்டும், கை கொடுக்காது என்பதை உணர்ந்து, அவர்களுக்கெனப் பிரத்யேகமான, ஆக்கபூர்வமான, பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.

## சிறப்புத் தன்னிறைவுப் பணிகள்!

'இந்தியா கிராமங்களில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது', என்ற அண்ணல் காந்தி அடிகளின் கனவை, நனவாக்கும் இலட்சிய உணர்வுடன், தமிழகத்தின் பட்டிதொட்டிகள் அனைத்தும், நகரங்களில் கிடைக்கும் வசதிகளை எல்லாம், பெற்றிடச் செய்யும் இலட்சிய உணர்வுடன், பல்வேறு சிறப்புத் தன்னிறைவுப் பணிகளை, உங்கள் அரசு நிறைவேற்றி வருகிறது.

இவை மட்டுமல்லாது, சமுதாயத்தின் நலிந்த பிரிவினரான, நெசவாளர்கள், மீனவர்கள், பனை ஏறும் தொழிலாளிகள், மூட்டை சுமப்போர், கூலி வேலை செய்வோர், கல்லுடைப்போர், கட்டடத் தொழிலாளர்கள், கூடை முடைவோர் என்றெல்லாம் உள்ள, அமைப்பு ரீதியில் இல்லாத Unorganised Sector தொழிலாளர்கள் வாழ்வில் எல்லாம், ஒளியேற்றும் பல சிறப்புத் திட்டங்களை எல்லாம், உங்கள் சகோதரி ஆளும் இந்த மாநிலம், மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாக இருந்து, செயல்படுத்தி வருகிறது.

பின்னி மில் திறக்கப்பட்டதும்; திறக்கப்பட்டு மீண்டும் மூடப்பட்ட Standard Motors நிறுவனத்தை, மீண்டும் முயற்சித்து, இம்மாதம் முதல் திறக்கச் செய்ததும், இந்த அரசு, அமைப்பு ரீதியில், Organised Sector-ல் இயங்கும் தொழிலாளர்கள் நலனிலும், அதிக அக்கறை கொண்டுள்ளது, என்பதற்குரிய எடுத்துக்காட்டுகளாகும்.

இம்மண்ணின் உயர்வுக்கும், மக்களின் நன்மைக்கும் என்றே, இயங்கி வரும் உங்கள் சகோதரியின் தலைமையிலான நல்லரசு, ஆற்றிவரும் சிலபல பணிகளை மட்டுமே, கோடிட்டுக் காட்டினேன்.

## நல்லரசு

இன்னும் கடந்த இரண்டாண்டுகளாக, நாங்கள் திட்டமிட்டுப் பணியாற்றி ஈட்டியுள்ள சாதனைகள், எண்ணற்றவை என்றே சொல்ல வேண்டும். ''அனைவர்க்கும் அவரவர் இருப்பிடத்திலேயே சென்று, மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை'' என்பன போன்ற திட்டங்களும்; பெண் சிசுக் கொலைகளைத் தடுத்து நிறுத்திட, நாங்கள் தொடங்கிய, ''அரசுத் தொட்டில் குழந்தைகள் திட்டமும்'', அனைத்திந்திய அளவில், உலகளாவிய பல அமைப்புக்களாலும், பாராட்டப் பெற்றுள்ளன.

நாடு சுதந்திரம் அடைந்ததன் பலன், முழுமையாக நாட்டு மக்களைச் சென்றடைய வேண்டும், என்ற எங்களின் அடிப்படை இலட்சியமும், உணர்வும் தான், எங்களது இத்தகைய தீவிரப் பணிகளுக்கெல்லாம் அடித்தளமாகும்.

''ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டு'' மகிழ்ந்த பேரறிஞர் அண்ணா, எல்லோராலும் ''எங்கள் வீட்டுப் பிள்ளை'' என ஏற்றுக்கொள்ளப்பட்ட, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரின் அடிச்சுவட்டில், துளியும் பிறழாது நடைபோடும் நல்லரசாகவே, தொடர்ந்து எங்களது பயணம் இருக்கும், என்ற உறுதியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

## தொய்வின்றி நம் பணியைத் தொடர்வோம்!

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திடுவது, இன்றைய காலகட்டத்தில், நம் தலையாய கடமை என்பதிலும், உங்கள் அரசு கண்ணும் கருத்துமாக உள்ளது. நம் சுதந்திரத்தையும், நாட்டின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமை உணர்வினையும், இன்றைக்குச் சவாலுக்கு அழைத்துக் கொண்டிருப்பன, நாட்டின் பல பகுதிகளிலும் தலைதூக்கி வரும், ஜாதி மதச் சச்சரவுகளும், தீவிரவாத அமைப்புக்கள் சிலவற்றின், அராஜக நடவடிக்கைகளும் ஆகும்.

ஜாதி மதச் சண்டைகளோ, தீவிரவாதிகள் நடவடிக்கைகளோ, தமிழகத்தில் தலை எடுக்கவிடாது, தடுத்து நிறுத்தியுள்ளதோடு, அமைதிப் பூங்காவாகவே, தமிழகத்தை நிலைநிறுத்தி வருகிறோம்.

இவ்வாறு பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதிலும், முன்னிலை வகித்து வரும் தமிழகத்தின் குரலாக, அண்ணல் காந்தியடிகளும், அவர் தலைமையில் எண்ணற்ற தியாக சீலர்களும், பெற்றுத் தந்த சுதந்திரத் திருநாட்டின் பெயுரையும் புகழையும் என்றென்றும் நிலைநாட்டுவோம், நிமிர்ந்து நிற்போம் எனச் சூளுரைத்து,

''பாருக்குள்ளே நல்ல நாடு-
நம் பாரத மணித் திருநாடு''-

என்ற நிலையை அடையத் தொய்வின்றி நம் பணியைத் தொடர்வோம் எனக் கூறி, அனைவர்க்கும் என் விடுதலை நாள் வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.



# சென்னை நகரில் செயற்கை மழை

**மா**ண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 12.8.93 அன்று சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவது குறித்து விரிவாக ஆய்வு செய்தார்.

அமெரிக்கத் தொழில்நுட்ப உதவியுடன் சென்னையில் செயற்கை மழை உண்டாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இதற்காக ஆகும் செலவு ரூ.1.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னை நகர மக்களுக்குத் தங்குதடையின்றித் தாமதமில்லாமல் குடிநீர் வழங்கவேண்டுமென்றும், எவ்வளவு செலவு ஏற்பட்டாலும் சென்னை நகர மக்களுக்கு குடிநீர் எவ்விதத் தடங்கலுமின்றி வழங்கவேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

தற்போது சென்னை நகருக்கு 410 லாரிகள் மூலம் நெய்வேலியிலிருந்து தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேலும் அதிக அளவில் லாரிகள் மூலம் குடிநீர் கொண்டுவர ஆணையிட்டார். அதன்படி 1000 லாரிகள் மூலம் நெய்வேலியிலிருந்து குடிநீர் கொண்டுவந்து வழங்கப்படும்.

இந்த ஆய்வுக்கூட்டம் சுமார் 1 மணி நேரம் நடந்தது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ்.டி. சோமசுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கட்ராமன், மாநில காவல் துறைத்தலைவர் திரு. எஸ். ஸ்ரீபால், சென்னை நகரக் காவல்துறை ஆணையாளர் திரு. ஆர். ராஜகோபாலன், சென்னைக் குடிநீர் வாரியத்தலைவர் திரு. பி.சி. சிரியாக், நிர்வாக இயக்குநர் திரு. சீனிவாசன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 1.3.1993**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 5.25 % w.e.f. 1.7.93 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 11.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 11.00% |
| | For 1 YEAR and above | 11.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# நெல்லை மாவட்ட சுதந்திரச் சுடர் மணிகள்

அன்னை நாடு அடிமைப்பட்டுக் கிடந்த காலம்!

அண்ணல் காந்தியடிகள் தலைமையில், ஆர்த்தெழுந்தனர் ஆயிரமாயிரம் தொண்டர்கள்!

சுதந்திரத் தீ கொழுந்துவிட்டு எரிந்தது. அந்தத் தீயின் தகிப்பிலே தாக்குப் பிடிக்க முடியாது என்றுணர்ந்த வெள்ளையர் வெருண்டோடினர்.

ஆனந்த சுதந்திரம் மலர்ந்தது!

விடுதலைப் போரிலே வீர முழக்கம் செய்த தொண்டர்களின் அகமும் முகமும் மலர்ந்தது!

அந்த வேள்வியிலே...

அடிமை விலங்கொடிக்க அல்லல்பட்டோர் - உடல் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்தவர் பல்லாயிரவர்!

அன்றைய புனிதப் போரில் பங்கு கொண்டு, புகழ்பெற்று விளங்கும் சுதந்திரத் தியாகிகள் பலர் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருவது நமக்கெல்லாம் பெருமை தரும் ஒன்றல்லவா?

அந்த வகையில், திருநெல்வேலிச் சீமையிலே பிறந்த, சுதந்திரச் சுடர் மணிகளைப் பற்றி அறிந்து கொள்வதிலே யாருக்குத்தான் மகிழ்ச்சி ஏற்படாது?

அந்த நன்மணிகளைப் பற்றி அறிந்து கொள்வோமா?

## சாவடி அருணாசலப் பிள்ளை (செங்கோட்டை)

வன்முறை பலாத்காரத்தினால்தான் ஆங்கிலேய ஆட்சியை ஒரு முடிவுக்கு கொண்டுவர முடியுமென சில இளைஞர்கள் உணர்ந்தனர். 'சித்திரை மீட்டிங்' என அழைக்கப்பட்ட புகழ்பெற்ற இரகசியக் கூட்டம் செங்கோட்டைச் சாவடி அருணாசலம் பிள்ளை அவர்கள் வீட்டில் 1911 ஏப்ரலில் நடைபெற்றது. வாஞ்சிநாதன் தலைமை தாங்கினார். விடுதலைப் போராட்ட வீரர்களைக் கருவறுத்துக் கொண்டிருந்த டபிள்யூ எஸ். ராபர்ட் வில்லியம் டி. எஸ்டோர்ட் ஆஷ் I.C.S. துரையை ஒழித்துக் கட்டவேண்டுமென முடிவெடுத்தனர் இப்பணியைச் செய்ய பதினைந்து பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு திருவுளச் சீட்டு முடிவுக்கு வந்தனர். திருவுளச் சீட்டில் வாஞ்சிநாதன் பெயர் வந்தது. ஆஷ் துரை செல்லும் இடங்களுக்கு எல்லாம் வாஞ்சியும் அருணாசலம் பிள்ளையும் சென்றனர்.

வாஞ்சிநாதன் மணியாச்சி ரயில் நிலையத்தில் ஆஷ் துரையை முதல் வகுப்புப் பெட்டியில் சுட்டு வீழ்த்துகிறார். வஞ்சிநாதனின் கடைசி மூச்சு வரை அவரோடு பணியாற்றிய அருணாசலம் பிள்ளையை, போலீஸ் தீவிரமாகத் தேடியதால் அவர் தலைமறைவானார். ஆஷ் கொலை நடந்த ஒரு வாரத்திற்குள் அதாவது ஜூன் 23-ஆம் தேதி பி.பி. தாமஸ் (டி.ஐ.ஜி.) தலைமையிலான போலீஸ் படை அருணாசலப் பிள்ளையைக் கல்கத்தாவில் கண்டுபிடித்து கைது செய்து சென்னை மத்தியச் சிறைச்சாலையில் அடைத்தது. இந்திய விடுதலைப் போராட்டத்தின் திருப்பு முனையாக அமைந்தது இந்த நிகழ்ச்சி.

அருணாசலம் பிள்ளையோடு பதின்மூன்று கைதிகளையும் சேர்த்து தூக்கில் தொங்கவிட எல்லா முயற்சிகளும் கையாளப்பட்டன. ஆந்திரக் கேசரி சர். டி. பிரகாசம், சீனிவாச ராமாநுஜாச்சாரி போன்ற சட்ட மேதைகளின் வாதத்திறனும், முயற்சியும் இவர்களைத் தூக்கு மேடையிலிருந்து தப்புவித்தன.

திருமணமாகி ஓராண்டு கழிவதற்கு முன்பே தன் இளம் மனைவி கருவுற்றிருந்த வேளையில் ஆஷ் துரையை ஒழித்துக்கட்டும் பணியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் அருணாசலம் பிள்ளை. இவர் டாக்டருக்கு கல்கத்தாவில் நான்காம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தவர். சிறையில் சித்திரவதை பிள்ளைக்கு. ஆங்கில ஆதிக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்காகப் பத்திரத்தில் ரத்தக் கையொப்பமிட்ட அவரது விரல்களைப் போலீசார் ரூல் தடியால் சிதைத்தனர். அதன்பின்

அவரால் எழுதவே முடியவில்லை. சுத்த சைவ ரான அவருக்குப் பச்சை மாமிசத்தை உணவோடு கலந்து ஊட்டினர்.

## சோமயாஜுலு

*1921*-இல் இவர் அரசியலில் நுழைந்தார். வ.வே.சு. ஐயர், சுப்பிரமணிய சிவாவோடு நட்பு பூண்டார். இந்திய விடுதலைப் பணிக்காக மதுரை யிலிருந்து பெல்ஜியம் வரை சென்று திரும்பியதில் *1,400* மைல் பாதயாத்திரை மேற்கொண்டார். நீலன் சிலை சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண் டார். அதன் விளைவாக, பெர்ஹாம்பூர் சிறையில் அடைக்கப்பட்டார். ராஜதுவேஷ வழக்கிற்காக மூன்று ஆண்டுகள் தண்டனை அடைந்தார். இடையில் காந்தி இர்வின் ஒப்பந்தப்படி விடுதலை செய்யப்பட்டார். கோவில்பட்டியில் இரண்டு ஆண்டுகள் தண்டனை. பாதுகாப்புச் சட்டப்படி கைது. கவர்னர்கள், வைசிராய்கள் வரும்போது சிறைவாசம். இவ்வாறு இவர் காலம் ஓடியது. விடுதலை வீரர் ஸ்தாபன அமைப்பை உருவாக் கினார். தென்மண்டல விடுதலை வீரர் ஸ்தாபனத் தின் தலைவராகவும் தமிழ்நாடு விடுதலை வீரர் ஸ்தாபனத்தின் தலைவராகவும், திருநெல்வேலி மாவட்ட விடுதலை வீரர் சமிதியின் தலைவராக வும் பணியாற்றினார். விடுதலை வரலாறு குறித்த நூல்கள் எழுதி இருக்கிறார்.

## வ.வே.சு. ஐயர்

இலண்டன் கல்லூரியில் சட்டம் படித்த வ.வே.சு. ஐயர் சுதந்திரத்திற்காகத் தங்களை அர்ப்பணித்த வீரத் தியாகிகள் வரலாற்றில் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளார்.

*1911*-இல் வாஞ்சிநாதன் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்றார். இச்சம்பவத்திற்கு வ.வே.சு. ஐயரே காரணம் என்று குற்றம் சாட்டிக் குற்றப் பத்திரிகை தயாரித்தது ஆங்கிலேய அரசு. *1920*-இல் எல்லா அரசியல் கைதிகளும் விடுவிக்கப் பட்டபோது, இவரும் விடுதலை ஆனார். மீண்டும் சதிக் குற்றம் சாட்டப்பட்டு சிறைத் தண்டனை அடைந் தார். விடுதலை அடைந்தபின் நாடு முழுவதும் பாதயாத்திரை செய்தார். நெல்லை மாவட்டத்தில் உள்ள சேரன் மாதேவியில் தமிழ்க் குருகுலம் ஒன்றை நிறுவினார். பலரும் அதில் மாணவர் களாகச் சேர்ந்து பயிற்சிபெற முன்வந்தனர். ஆனால், குரு குலத்தை ஐயர் அவர்களால் நடத்த முடியாமல் போய்விட்டது.



பாபநாசத்திலுள்ள கல்யாண தீர்த்தத்திற்குச் சீடர்கள் சிலருடனும், தம் புதல்வியுடனும் சென்றிருந்தபோது, ஐயரின் புதல்வி கால் தடுக்கி நதியில் விழுந்துவிட்டார். ஐயர், தாமும் உடனே நீரில் பாய்ந்து அவர் தலையைப் பற்றினார். ஆனால், இருவருமே நீரிலேயே இறந்துவிட்டனர்.

## பரலி சு. நெல்லையப்பர்

திருநெல்வேலியிலிருந்து எட்டுக் கல் தொலை வில் உள்ளது. பரலிக் கோட்டை, இங்கு பிறந்தவர் தான் பரலி சு. நெல்லையப்பர். பாரதியாரின் தம்பி என்று அழைக்கப்பட்டவர். வ.உ. சிதம்பரம் பிள்ளையின் சிறந்த துணைவர் பரலி சு. நெல்லையப்பர். வ.உ.சி. கோயம்புத்தூர் சிறை யில் இருந்தபோது, எப்படியோ சிறைக்குள் சென்று வ.உ.சி.-யின் துண்டுச் சீட்டுகளைப் படித்து உதவிகள் செய்தார். வ.உ.சி. *1912*-இல் வெளிவந்த போது, அவரை வரவேற்றவர் நெல்லையப்பர் ஒருவரே. நீலகண்ட பிரம்மச்சாரி, ஆஷ் கொலையில் ஈடுபட்டதாக அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தபோது நீலகண்டரைப் பரலி பார்த்தார்.

*1910*-இல் புதுவை புகுந்த பரலியப்பர் நீலகண்டருடன் கலவை பங்களாவில் தங்கினார். *1915*-இல் பரலியார் சென்னை 'லோகோபகாரி' ஆசிரியரானார். பாரதியார் பாடல்களுக்கு நல்ல விளம்பரம் தந்தவர் பரலியாரே ஆவார். வ.வே.சு. ஐயருடன் தேசபக்தனில் பரலியப்பர் துணை ஆசிரியராக இருந்தார்.

*1941*-இல் சத்தியாகிரகப் போராட்டத்தில் சிறை சென்று வந்து அதே பத்திரிகையைத் திரும்ப நடத்தினார். நெல்லையப்பருக்குத் தமிழக அரசு இறுதிவரை மாதம் ரூபாய் இருநூற்று ஐம்பது அளித்து வந்தது.

## எஸ். மீனாட்சி சுந்தரம் (சங்கரன் கோவில்)

பதினைந்து வயதிலேயே காங்கிரஸ் இயக்கத் தில் ஆர்வம் கொண்டு பேச்சாளர் ஆனார். *1928*-இல் காங்கிரஸ் தொண்டனாகச் சேர்ந்து ஈடுபாடு. *1930*-இல் அன்னியத் துணி பகிஷ் கரிப்பு, கள்ளுக்கடை மறியல் போராட்டங்களில் கலந்து கொண்டார். நகர தாலுகா ஜில்லா காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகித்தார். *1941*-இல் சத்தியாகிரகத்தின்போது கைது

செய்யப்பட்டு, மதுரை மத்தியச் சிறையில் ஆறு மாதங்கள் தண்டனை அடைந்தார். 1942-இல் ஆகஸ்ட் புரட்சியின்போது கைது செய்யப்பட்டு, ஓராண்டுப் பத்து மாதங்கள் வேலூர், தஞ்சாவூர், கண்ணனூர் சிறைகளில் தண்டனை அனுபவித்தார். 1945-இல் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டியின் செயலாளரானார். சர்வோதயப் பணியில் முக்கியப் பங்கு வகித்தார்.

### ஆ.கு. முத்தாச்சாரி (சங்கரன் கோயில்)

1930-இல் சட்ட மறுப்பு இயக்கங்களில் பங்கு கொண்டார். 1931-இல் அன்னியத் துணி பகிஷ்காரத்தில் கலந்துகொண்டார். 1941-இல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் பங்குகொண்டு மதுரை மத்தியச் சிறையில் ஐந்து மாதங்கள் தண்டனை பெற்றார். 1928 முதல் விடுதலை இயக்கத்தில் பங்கேற்றார். நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்தார். தம் சொத்துக்களை எல்லாம் தேசிய சேவைக்கே செலவு செய்தார். நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற அத்தனைப் போராட்டங்களிலும் பங்கெடுத்தார். சத்தியாக்கிரகக் காலத்தில் மறியல் செய்ததற்காக, போலீசார் இவரைக் கடுமையாக அடித்துச் சாக்கடையில் போட்டுவிட்டுப் போய்விட்டனர். ரண காயங்களோடு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இவரை ஊர் மக்கள் எடுத்துச் சென்று மருத்துவ உதவி செய்தனர். குணமான பின் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டார்.

### நல்லபெருமாள் பிள்ளை (நகரம்)

காந்தியடிகளின் உத்தரவு கிடைத்தும், தன் ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு 1941-இல் மலையடிக்குரிச்சியில் தனிநபர் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தார். கர்ப்பிணியாயிருந்த தன் மனைவியையும், மரணப் படுக்கையில் இருந்த தன் தாயாரையும் பொருட்படுத்தாது, டில்லி நோக்கி பாதயாத்திரை புறப்பட்டார். வழியில் மதுரையில் கைது செய்யப்பட்டு மதுரை, திருச்சி சிறைகளில் தண்டனை அனுபவித்தார்.

இந்த நேரத்தில் மனைவி ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துவிட்டு இறந்து விட்டார். எனினும், சத்தியாக்கிரகத்திலிருந்தும் வீடு திரும்ப மறுத்த இவரை, காந்தியடிகள், தன் ஆணையினால் மனைவியின் ஈமக்கடன் செய்ய அனுப்பினார். ஒரு வாரத்தில் தாயும் காலமானார்.

1942 ஆகஸ்டுப் போராட்டத்திற்கு முன்பே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு திருநெல்வேலி சப்ஜெயிலில் தண்டனை அனுபவித்தார். ஆகஸ்ட் போராட்டத்தின் போது மீண்டும் சங்கரன்கோவில் சப் ஜெயிலில் தண்டனை அனுபவித்தார். இந் நேரம் இவர் மகன் இறந்து போனார். சுதந்திரத்திற்குப் பின் அரசு கொடுத்த நிலத்தை வாங்க மறுத்தார்.



அந்நியர்கள் நம் மண்ணில், முதன் முதலில் காலெடுத்து வைத்துக்கட்டிய கோட்டையின் கொத்தளத்தில், நம் விடுதலைக் கொடி இன்று பட்டொளி வீசிப் பறப்பது, நம் சுதந்திரத்தின் மகிமையை உலகுக்கு உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது.

விடுதலை நாள் விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில், அதற்கு வித்திட்டவர்களின் தியாகங்களைப் பெருமையோடு நினைவுகூர்வது நம் கடமையாகும். இந்த விடுதலைதான் இந்தியாவை ஒரே நாடாக்க உதவியது; அடிமை இந்தியனைச் சுதந்திர மனிதனாக அரியாசனத்தில் அமர்த்தியது.

எனவே, தாய்த்திரு நாட்டின் விடுதலைக்காகத் தம் உயிர், உடல், உடைமைகளை ஈந்த பல்லாயிரக் கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள் சார்பில் எனது வீர வணக்கத்தை அஞ்சலியாக்குகின்றேன்.

—மாண்புமிகு முதல்வர்
டாக்டர் ஜெ. ஜெயலலிதா

### டாக்டர் டி.சி. சங்கரய்யர் (கல்லிடைக் குறிச்சி)

1931-32 சட்ட மறுப்புப் போராட்டங்களில் தீவிரப் பங்கு கொண்டார். மதுபானக் கடைகள் முன்பும், அன்னியத் துணிக் கடைகள் முன்பும் மறியலில் தீவிரப் பங்கு பெற்றார். நெல்லை மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார். 1942 ஆகஸ்ட் புரட்சியின்போது இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு வேலூர், தஞ்சாவூர் மத்தியச் சிறைகளில் தண்டனை அனுபவித்தார். தம் இல்லத்தை, தேச பக்தர்களின் அன்னதானச் சத்திரமாக நடத்தியவர்.

### கே.எஸ். ராஜகோபால் (முக்கூடல்)

1941 தேசிய இயக்கத்தில் தீவிரப் பணியாற்றினார். 1941 தனிநபர் சத்தியாக்கிரகத்திலும் 1942 ஆகஸ்ட் புரட்சியிலும் பங்கு பெற்றார். பல சப்ஜெயில்களில் கைதியாகத் தண்டனை அனுபவித்து அலிப்புரம் முகாம் சிறையிலும் தண்டனை அனுபவித்தார்.

### எஸ். வீரபாகு செட்டியார் (வீரவ நல்லூர்)

1932-இல் தேசிய இயக்கத்தில் கலந்து கதர் அபிவிருத்தி, தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, அன்னியத்துணி பகிஷ்காரம் ஆகிய பணியில் தீவிரப் பங்கு கொண்டார். வீரவநல்லூர் நகரக் காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராகவும் பணி

யாற்றினார். சட்ட மறுப்பு இயக்கத்தில் தீவிரப் பங்கு எடுத்ததால், அரசாங்கத்தால் ஒன்பது மாதங்கள் தண்டிக்கப்பட்டார். கண்ணனூர் மத்தியச் சிறையில் தண்டனை அனுபவித்தார்.

### டி.ஆர். மகாதேவ அய்யர் (கல்லிடைக் குறிச்சி)

காந்தியடிகளின் கதர் இயக்கத்தை நெல்லை மாவட்டம் முழுவதும் பரப்பினார். இவர் சென்ற இடங்களில் எல்லாம் அந்நிய நாட்டுத் துணிகள் தீயிடப்பட்டன. வ.உ.சி. மீது அரசினரால் தொடங்கப்பட்ட வழக்கில் வ.உ.சி.க்காக வாதாடினார்.

வ.வே.சு. ஐயர் விட்டுச் சென்ற பரத்துவாஜ ஆசிரமத்தை ஏற்று நடத்தி வந்தார். 1927-இல் காந்தியடிகள் நெல்லைக்கு வருகை தந்தபோது ஆசிர மத்தைச் சேர்ந்த 32 ஏக்கர் நிலத்தையும், கட்டடத்தையும், ரூபாய் நாலாயிரத்தையும் காந்தியிடம் ஒப்படைத்தார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தவுடன் தனது வக்கீல் தொழிலை வீசி எறிந்தார். 1932 சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டதற்காக 18 மாதங்கள் சிறைத் தண்டனை வேலூர், திருச்சி மத்தியச் சிறைகளில் அனுபவித்தார்.

### எல். சட்டநாதக் கரையாளர் (செங்கோட்டை)

வழக்கறிஞரான இவர் தேசபக்தர் பாஷ்யம் அவர்களிடம் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் போதே, தேசிய இயக்கத்தில் சேர்ந்தார். 1937-இல் கோவில்பட்டித் தொகுதியில் இருந்து சென்னைச் சட்டசபைக்குக் காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940-இல் சங்கரன் கோவில் தனிநபர் சத்தியாக்கிரகம் செய்ததற்காக இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, ஆறு மாதம் கடுங்காவல் தண்டனையைத் திருச்சி மத்தியச் சிறையில் அனுபவித்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

### டி. பெருமாள் நாயுடு (தென்காசி)

தனது வியாபாரம் பொருட்டுப் பதினைந்து வயதில் சென்னை சென்றிருந்த சமயம், 1927-இல் சைமன் பகிஷ்கார இயக்கம் நடைபெற்றதால், அதில் பங்கு கொண்டு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை அடைந்தார். மதுரையில் ஜவுளிக்கடை மறியல், தென்காசி வந்து கள்ளுக்கடை மறியல் செய்தபோது போலீசாரின் தடியடிக்கு உட்பட்டார். 1942 ஆகஸ்ட் போராட்டத்தின்போது சதிவேலை செய்ததாக அலிப்புரம் சிறையில் இரண்டு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை அனுபவித்தார்.

### வி.எஸ். சங்கர சுப்பிரமணிய முதலியார் (திருநெல்வேலி)

1930-32-இல் வீரவ நல்லூர், நெல்லை ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய இயக்கங்களில் தீவிரப் பங்கு 1933-40 வரை இந்தியச் சுதேசி இயக்கச் சங்கச் செயலாளர். 1936-இல் நெல்லை நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர். 1938-45 மாவட்டக் காங்கிரஸ் கமிட்டித் துணைத் தலைவர்.

1945 மாவட்ட காங்கிரஸ் கமிட்டிச் செயலாளர். 1938-45 மாகாண காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர். 1938-42 நெல்லை நகராட்சித் தலைவர் 1942 இயக்கத்தில் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் சிறை. 1946-இல் நெல்லை-பாளை நகர் பொதுத் தொகுதிச் சட்டசபை உறுப்பினர்.

### எஸ். ஜோதிர்மயானந்தா (திருநெல்வேலி)

1931-32-இல் கல்லூரியில் படிக்கும்போதே கள்ளுக்கடை, ஜவுளிக்கடை மறியலில் ஈடுபட்டார். 1933-39 வரை சுதேசிப் பொருட்காட்சியில் தொண்டர்களை நிர்வாகித்தார். 1935-இல் காங்கிரஸ் பொன்விழாச் செயலாளர். 1939-இல் நெல்லை காங்கிரஸ் செயலாளராக இருந்து போலீஸ் தடியடியை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தார். 1941-இல் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு வேலூரிலும் அலிப்புரத்திலும் ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

தொகுப்பு:
தி.வ. கல்யாணசுந்தரம்



பொருளாதாரச் சமத்துவம்தான் சுதந்திரத்தின் உயிர்நாடி. முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள நிரந்தரப் பூசலை அகற்றுவதுதான், பொருளாதாரச் சமத்துவத்திற்கான ஒரே வழி.

சுயராஜ்யப் போராட்டம் என்பது வெறும் அரசியல் துறையில் மட்டும் விழிப்பு ஏற்படுவது அல்ல. சுற்றியுள்ள எல்லாத் துறைகளிலும், பொருளாதாரம், சமூகம், கல்வி, ஒழுக்கம், அரசியல் ஆகிய துறைகள் அனைத்திலுமே விழிப்பு ஏற்படுத்தும் போராட்டத்தையே குறிப்பதாகும்.

தூய்மையான வழிகளின் மூலம் பெற்ற அதே சுதந்திரத்தை, அதே தூய்மையான நேர்மையான வழிகளின் மூலம் காப்பாற்றி வர வேண்டும்.

—அண்ணல் காந்தியடிகள்



# பொன்விழாக் காணும் 'வெள்ளையனே வெளியேறு'

## 1942 ஆகஸ்டுப் புரட்சி இயக்கத்தின் வீர வரலாறு!

**'வெள்ளையனே வெளியேறு' இயக்கம் தொடங்கி, 9.8.93 அன்று ஐம்பதாண்டுகள் நிறைவு பெற்றன. அண்ணல் காந்தியடிகளின் தலைமையின்கீழ் நடந்த இந்த இயக்கத்தின் வீர வரலாறு இதுதான்:**

உலகயுத்த மேகம் கடுமையாகிவிட்டது; கருமையாகிவிட்டது. இந்தியாவில் வேறு வழியின்றி அண்ணல் காந்தியடிகள் யுத்தத்தின் கடைசி சங்க நாதத்தை 1942-இல் ஆகஸ்டு 8, 9 தேதிகளில் பம்பாய் நகரில் 'வெள்ளையனே வெளியேறு' 'செய் அல்லது செத்துமடி' என்ற தாரக மந்திரத்தை எழுப்பினார். அவரவர்களே தலைவர்களாக மாறி, நாட்டின் விடுதலைக்குத் தங்கள் பங்குகளை ஆற்றவேண்டும் என்று ஆணையிட்டார் அண்ணல்.

பம்பாயில் கூடிய ஆகஸ்டு-8, முதல் நாள் கூட்டத்தில் இந்தப் புரட்சிக்கான காரணத்தை விளக்கியும், நேசக்கரம் நீட்டிய அண்ணல் காந்தியடிகளை உதாசீனப்படுத்தியது ஏகாதிபத்தியம். அடிகள் போராட்டக் காரணங்களை நன்கு விளக்கி 'இன்று போய் செயல் திட்டங்களை உருவாக்கி, நாளை வருவோம்' என்று அறிவித்து, தன் பாசறைக்குச் சென்றார்.

வெள்ளையரின் விதி விளையாடிவிட்டது. வைசிராய் லின்லித்கோ சதி செய்து விட்டார். காந்தியடிகள், நேரு, பிரசாத், படேல், ஆசாத் உள்ளிட்ட முன்னணித் தலைவர்களை இரவோடு இரவாகக் கைது செய்து எங்கோ கொண்டு போய் விட்டார். அந்த நிமிடத்திலேயே தொலைபேசிகள் துண்டிக்கப்பட்டன. பத்திரிகைகளுக்குச் செய்திகள் மறுக்கப்பட்டன. போதாதற்கு, வானொலியில் லின்லித்கோ, ''காந்தியடிகளும் காங்கிரசும் பலாத்காரச் செயலில் ஈடுபட்டு விட்டார்கள்'' என்று பொய்ப் பிரச்சாரம் செய்தார்.

இதனை வானொலியில் கேட்ட மக்கள் தலைவர்களை எங்கோ கொண்டு சென்று விட்டார்கள் என்று சந்தேகத்தோடும், ஏற்கெனவே பலமுறை ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் அனுபவப்பட்டிருந்த காரணத்தாலும் முதல் நாளில் அடிகள், 'செய் அல்லது செத்துமடி', வெள்ளையனே வெளியேறு' என்ற முழக்கங்களைத் தந்து விட்டபடியாலும் அவரவர்கள் மனப்படி யுத்த எதிர்ப்பில் இறங்கி புரட்சித் தீயைப் புயல் எனப் பரப்பினர்.

இந்தியா என்ற எரிமலை வெடித்தது. ஏகாதிபத்தியக் கட்டடங்கள் எரிந்தன; அதிர்ந்தன. தந்திக்கம்பங்கள் அறுந்தன; சாய்ந்தன. ரயில் தண்டவாளங்கள் பெயர்ந்தன. ராணுவ நடமாட்டங்கள் சிதைந்தன. தபால் பெட்டிகள், சாவடிகள் மற்றும் அரசு சம்பந்தப்பட்ட அனைத்தும் தீக்கிரையாக்கப்பட்டன.

WITH BEST COMPLIMENTS FROM

**HOTEL SHIVASAND - V.P.N. COMPLEX**
**V.P.N. MODERN RICE MILL**
**SARAVANA THEATRE**
**SARAVANA RICE MILL**



**GINGEE-604 202**
**South Arcot District**

With Best Compliments From

Thiru P. SEKAR
Contractor
TWAD
Komalur (Post)
Tirukovilur (Tk)

Thiru V. VEERAMANI
Contractor
TWAD
Irulur (Post)
Padalur (Via)
Tiruchy District

Tmt. S. RAJALAKSHMI
Ragavendra Constructions
4-R, Mahavishnu Street
Villupuram

M/s. THIRUMALAI ENTERPRISES
No.30, K.K. Road
Villupuram

# பேரூராட்சிகளின் பெரும் பணிகள்

மு. முத்துசாமி
மாவட்டப் பேரூராட்சி அலுவலர்
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.

கிராமங்கள் இந்திய நாட்டின் ஆத்மா, உள்ளாட்சி அமைப்புகளே அதன் உயிர் மூச்சு; உள்ளாட்சி அமைப்புகளில் ஒன்று பேரூராட்சி அமைப்பு. திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில், 36 பேரூராட்சிகளும், இரண்டு பஞ்சாயத்து நகரியங்களும் உள்ளன.

பேரூராட்சிகளின் நிர்வாக நலன் கருதி 1981-ஆம் ஆண்டு முதல் 'பேரூராட்சித்துறை' என்று தனியாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகிறது.

அடி பம்புகளும் நன்முறையில் இயங்கி வருகின்றன. இது குறிப்பிடப்பட வேண்டியது அவசியம்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிக்கு ஆயுள் காப்பீட்டுக் கழகமும், அரசும் உலக வங்கியும் கடன் உதவியும் மானியமும் வழங்கி உள்ளன. அதன்படி, உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நிறுவி குழாய்மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

குடிநீர் வசதிக்கு அடுத்தபடியாகக் குறிப்பிட வேண்டியது விளக்கு வசதியாகும். இம்மாவட்டத்தில்

இல்லாத பேரூராட்சிகளில் தடையின்றி விளக்குகள் ஒளிர இந்த ஆண்டும் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் சாலைகள் சீராகவும், செம்மையாகவும் இருக்கும் பொருட்டு, ஆண்டுதோறும் ரூ.2 இலட்சத்திற்குக் குறையாமல் அரசு மானியம் வழங்கிவருகிறது. அதன்படி, 1992-93- ஆம் ஆண்டு ரூ.2 இலட்சம் தூசி படியாத சாலை அமைக்க அரசு மானியமாக வழங்கியுள்ளதை இங்கே குறிப்பிட வேண்டும்.



பேரூராட்சிகளில் மொத்த மக்கள் தொகை 5 இலட்சத்து 87 ஆயிரத்து 273 ஆகும்.

பேரூராட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குக் குடிநீர், தெருவிளக்கு, பொதுச் சுகாதார வசதிகள் ஆகிய அத்தியாவசியமான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியது பேரூராட்சிகளின் தலையாய கடமையாகும்.

**குடிநீர்**

இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலுமே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிகளில் 671 ஆழ்குழாய்க் கிணறுகளும், 594

உள்ள அனைத்துப் பேரூராட்சிகளிலும் மின் விளக்குகள் அமைத்துத் தரப்பட்டுள்ளன. மொத்தம் 11,265 குழல் விளக்குகளும், 215 பாதரச மற்றும் ஆவி விளக்குகளும் பொருத்தப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகின்றன. பேரூராட்சிகளில் இயங்கிவரும் மின் விளக்குகள் தடையின்றி ஒளிர, அரசு தனிக் கவனம் செலுத்தி, நிதி வசதி இல்லாத பேரூராட்சிகளில் மின் கட்டணம் மற்றும் மின் உதிரிப் பாகங்கள் வாங்கிட, அரசு அவ்வப்போது தாராளமாக மானியம் வழங்கி வருகிறது. அதன்படி, 1992-93- ஆம் ஆண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கி நிதி வசதி

சுத்தம் சுகம் தரும், நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற மூதுரைக்களுக்கிணங்க பேரூராட்சி சுகாதாரம் பராமரிக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். சில பேரூராட்சிகளில் சாக்கடை நீர் தேங்கி, கொசுக்கள் ஏற்படுத்தும் தொல்லைகளை நீக்கிட வடிகால் கட்டும் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் கணிசமான அளவுக்கு அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. இந்த ஆண்டு ரூ.30,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேவையான பேரூராட்சிக்கு வழங்கப்பட்டு வடிகால் கட்ட உதவி செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்படும் தன்னிறைவுத்

திட்டத்தைப்போல், இம்மாவட்டத்திலுள்ள 38 பேரூராட்சிகளை மூன்று பகுதிகளாகப் பிரித்து, முதல் பகுதியாக 13 பேரூராட்சிக்கும், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் ரூ.23.90 இலட்சம் அரசு அனுமதி வழங்கி கருங்கல் சாலைகள், வடிகால்கள், மற்றும் தார்ச் சாலைகள் பணிகள் தொடங்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

பேரூராட்சிகளின் தரத்தை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு வசதிகளைக் கூடுதலாகச் செய்திடவும், இத்திட்டம் பெரிதும் பயனுள்ளதாக உள்ளதெனக் கூறினால் அது மிகையாகாது. அரசின் ஆணைப்படி மீதமுள்ள பேரூராட்சிகளில் இரண்டு தொகுப்பாகப் பிரிக்கப்பட்டு இத்திட்டம் நிறைவேற்றப்படும். 1993-94-இல் 13 பேரூராட்சிகளிலும் - அடுத்து வரும் ஆண்டில் மீதமுள்ள பேரூராட்சிகளில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

பேருந்து நிலையங்கள்

பொதுமக்களின் வசதிக்காகவும் பேரூராட்சிகளின் வருமானத்தைப் பெருக்கிடும் நோக்கத்துடனும், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலம், இட வசதி உள்ள பேரூராட்சிகளில் பேருந்து நிலையங்கள் அமைத்துக் கொள்வதற்கு, அரசு அவ்வப்போது ரூ.10 இலட்சம் முதல் 15 இலட்சம் கடன் வழங்குகிறது. இந்தக் கடன் 20 ஆண்டுத் தவணைகளில் சுலப வட்டி விகிதத்தில் திரும்பச் செலுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், சிவகிரி, வடக்குவள்ளியூர், வாசுதேவநல்லூர், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சிகளில், பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் பேரூராட்சிக்குக் கணிசமான வருவாய் கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பேரூராட்சிக்கும் ஆண்டுதோறும் சராசரி ரூபாய் ஒரு இலட்சம் வருவாய் கிடைத்து வருகிறது.



● பயன் கருதாது செய்யப்படும் பணியே தொண்டாகும். தொண்டு என்பது அடிமை வேலையன்று. அது தெய்வப் பணி.

— தமிழ்த் தென்றல் திரு.வி.க.

அரசு நிதி வசதியற்ற பேரூராட்சிகளுக்குக் குடிநீர், சாலை வசதி செய்து கொடுக்க பகுதி-2 திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ.2 இலட்சம் வீதம் முழு மானியமாக நிதி உதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இலஞ்சி, நான்குநேரி, பண்பொழி ஆகிய பேரூராட்சிகளுக்குத் தலா 2 இலட்சம் பெற்று குடிநீர்த் திட்டத்தை விரிவாக்கம் செய்துள்து குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதன் மூலம் இந்த மூன்று பேரூராட்சிகளிலும், சுமார் 7,000 மக்கள் பயன் பெறுகின்றனர்.


வறட்சி நிலவுகின்றபோதும், பேரூராட்சிக்கு உரிய பங்கினை அரசு அவ்வப்போது நிதி உதவி அளித்து போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து குடிநீர் வசதி செய்யப்படுகிறது. அதன்படி, 1993-94-ஆம் ஆண்டுக்கு வறட்சி நிவாரணத் திட்டத்திற்கு, குடிநீர் பெருகிட ரூ.0.44 இலட்சமும், புதியதாக 9 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ.2.25 இலட்சமும், மானிய ஒதுக்கீது செய்யப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், பேரூராட்சி நிதியிலிருந்து வறட்சிப் பணிகளைச் செய்திட ரூ.4,01,900 ஒதுக்கீடு செய்து பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.


மனிதக் கழிவை மனிதன் சுமக்கக் கூடாது என்ற அரசின் கொள்கைப்படி, பேரூராட்சிகளில் தனியார் வீடுகளில் உள் உலர் கழிப்பிடங்களை நவீன கழிப்பிடமாக மாற்றிடத் தனியார் ஒவ்வொருவருக்கும் ரூ.1,500 செலவில், உலர் கழிப்பிடங்களை நவீனக் கழிப்பிடங்களாக மாற்றத் திட்டம் செயலாக்கப்பட்டு, சிவகிரி, வடக்குவள்ளியூர், சுரண்டை ஆகிய பேரூராட்சிகளில் மொத்தம் 500 கழிப்பிடங்கள் கட்டப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டம் ஒவ்வொரு வீட்டிலும் நவீனக் கழிப்பிடம் கட்ட வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கி வருகிறது.

பேரூராட்சிகளில் முக்கியப் பணிகள் செய்து வரும் சுகாதாரப் பணியாளர்களுக்கு, அரசு கருணை கொண்டு இலவசமாக 370 மழைக்கோட்டுகள் இம்மாவட்டத்திலுள்ள சுகாதாரப் பணியாளர்களுக்கு வழங்கியுள்ளது மிகவும் பாராட்டுக்குரிய திட்டமாகும்.

கடந்த 1992 நவம்பர் மாதத்தில் எதிர்பாராத வகையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால், சில பேரூராட்சிகள் சிக்குண்டு குடிநீர் ஆதாரங்கள் முழுவதும் பாதிக்கப்பட்டன. அப்பகுதியில் வாழ்கின்ற மக்கள் குடிநீர் மற்றும் போக்குவரத்திற்கும் அவதிப்படாமல் இருக்கும் பொருட்டு அரசு தாராளமாக ரூ.71.84 இலட்சம் வெள்ள நிவாரண நிதியாக வழங்கி பாதிக்கப்பட்ட குடிநீர் ஆதாரங்கள் மற்றும் சாலைகளை மேம்பாடு செய்து மக்களின் துயர் துடைக்கப்பட்டதை இங்கே குறிப்பிட வேண்டும்.

இம்மாவட்டத்திலுள்ள பேரூராட்சிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் போதுமான நிதி ஒதுக்கீடுகளை அவ்வப்பொழுது வழங்கி, பேரூராட்சிப் பகுதிகளில்






## திருக்குற்றாலம்

தென்பாண்டி நாட்டில் இயற்கை அழகும் இறைவன் அருளும் வாய்ந்த சீரூர் திருக்குற்றாலம். அதன் பெருமையைக் கண்களிப்பக் கண்ட திரு ஞான சம்பந்தர்,

''கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ் செய் குற்றாலம்'' என்று பாடி மகிழ்ந்தார். இத் தகைய குற்றாலத்தின் பெயரைச் சோழ நாட்டி லுள்ள திருத் துருத்தி என்னும் பாடல் பெற்ற தலம் ஏற்றுக் கொண்டது. காவிரித் துருத்தி என்று தேவாரத்திலும், வீங்குநீர்த் துருத்தி என்று சாசனங்களிலும் வழங்கப் பெற்ற அவ்வூர் பிற் காலத்தில் குலோத்துங்க சோழன் குற்றாலம் என்று பெயர் பெற்றது. இப்பொழுது குற்றாலம் என்பதே அதன் பெயராகும்.



## எங்கள் மலை!

பானரங்கள் கனிகொடுத்து
மந்தியோடு கொஞ்சும்;
மந்திசிந்து கனிகளுக்கு
வான்கவிகள் கெஞ்சும்;

கானவர்கள் விழிஎறிந்து
வானவரை அழைப்பார்;
கவனசித்தர் வந்துவந்து
காயசித்தி விளைப்பார்;

தேனருவித் திரையெழும்பி
வானின்வழி ஒழுகும்;
செங்கதிரோன் பரிக்காலும்
தேர்க்காலும் வழுகும்;

கூனல்இளம் பிறைமுடித்த
வேணிஅலங் காரர்
குற்றாலத் திரிகூட
மலை எங்கள் மலையே!

— குற்றாலக் குறவஞ்சி

---

வளர்ச்சிப் பணிகள் நன்கு செயல்பட உதவி செய்துள்ளதை மறக்க முடியாது.

தேசீய திட்டமான குடும்பநலம், சிறுசேமிப்புத் திட்டங்களில் பேரூராட்சிகள் பங்கு கொண்டு ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஒதுக்கீடு செய்யும் குறியீட்டினைத் தொய்வின்றி எய்தி வருவது பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

1992-93-ஆம் ஆண்டுக்கு குடும்பநலத் திட்ட ஒதுக்கீடு 600-க்கு 681 சாதனை செய்து இலக்கினை விஞ்சியமைக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பாராட்டுக்கள் தெரிவித்துள்ளதை இங்கே குறிப்பிடலாம்.

இதுபோல் சிறுசேமிப்பிலும் ரூ.950 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டதற்கு, ரூ.980 இலட்சம் வசூல் செய்து இலக்கினை விஞ்சியுள்ளது.

பேரூராட்சிகள் நிர்வாகம் சீராகவும், செம்மையாகவும் மக்களுக்குப் பயனுள்ளதாக விளங்கிட அதனுடைய வருமானத்தைப் பெருக்குவது மிக முக்கியமானதாகும். பேரூராட்சிகளில் விதிக்கப்படும் வரி இனங்கள் மூலமாக ரூ.94.37 இலட்சமும், வரியில்லா இனங்கள் மூலம் ரூ.89.44 இலட்சமும் கிடைக்கின்றது.

பல பேரூராட்சிகளில் நிதி வசதிப் பற்றாக்குறையாக இருக்கிறது. இருந்தாலும், அவ்வப்போது அரசு வழங்கும் மானியத்தைக் கொண்டு, பேரூராட்சிகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

### பேரூராட்சிகள் சிறந்து விளங்கிட

இம்மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பேரூராட்சிகளுக்கும், அரசுத் திட்டங்களை அவ்வப்போது தாய் உள்ளத்தோடு தாராளமாகப் பேரூராட்சிகளுக்கு வழங்கி, பேரூராட்சி நிர்வாகம் செம்மையாகச் செயல்பட உதவி செய்து வருகிறார்கள். இதன்மூலம் பேரூராட்சிப் பகுதிகளில் வாழுகின்ற மக்கள் உள்ளாட்சி மூலம் நன்மைகளைப் பெற்று, அவர்களின் ஒத்துழைப்பை மென்மேலும் வழங்க வேண்டுமென இந்த நேரத்தில் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

All for you! Choose to your Taste!

# M/s RAJARAJAN MOTORS

## Authorised Dealers for BAJAJ 2/3 Wheelers

**CUDDALORE**
Pondy Main Road
Alpet
Cuddalore-607 001
Phone: 20844

**NEYVELI**
Cuddalore Main Road
Periyakurichi
Neyveli

Gram : ASSEFA-MADRAS
Phone: (044) 475 843
DIRECTOR :
(044) 475 763

எங்கள் இனிய வாழ்த்துக்கள்

அசோசியேசன் ஃபார் சர்வ சேவா ஃபார்ம்ஸ்
279, அவ்வை சண்முகம் சாலை
இராயப்பேட்டை
சென்னை-600.014

# மகளிர் நலனில் மகத்தான பணிகள்

எஸ். இராஜலட்சுமி
சமூக நல அலுவலர்
திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்

கூட்டுறவு இயக்கம் மக்களை மக்களாக வாழ வைக்கவும், மனிதாபிமானத்திற்கு மரியாதை தரவும், மக்கள் மனதில் சமதர்ம உணர்வு மலரவும், சமத்துவச் சமுதாயம் உருவாகவும் பாடுபடுகிறது. தொடக்க காலத்தில் தேவைக்கு மட்டுமே உருவான கூட்டுறவுச் சங்கங்கள், இன்றைய நாளில் பல்துறையிலும் மக்களுக்குச் சேவை செய்யும் நிறுவனங்களாக விளங்குகின்றன.

தமிழகத்தில் உள்ள வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் நலிவுற்ற பிரிவைச் சார்ந்த மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பு தரவும், சுயமாக வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் மாநில அரசுகள் பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டங்களைச் செயல்படுத்த, சமூக நலத்துறை மூலம் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கிப் பராமரித்து, உறுப்பினர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இத்துறையின் நோக்கமாகும்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் எட்டு மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தையல் மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட இரண்டு தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், ஊட்டச் சத்துணவு தயாரிக்கும் இரண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும், காலணி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டும், சாக்குகட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கம், எழுது பொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை உள்ளன. இச்சங்கங்கள் சுமார் 1500 பெண்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி, கணிசமான கூலி கொடுத்து லாபகரமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசின் இலவசச் சீருடைத் திட்டம், சத்துணவுத் திட்டம், காலணி, வழங்கும் திட்டம், விதவைக் குழந்தைகளுக்கு மாணவர் குறிப்பேடு வழங்கும் திட்டம், கரும்பலகைத் திட்டத்தின்கீழ் உற்பத்தியை மேற்கொண்டு வறுமைக் கோட்டின்கீழ் உள்ள நலிவுற்ற மகளிர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு இம்மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அளித்து வருகின்றன,

இராஜவல்லிபுரம் இணை உணவுத் தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம், 33 ஆதிதிராவிடர், 13 பிற்பட்ட மற்றும் 4 பிற வகுப்பைச் சார்ந்த 50 மகளிர்களை உறுப்பினர்களாகக் கொண்டது. இது, 1.3.1989 அன்று இணை உணவு உற்பத்தியைத் தொடங்கியது. சங்க மகளிர் உறுப்பினர்களிடம் இருந்து ரூ.18,310 பங்குத் தொகையாகவும், தமிழக அரசிடம் இருந்து பங்குத் தொகையாக ரூ.5,000-மும் நடைமுறை மூலதான மானியம், கருவிகள் மானியம், பயிற்சி மானியமாக ரூ.3,47,350 பெற்றுள்ளது. 1992-93-ஆம் ஆண்டில் ரூ.32,66,990 மதிப்புள்ள 435.235 டன் இணை உணவு உற்பத்தி செய்து ரூ.35,06,000 மதிப்புள்ள 438.250 டன் உணவு விற்பனை செய்து ரூ.66,386 நிகர லாபமாக ஈட்டியுள்ளது. சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் இணை உணவு ஊட்டச் சத்துணவுத் திட்ட அலுவலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சுத்தமல்லி பராசக்தி ஊட்டச்சத்து உணவு தயாரிக்கும் மகளிர் மேம்பாட்டுத் தொழில் கூட்டுறவுச் சங்கம் 1.3.1989 முதல் ஊட்டச் சத்துணவு உற்பத்தி செய்து வருகிறது. 52 மகளிர் உறுப்பினர்களைக் கொண்ட



இச்சங்கம், 32 ஆதிதிராவிடர் மற்றும் 20 பிற்பட்ட மகளிர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது. உறுப்பினர்களிடம் இருந்து ரூ.17,970 பங்கு மூலதனமாகவும் தமிழக அரசிடமிருந்து பங்குத் தொகையாக ரூ.5,000-மும் நடைமுறை மூலதன மானியம், கருவிகள் மானியம் பயிற்சி மானியமாக ரூ.2,73,850 பெற்றுள்ளது.

1992-93-ஆம் ஆண்டில் ரூ.33,17,931 மதிப்புள்ள 425.1 டன் ஊட்டச் சத்துணவு உற்பத்தி செய்து ரூ.33,96,720 மதிப்புள்ள 424.5 டன் உணவு விற்பனை செய்து நிகர லாபமாக ரூ.1,23,487 ஈட்டியுள்ளது.

இந்தச் சங்கத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊட்டச் சத்துணவு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், திருநெல்வேலி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விவசாயத் தொழிலைத் தவிர மாற்றுத் தொழில் இல்லாத இப்பகுதியில் இச்சங்கம் அமைந்து மகளிர்க்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கி தரமான உணவு உற்பத்தி செய்து வருகிறது.

திருநெல்வேலி மகளிர் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் தையற் தெரிந்த மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக 18.6.1986-இல் பதிவு செய்யப்பட்டு, 25.7.86-இல் உற்பத்தியைத் தொடங்கியது. 520 அங்கத்தினர்களின் பங்குத் தொகையாக ரூ.52,000 கொண்டு வறுமைக்கோட்டின் கீழே உள்ள மகளிர்க்கும், விதவைகளுக்கும், கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற மகளிர்க்கும் வேலை வாய்ப்புக் கொடுத்து அவர்களது பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைவதற்குப் பாடுபட்டு வருகிறது.

தமிழக அரசின் சத்துணவுத் திட்டத்தின்கீழ் 1 முதல் 8 வகுப்பு வரை மாணவ-மாணவியர்க்குச் சீருடைகள் தைப்பது மூலம், பிற்பட்டோர், நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் இதர அரசுத் துறைகளில் இருந்து சீருடைகள் தைக்க ஆணைகள் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. ஆண்டுதோறும் 500 உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து 7 இலட்சம் ரூபாய் கூலியாகக் கொடுத்து வருகிறது. இச்சங்கம் 1986-87 முதல் தொடர்ந்து இலாபகரமாகச் செயல்பட்டு வருகிறது.

அதுபோல, வள்ளியூர் ஒன்றிய மகளிர் தையற் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கமும் செயல்பட்டு வருகிறது. உறுப்பினர்கள் 603 பேரும் அவர்களின் பங்கு மூலதனமாக ரூ.64,229 கொண்டு 1992-93-இல் ரூ.7,26,450 தையற் கூலியாக அரசிடமிருந்து பெற்று உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்து, கடந்த ஆண்டில் இச்சங்கம் ரூ.62,827 லாபம் ஈட்டித் தொடர்ந்து லாபத்தில் செயல்பட்டு வருவதுடன், நலிவுற்ற தையற் மகளிர்க்கு தொடர்ந்து வேலை வாய்ப்பும் வருவாயும் போனஸும் ஈட்டிக் கொடுத்து வருகிறது.


திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்பகுதி கிராமப் புறத் தையற் மகளிர்க்கு விவசாயத் தொழிலுடன் இத்தையற் தொழில் உபரியான வருவாயைக் கொடுத்து அவர்களின் பொருளாதார நிலை மேம்பட உதவுகிறது. பிற்பட்டோர் நலத்துறை ஆதிதிராவிடர் நலத்துறை அரசின் இதரத் துறைகள் மூலமும், கோ-ஆப்டெக்ஸ் போன்ற நிறுவனங்களிடம் இருந்தும் சீருடை தைக்க ஆணைகள் பெற்று உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுகிறது.

நலிவுற்ற மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட திருநெல்வேலி அண்ணா மகளிர் காகிதம் மற்றும் எழுது பொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 19.3.1980 அன்று தனது உற்பத்தியைத் தொடங்கியது. 95 மகளிரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கம் அரசு அலுவலகங்களுக்குத் தேவையாக பைல்பேடுகள், அலுவலகங்களுக்குத் தேவையாக பைல்பேடுகள், தபால் பேடுகள், கவர்கள், எழுது பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறது.

சத்துணவு மையங்களுக்குத் தேவைப்படும் பதிவேடுகளைக் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகிறது. மாணவர் குறிப்பேடுகள், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் லெட்ஜர்களையும் உற்பத்தி செய்து வருகிறது. இச்சங்கத்தில் அச்சுப் பிரிவும் செயல்பட்டு வருவதால் அரசுச் சார்புடைய நிறுவனங்களுக்குத் தேவைப்படும் படிவங்களை அச்சிட்டு வழங்குகிறது.

உறுப்பினர்கள் பங்குத் தொகையாக ரூ.72,375 கொண்டுள்ளது. தமிழக அரசிடம் இருந்து இயந்திரங்கள் மானியமாக ரூ.1,40,000 பெற்றுள்ளது. 1992-93-இல் ரூ.2,08,608.65 விற்பனை செய்து ரூ.36,913.54 நிகர லாபம் ஈட்டியுள்ளது. விதவைகள் குழந்தைகளுக்குத் தமிழக அரசு சமூக நலத்துறை மூலம் வழங்கும் இலவச மாணவர் குறிப்பேடுகள் இச்சங்கம் தயாரித்து வழங்குகிறது.

கல்லாமையை இல்லாமல் ஆக்குவதே அறிவொளி இயக்கத்தின் பெரு நோக்கமாகும். கரும்பலகைத் திட்டமும், கல்லாமையை ஒழிக்கும் திட்டமாகும். கரும்பலகைத் திட்டத்திற்கு உதவும் பொருட்டே



• தனக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழ்பவனே மனிதன். அவனது வாழ்க்கையே வாழ்க்கை.



கிராமங்களிலும், நகரங்களிலும் வசிக்கும் ஏழைப் பெண்கள், தாங்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப ஒரு தொழிலைத் தேர்வு செய்து, அதன் மூலம் சுயவேலைவாய்ப்புப் பெற அரசு உதவி செய்கிறது. ''தனிமரம் தோப்பு ஆகாது'' என்ற பழமொழிக்கிணங்க, பெண்கள் ஒன்று சேர்ந்தால் அவர்களின் பலம் பன்மடங்காகும். அதன் பயன் இந்த மாநிலத்தை வாழ வைக்கும் என்பது, நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும்.

எனவே, இத்திட்டத்தின்கீழ், பெண்களைக் குழுக்களாக ஏற்படுத்தி, அவர்கள் தொழில் செய்ய வங்கிக் கடனும் மானியமும் ஏற்பாடு செய்யப் படுவதோடு, மூலப் பொருட்களைப் பெறுவதற்கும் உற்பத்தியான பொருள் களை விற்பதற்கும், அரசு ஆங்காங்கே வசதி செய்து தருகிறது. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டவுடனே, பூர்வாங்க வேலைகள் துவங்கப்பட்டு, இன்றைக்கு முதல் கட்டமாக 10,000-க்கு மேற்பட்ட பெண்களுக்கு, சுய வேலைவாய்ப்பு உதவிகள் வழங்கப்படுகின்றன.

பெண்களின் முன்னேற்றத்திற்கு, கல்வியறிவும், அவரவர்களின் பொருளாதார நிலையில் உயர்வும் மிகவும் முக்கியமானவை. பெண்களை முழுவதும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக மாற்ற, அறிவொளி இயக் கத்தை இந்த அரசு தீவிரமாகச் செயல்படுத்தி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

ஒரு இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் எங்களின் இந்த உன்னத முயற்சி, தமிழ்நாட்டில் பெண்களின் முன்னேற்றத்தில் ஒரு சாதனைச் சரித்திரத்தைப் படைக்கும் என்று நம்புகிறேன்.

இம்மாவட்டத்தில் தொடங்கப்பட்ட அன்னை இந்திரா காந்தி சாக்குக் கட்டி உற்பத்தி செய்யும் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் 9.2.1987-இல் சாக்கு கட்டி உற்பத்தியைக் கூனியூரில் தொடங்கியது.


விவசாயத் தொழிலே முக்கிய தொழிலான இப்பகுதியில் மகளிர்க்கு மாற்றுத் தொழிலாக இச் சாக்குக்கட்டி உற்பத்தியாளர் மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைந்துள்ளது. இச் சங்க 71 உறுப்பினர்களின் பங்குத் தொகையாக ரூ.2,710 அரசுப் பங்குத் தொகை ரூ.7,500 தமிழக அரசுப் பயிற்சி மானியம், நடைமுறை மூலதானமானியம் என்று ரூ.3,45,060 வழங்கியுள்ளது. 1992-93-இல் நிகர இலாபமாக ரூ.26,295 பெற்றுச் செயல்பட்டு வருகிறது. அரசுப் பணிகள், தனியார் பள்ளிகள் பொறியியல் கல்லூரி மற்றும் தனியார் கல்லூரிகளுக்குச் சாக்குகட்டி விற்பனை செய்து வருகிறது. அலங்காரப் பொருள் தயார் செய்து விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசு பள்ளி மாணவ மாணவியர்க்கு, இலவசக் காலணி வழங்கும் திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இலவசக் காலணி உற்பத்திக்காக மகளிர்க்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் காலணி மகளிர் மேம்பாட்டுத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டு ஆகும்.

வாசுதேவநல்லூர் காலணி உற்பத்தியாளர் மகளிர் மேம்பாட்டுக் குடிசை தொழிற் கூட்டுறவுச் சங்கம் 8.1.1988 அன்று தனது காலணி உற்பத்தியை ராயகிரியில் தொடங்கியுள்ளது. மகளிர் காலணித் தொழிலாளர்கள் 62 பேர்கள் உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கத்தில், உறுப்பினர்கள் பங்குத் தொகையாக ரூ.620 செலுத்தியுள்ளார்கள் 1992-93, 7,692 செட் காலணிகள் உற்பத்தி செய்து விநியோகம் செய்துள்ளது. இச்சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள்.

காலணித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட இன்னொரு மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் குருக்கள்பட்டி காலணி உற்பத்தியாளர் மகளிர் மேம்பாட்டு கூட்டுறவுச் சங்கம் ஆகும். இச்சங்கம் குருக்கள்பட்டியில் காலணி உற்பத்தியை 11.1.1988-ஆம் ஆண்டு தொடங்கியுள்ளது. மகளிர் காலணித் தொழிலாளர்கள் 84 பேரை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கம் 1992-93-இல் 10,366 இணை காலணி உற்பத்தி செய்து விநியோகம் செய்துள்ளது.

மேற்கண்ட சங்கங்களில் காலணிச் சங்கங்கள் தவிர அனைத்துச் சங்கங்களும் இலாபத்தில் இயங்கி வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களுக்கு தினம் ரூ.20 முதல் 25 வரை கூலியாக வழங்கி, ஆதிதிராவிடர் மற்றும் பின்தங்கிய வகுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியுள்ளது.




# இதன் வயது 100

கல்வியில் சிறந்த தமிழகத்தில், திருநெல்வேலியில் பாளை மாநகரில் உள்ள தனிப் பெருமை வாய்ந்த கல்வி நிறுவனங்களில் ஒன்று சாராள் தக்கர் மேனிலைப் பள்ளி. நூறாவது ஆண்டு நிறைவு விழாவை நோக்கிப் பீடுநடை போடுகின்ற இப்பள்ளிக்கெனச் சீரிய வரலாறு உண்டு.

இந்தியத் திருநாட்டில், தனது திருவடி களைப் பதிக்காமலேயே, அங்குள்ள பாவையரைப் பார்க்காமலேயே, அவர்கள் மீது பேரன்பு கொண்ட, கருணை உள்ளம் படைத்த ஒருவரின் பெயரால் உருவானதே இப்பள்ளி என்பது நம்மில் பலருக்கும் தெரியாத உண்மையாகும். அவர் யார்?

அவர் தான், செல்வி சாராள் தக்கர்.

**செல்வி சாராள் தக்கர்:**

''அடுப்பூதும் பெண்களுக்குப் படிப் பெதற்கு'' என்ற நிலை மாறி, 'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கு இளைப்பில்லை' என்ற நிலை ஏற்பட வழிவகுத்தவர்கள் மேலை நாடுகளிலிருந்து இங்கு வந்து, இறைப் பணியோடு, கல்விப் பணியையும் இணைத்துச் செய்த நற்செய்திப் பணியாளர்கள் ஆவர். அவர்களுள் ஒருவரே இங்கிலாந்து நாட்டிலிருந்து இங்கு வந்து, சென்னை யில் திருச்சபைத் திருத்தொண்டர் கழகச் (சி.எம்.சி.) செயலராகப் பணியாற்றிய அருள்திரு ஜான் டக்கர் ஆவார். அவரது அன்புச் சகோதரியே செல்வி சாராள் தக்கர்.

செல்வி சாராள் தக்கர் உடல் ஊன முற்றவர். ஆனால், உள்ளத்தில் ஊனம் அற்றவர். ஒளி படைத்த கண்களையும், உறுதி கொண்ட நெஞ்சினையும் உடை யவர். பிறர் நலம் பேணும் நெறியாளர். உலக மீட்பராம் இயேசு கிறிஸ்துவைத் தனது ஊன்றுகோலாகப் பள்ளி கொண டவர். நெல்லையில் நடந்த பல்வேறு அருட்பணிகளையும், சமூகப் பணிகளை யும் தனது தமையனார் மூலம் அறிந்து அதிக மகிழ்ச்சி கொண்டார். குறிப்பாக, பின்தங்கிய நிலையில் வாடும் மக்களின் நலன் கருதி நடத்தப்பட்ட முன்னேற்றப் பணிகளில் தானும் ஈடுபட வேண்டும் என ஆர்வம் கொண்டார். ஆனால், ஊனமுற்ற அவரது உடல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. எனினும் மனம் தளராமல், படுக்கையிலிருந்தே இந்தியப் பெண்களின் முன்னேற்றப் பணிகளுக்கு உதவிட உறுதி பூண்டார். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் அன்றோ? படுக்கையிலிருந்த போது, ஆடைகள் பின்னியும், நண்பர்களுக்குக் கடிதம் எழுதியும் நிதி திரட்டினார். 1843-ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்தில் கடாட்ச புரம் என்ற ஊரில் தொடங்கப்பட்ட பெண்களுக்கான ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கான கட்டட நிதிக்குச் செல்வி சாராள் தக்கர் அனுப்பிய 20 பவுன் பயன்பட்டது.

1857-ஆம் ஆண்டு, இந்திய வரலாற் றில் பொன்னெழுத்துக்களால் பொறிக் கப்படும் சிறப்பு மிக்க ஆண்டு 'சிப்பாய்க் கலகம்' எனச் சிறப்பாக அழைக்கப்படும் 'முதல் இந்தியச் சுதந்திரப் போர்' தோன்றிய ஆண்டு அவ்வாண்டின் இறுதியில் டிசம்பர்த் திங்கள் 12-ஆம் நாள், நெல்லையின் கல்விப் பணியிலும் சமுதாயப் பணியிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த செல்வி சாராள் தக்கர் இவ்வுலக வாழ்வினின்றும் விடுதலை பெற்று, நிலைத்த பேரின்ப வாழ்வினைப் பெற்றார்.

**பள்ளியின் தோற்றம்:**

1858-இல் இப்போதிருக்கும் சாராள் தக்கர் மேனிலைப் பள்ளிக் கருகில் ஒரு வீட்டில் மிகக் குறைந்த அளவு மாணவி யரைக் கொண்டு அன்று ஓர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியாகச் சாராள் தக்கர் மேனிலைப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. நற்செய்திப் பணியாளர்களாகிய 'டிப்' தம்பதியர், செல்வி ரிச்சர்ட்ஸ், மறைதிரு A.H. லஷ் போன்றோரது அரும்பணி யால் கல்விப் பணி வளர்ந்தது இத்தகைய தியாகச் செம்மல்களில் சீரிய பணி யினைக் கண்ட பெற்றோர் தமது பெண் குழந்தைகளை மனமுவந்து கல்வி கற்கப் பள்ளிக்கு அனுப்பினர். மேல்பாளையம், தென்காசி, அம்பாசமுத்திரம், நல்லூர் போன்ற இடங்களில் பல கிளைப் பள்ளிகள் தொடங்கப்பட்டன. சென்னை மாநிலம் முழுமைக்கும், இலங்கை, மொரிசியசுக்கும் கூடத் தேவையான ஆசிரியைகளைச் சாராள் தக்கர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி உருவாக்கியது. செல்வி சாராள் தக்கரின் பெயரால் மாவட்டம்

முழுவதும் தோன்றிய நிறுவனங்களின் மையமாக அது இருந்தது.

**பார்வையற்றோர் பள்ளி**

மேலை நாட்டு நற்செய்தியாளர்கள் தொண்டுள்ளம் கொண்டவர்கள் என்பதற்கு மேலும் ஒரு சான்றாக அமைவதே பார்வையற்றோர் பள்ளியாகும். அப் பள்ளி உருவான விதமே சுவையானது. சாராள் தக்கர் நிறுவனங்களின் நிர்வாகியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர் திருச்சபைத் திருத் தொண்டர் கழக நற்செய்திப் பணியாளர் செல்வி ஏ.ஜே. ஆஸ்குவித் என்னும் ஆங்கில அம்மையார். 1888-ஆம் ஆண்டு ஒரு நாள் பார்வையற்ற சிறுவன் ஒருவன் தனது வயிற்றுப் பசியைப் போக்க, பள்ளி வளாகத்தை நாடி வந்தான். ஆனால், தான் வந்திருக்குமிடம் அறிவுப் பசிக்கு உணவு வழங்கும் பள்ளிக்கூடம் என்பதை அறிந்தவுடன் புறக்கண்கள் அற்ற தனது அகக் கண்களைத் திறக்குமாறு அம்மையாரை வேண்டினான். சிறுவன் மீது பரிவு கொண்ட அம்மையார், முதலில் கண் தெரிந்த பிள்ளைகளோடு சேர்த்து அவனுக்குக் கற்பித்தார். 1890-இல் அரசு அனுமதியுடன் பார்வையற்ற குழந்தைகளுக்கான முதல் வகுப்பைத் தொடங்கினார் இவர் 'மூம்' (Moom) முறையில் கல்வி கற்பித்தார் டெய்லர் பிரேம் (Taylor Frame) என்ற குருந்தொகைச் சட்டத்தைத் துணைக் கருவியாகக் கொண்டு கணிதம் கற்பித்தார். 1892-இல் விடுதியில் மாணவர்கள் சேர்க்கப் பட்டனர். 1908-இல் இப்போதிருக்குமிடத்திற்கு அது மாற்றப்பட்டது.

**செவிடுஊமையர் பள்ளி**

செவிடுஊமையர் பள்ளி என்றவுடன் நமது சிந்தையை நிறைப்பவர் செல்வி பிளாரன்ஸ் சுவெயின்சன் அம்மையார் ஆவார். இவர் ஆசிரியர் பணியோடு சமுதாயப் பணியையும் இணைத்துப் புரிந்தார். அவரிடம் தையல் கற்றுக் கொள்ள வந்த பெண்களில் மூவர் ஊமையர். அவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் அன்பினை எடுத்துரைத்தார். மேலும் அவர்களது நலன் கருதி, சாராள் தக்கர் பள்ளியில் ஒரு பிரிவாகச் செவிடு ஊமையர் பள்ளியை ஆரம்பித்தார். படங்களையும் எழுத்துக்களையும் காட்டிக் கருத்துக்களை அறிந்து கொள்ளச் செய்தார். இதனைக் கண்டு பலரும் இப் பள்ளியில் சேர்ந்தனர். மாணவிகளின் தொகை பெருகவே இன்றைக்கும் பிளாரன்ஸ் சுவெயின்சன் செவிடு ஊமையர் பள்ளியைப் பல கட்டடங்களுடன் பெரிதாக்கி ஒரு கல்வி நிலையமாக்கினார். தம் பொருள் அத்தனையையும் அதற்கென அர்ப்பணித்தார்.

**உயர்நிலைப் பள்ளி**

1890-இல் சாராள் தக்கர் பள்ளியின் உயர் நிலை வகுப்புகள் ஐந்தே மாணவியரோடு தொடங்கப்பட்டன. 6 ஆண்டுகளுக்குப்பின் 4 மாணவியருடன் கல்லூரி வகுப்புகள் தொடங்கப்பட்டன. Senior inter வகுப்பில் 3 பேரும் Junior inter வகுப்பில் ஒருவரும் கல்வி கற்றனர். அத்தி பூத்தாற்போலும் கார்த்திகைப் பிறை போலும் கல்லூரியில் கற்க வந்த பெண்களை ஊக்குவிக்க மாதந்தோறும் 4 வெள்ளி ரூபாய்களும் உண்ண உயர் வகை உணவும், உறங்க நல்ல கட்டில்களும் கொடுக்கப்பட்டன. இவ்வாறு பெண் கல்வி ஊக்குவிக்கப்பட்டது.


**முப்பெரும் நிறுவனங்கள்**


தென்னகத்தில் பெண் கல்வியில் மாண்பினைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் சாராள் தக்கர் கல்லூரி, விழியற்றோருக்குக் கல்வியாகிய ஒளி வழங்கும் பார்வையற்றோர் பள்ளி, தன்னம்பிக்கையற்றோருக்கு வாழ்வு வழங்கும் செவிடுஊமையர் பள்ளி ஆகிய முப்பெரும் கல்வி நிறுவனங்கள் தோன்றிய இடம் இன்று சாராள் தக்கர் மேனிலைப் பள்ளியிருக்கும் வளாகமே என்பது குறிப்பிடத்தக்கது.

**உயர்நிலைப் பள்ளியின் வளர்ச்சி**

1900-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 26-ஆம் நாளில் தற்போதுள்ள உயர் நிலைப் பள்ளிக் கட்டடம் அப்போது வைஸ்ராய் ஆக இருந்தது கர்சன் பிரபுவால் திறக்கப்பட்டது. அப்போது May Pole நடனம் மாணவியரால் ஆடப் பட்டது. கர்சன் பிரபுவின் துணைவியார் நடனத்தை மிகுந்த ஆர்வத்தோடு கண்டு களித்துப் பாராட்டினார்.

1896-இல் இறை வழிபாட்டிற்கெனச் சிற்றாலயம் கட்டப்பட்டது. அப்போதிருந்த நெல்லை மாவட்ட ஆட்சியாளரின் மனைவியார் அடிக்கல் நாட்டினார். ஆட்சியாளர் ஆலய மணியைப் பரிசளித்தார். இங்கிலாந்து நாட்டு நண்பர்கள் பாடல் புத்தகங்களைப் (Golden Bells) பரிசாக அளித்தனர்.





*1897*-இல் செல்வி நைஷ் (Miss Naish) என்பாரின் அரு முயற்சியால் மாணவியர் மத்தியில் 'கிறிஸ்துவுக்குள் வாலிபர் சங்கம் (YFCA) என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

*1910*-இல் செல்வி ஆங்குவித் அம்மையாரால் சாராள் தக்கர் பழைய மாணவியர் சங்கம் (STOGA) ஏற்படுத்தப் பட்டுச் சிறப்பாகச் செயல்படத் தொடங் கியது.

*1924*-இல் செல்வி சேம்பர்ஸ் அம்மையாரால் சாரணர் இயக்கம் தொடங்கப்பட்டது. மாணவியர் பல துறைகளிலும் சிறந்து விளங்க, அத்தகைய அமைப்புகள் பெரிதும் உதவின.

*1934*-இல் இட நெருக்கம் காரண மாக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியின் ஒரு பிரிவு பழைய பேட்டைக்கு மாற்றப் பட்டது. *1947*- ஆம் ஆண்டு பாளையங் கோட்டை நகராட்சிக்குட்பட்ட பெருமாள் புரத்திற்குத் தெற்கில் *40* ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, அங்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. கல்லூரி புதிய இடத்திற்கு நகர்த்தப்பட்டது. செல்வி ஆங்குவித், செல்வி பிளாரன்ஸ் சுவெயின்சன், செல்வி பாசன், செல்வி வின்ட்சி போன் றோரின் அரும்பணியால் பள்ளி வளர்ந்து பெருகியது.

*1945*-ஆம் ஆண்டு முதல் பாடங்கள் தமிழில் படித்துக் கொடுக்கப்படுகின்றன.

*1950*-ஆம் ஆண்டில் நர்சரி (Nursery) பள்ளிக்கூடம் தொடங்கப்பட்டது. *1958*-இல் நூற்றாண்டு விழா கொண் டாடப்பட்டது. *1962*-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் முதல் ஆறாம் வகுப் பிலும், அதன் மேல் வகுப்புகளில் ஒரு பிரிவில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத் தில் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இடை நிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கென இப்பள்ளியில் வடகிழக்குப் பாகத்தில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. *1963*-ஆம் ஆண்டு மே மாதத்தில் அரசின் நிதி உதவி கொண்டு மாணவி யருக்கென விடுதி ஒன்று கட்டப்பட்டது. *1967*-ஆம் ஆண்டு முதல் தட்டெழுத்து, மனையியல் பாடங்கள் கற்றுக் கொடுக்கப் படுகின்றன. *1968*-ஆம் ஆண்டு அரசின் நிதி உதவியால் அதற்குரிய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. *1969*-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் அரசின் நிதி உதவியால் *4* வகுப்பறைகள் கட்டப் பட்டன. *1978*-ஆம் ஆண்டு உயர் நிலைப் பள்ளி மேனிலைப் பள்ளி யானது. *1981*-ஆம் ஆண்டு *6* வகுப் பறைகள் கட்டப்பட்டன.

**பெற்றோர் ஆசிரியர் கழகம்**

*1979*-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள் நிறைந்த குறிக் கோள்களைக் கொண்டு பெற்றோர் ஆசிரியர் கழகம் தொடங்கப்பெற்றுச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது.

**இன்றைய நிலை**


ஐந்தே மாணவியரோடு தொடங்கப் பட்ட சாராள் தக்கர் உயர்நிலைப் பள்ளி இன்று ஏறத்தாழ ஐயாயிரம் மாணவிய ரோடு சாராள் தக்கர் மேனிலைப் பள்ளியாகச் சிறந்த கல்வியினை மகளிர்க்கு வழங்கி வருகிறது. பத்தாம், பன்னிரெண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் - நெல்லைத் திருமண்டலப் பள்ளிகளில் சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறது. தொடர்ந்து பல ஆண்டுகள் 95 சதவிகிதத்துக்கு மேலேயே தேர்ச்சி பெற்று வருகிறது.

மாணவியர் இறை உணர்வும் சீரிய ஒழுக்கமும் உடையவர்களாய் விளங்க வேண்டுமென்று சன்மார்க்கப் போதனைகள் வழங்கப்படுகின்றன. நெல்லைத் திருமண்டல வேதாகமத் தேர்வில் தொடர்ந்து பல ஆண்டுகள் முதலிடம் பெற்றதால், கேடயம் பள்ளிக்கே நிரந்தரமாக அளிக்கப்பட்டுள் ளது. இசை, ஓவியம், கட்டுரை, சொற் பொழிவு ஆகிய போட்டிகளிலும் பெருமளவு கலந்து, பற்பலப் பரிசுகளைப் பெற்று வருகிறது.

விளையாட்டுத் துறையில் சாராள் தக்கர் மேனிலைப் பள்ளியின் பங்கு குறிப்பிடத்தக்கது. விளையாட்டுப் போட்டி களில் நெல்லை மண்டலப் பள்ளிகளில் மிகச் சிறந்த பள்ளி என்ற பெயரினைப் பெற்றுள்ளது.

விவசாயிகளின் பார்வைக்கு:

# நெல்லையில் நெல் குவிக்கும் சகோதரர்கள்!



விடாமுயற்சி, உழைப்பு, தன்னம்பிக்கை - இம்மூன்றும் வாழ்க்கையில் உயர்வதற்கான படிகள் என்பதைத் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கங்கை கொண்டானை அடுத்த கோட்டையடி கிராமத்தைச் சேர்ந்த திரு எம். பூல்பாண்டி அவர்கள் உணர்ந்திருக்கிறார். இல்லையென்றால், தமிழக அரசின் பரிசுகளை இருமுறை இவர் பெற்றிருப்பாரா?

**ஏப்படி? அது ஒரு கதை!**

1992-93-ஆம் ஆண்டு, கடந்த ஆண்டைப்போல் பல்வேறு பயிர்களுக்கு விளைச்சல் போட்டி நடத்துவதற்கு அரசு அனுமதி அளித்திருந்தது. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நெற்பயிருக்கு மாநில முதல் பரிசாக ரூ.50,000-க்குப் பதில், ரூபாய் ஒரு இலட்சமாக மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணைப்படி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். இது வேளாண்மை அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் வேளாண்மை வளர்ச்சிக்காக அறிவித்த 21 அம்சங்களில் ஒன்றாகும். இதன்படி, பயிர் விளைச்சல் போட்டியில் மாநில முதல் பரிசாக, எல்லாப் பயிர்களுக்கும் பரிசுத்தொகை கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிருக்கு ஒரு இலட்சமும், நிலக்கடலை (இறவை)-க்கு ரூ.10,000-மும், பயிர்களுக்குத் தலா ரூ.5,000-மும் அறிவிக்கப் பட்டுள்ளது.

தஞ்சைத் தரணி தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என்றால், பரணி பாயும் தரணி நெல்லை அள்ளிக் கொடுப்பதில் சிகரம் எனலாம். அந்தவகையில் கடந்த ஆண்டு மாநிலத்திலேயே முதல் விளைச்சலைக் கண்ட நெல்லை விவசாயி, இந்த ஆண்டும் அதே சாதனை யைத் தொடர்ந்து படைத்துள்ளார். இச் சாதனையின் சிகரமாகக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு அபரித மான மகசூல் எடுத்துள்ளார்.

**அவர் செய்த சாதனை தான் என்ன?**

இவ்வாண்டு கங்கைகொண்டான் கிராமம் கோட்டையடி திரு எம். பூல்பாண்டி அவர்கள் மாநில நெல் விளைச்சல் போட்டியில் எக்டேருக்கு 26,921 மகசூல் எடுத்துள்ளார்.


இவரது நிலம் கோட்டையடிக் கிராமத்தில் சிற்றாறுப் பாசனப் பகுதியில் ஒருபோக நஞ்சையாகும். அந்த நிலம் வண்டல் கலந்த கரிசலாகும். வடிகால் வசதி மற்றும் பாசன வசதிகளை மேம்பட்ட முறையில் கொண்டது. சிற்றாறு மூலம் காலத்தில் பாசனமும், கிணறு மூலம் இதரக் காலங்களில் பாசனமும் பெறும் வசதி கொண்டது. இயற்கையாகவே நல்ல வளம் கொண்ட நிலம்.

இவர் கடந்த ஆண்டைப்போல் இந்த ஆண்டும் நெல் விளைச்சல் போட்டியில் மாநில முதல்பரிசு பெறவேண்டும் என்ற அவாவில் சாகுபடி முயற்சிகளை மேற்கொண்டார். இதற்காக அடிப்படையான வித்துத் தேர்வில் கவனம் செலுத்தி அதற்கான ரகம் ஒன்றினைத் தேர்வு செய்தார். அது சாவித்திரி அல்லது பொன்மணி என்று அழைக்கப்படும் சி.ஆர்.1009 என்ற ரகம் ஆகும். தன்னிடமிருந்த விதையை விட, துறையில் சான்றிதழ் பெற்ற விதையைப் புதிதாக வாங்கவேண்டும் என்று, வேளாண்மை விரிவாக்க மையத்திலிருந்து பெற்று வந்தார்.

விதைகளை வாங்கி வந்த உடன், ஏக்கருக்கு 20 கிலோ என்ற அளவில் எடுத்து விதைநேர்த்தி மருந்து-கார்பெண்டாகிம் கிலோவுக்கு 2 கிராம் வீதம் விதைப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் கலந்தார். பின் முளைகட்டிய விதைகளுடன் 20 கிலோ விதைக்கு 2 பொட்டலம் அசோஸ்பைரில்லம் கலந்து பின் விதைத்தார்.

ஒரு ஏக்கருக்கு 8 செண்ட் அளவு நாற்றங்காலை, கிணற்று அருகில் வடிகால் வசதியுடன்கூடிய பகுதியில் தேர்வுசெய்து, இரண்டு வண்டி தொழு உரம் இட்டு உழுது மேட்டுப் பாத்தி நாற்றங்கால் அமைத்தார். விதைக்கும் முன் நாற்றங்காலுக்கு அடியுரமாகச் செண்டுக்கு இரண்டு கிலோ வீதம் 16 கிலோ டிஏபி இட்டார். இத்துடன் 8 செண்டுக்கு 4 பாக்கட் அசோஸ்பைரில்லம் இட்டார். நாற்றங்காலுக்கு முன் பாதுகாப்பாக விதைத்த 18-ஆம் நாள் 1400 கிராம் கார்போபியூரான் குருணை மருந்து இட்டார். நாற்றுக்களை 45- வது நாளில் பிடுங்கி நட்டார். நடுவதற்கு முன் ஏக்கருக்கு 4 பொட்டலம் அசோஸ்பைரில்லம் கரைசலில் நாற்றுக்களின் வேர்களை 15 நிமிடம் நனைத்து நட்டார்.

நடவு வயலுக்கு 500 ஆடுகள் கொண்ட அட்டுக்கிடை 9 நாட்கள் அமர்த்தி இருந்தார். அதன்பின் சணப்பு விதைத்து 25-ஆம் நாள் மடக்கி உழுது அதனுடன் அடியுரமாக ஏக்கருக்கு 10 டன் தொழு



உரம் இட்டு டிராக்டர் கொண்டு தொழி கலக்கினார்.

அடியுரமாக ஏக்கருக்கு டி.ஏ.பி. 75 கிலோ இட்டார். நடவுக்கு முன் ஏக்கருக்கு 10 கிலோ சிங்சல் பேட்டும் 4 பாக்கட் அசோஸ் பைரில்லம் இட்டார்.

நடவு இடைவெளி 20-க்கு 10 செ.மீட்டர் என்ற அளவில் நாற்றுக் களை குத்துக்கு இரண்டு நாற்றுக்கள் வீதம் மேலாக நட்டார். நட்ட வயலில் சதுர மீட்டருக்கு 50 தூர்கள் இருந்தன.

மேலுரமாக நட்ட 30-ஆம் நாள் முதல் களை எடுத்த உடன் ஏக்க ருக்கு 100 கிலோ கடலைப் புண்ணாக்கு, 50 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 50 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ பொட்டாஷ் இட்டார். இரண்டாவது முறையாக நட்ட 50-ஆம் நாள் ஏக்கருக்கு 50 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ பொட்டாஷ் இட்டார். மூன்றாம் தடவையாக நட்ட 80-ஆம் நாள் ஏக்கருக்கு 50 கிலோ யூரியா மற்றும் 50 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டார்.

பூச்சி நோய்களுக்கு எதிராக 45-ஆம் நாள் எண்டோசல்பான் ஏக்கருக்கு 300 மில்லி, 60-ஆம் நாள் கார்பெண்டாசிம் ஏக்கருக்கு 100 கிராம், 90-ஆம் நாள் பென்தியான் ஏக்கருக்கு 200 மில்லி. மருந்துகளை அவை தோன்றியபின் தேவை என்ற தருணத்தில் அடித்துள்ளார்.

நீர் நிர்வாகத்தில் ஒவ்வொரு மேலுரம் இட்டபின் ஒரு வாரத்திற்கு 5 செ.மீட்டர் உயரத்திற்கு நீர்கட்டியிருந்தார். இதர தருணத்தில் பாசனத்தைக் காய்ச்சல், பாய்ச்சல் என்ற முறையில் கையாண்டார். களை கட்டுப்படுத்த இரண்டு தடவை கைக்களை மேற்கொண்டார். முதல் முறை கடலைப்புண்ணாக்கு இட்ட பின்னும் அதாவது 30-ஆம் நாளும் அதன்பின் 45-ஆம் நாளும் களை எடுக்கப்பட்டது. பயிர் 165-ஆம் நாள் முதிர்ச்சி பெற்று அறுவடை செய்யப்பட்டது.

**உயர்விளைச்சல் பெறக் காரணம் என்ன?**

1. வடிகால் மற்றும் பாசனப் பிரச்சினை அற்ற செழிப்பான வண்டல்நிலம் தேர்வு.
2. ஒருபோக நெல் சாகுபடி மற்றும் முன்பயிராகச் சோயாப் பயிரும் உரப்பயிராகச் சணப்பும் பயிரிட்டது.
3. சரியான ரகத் தேர்வு - சி.ஆர்.1009 - நீண்டகால வித்து, உயர்விளைச்சல் ரகம்.
4. தாராளமாகத் தொழு உரம் இட்டது.
5. சிபாரிசுப்படி நுண்ணுரம் (சிங்சல்பேட் - 10 கிலோ / ஏக்கர்) மற்றும் உயிர் உரம் (அசோஸ் பைரில்லம்) இட்டது.
6. போதிய பயிர் எண்ணிக்கை பராமரித்தது.
7. மேல் உரமாக இரசாயன உரத்துடன் கடலைப்புண்ணாக்கு மற்றும் வேப்பம்புண்ணாக்கு இட்டது. இதனைப் பகுதியாக மூன்று தடவைப் பிரித்து அளித்தது.
8. முறையான நீர்ப்பராமரித்தது.
9. தேவைக்குத் தக்க தருணத்தில், பயிர்ப்பாதுகாப்பு மற்றும் ஆட்கள் கொண்டு களை எடுத்தது.

1991-92-ஆம் ஆண்டில் எக்டேருக்கு 18,808 கிலோ விளைச்சலும், 1992- 93-ஆம் ஆண்டில் 26,921 கிலோ விளைச்சலும் கண்டு மாநிலத்திலேயே சாதனை புரிந்தவர் திரு. எம். பூல்பாண்டி அவர்கள்.

இவருக்கு 80 ஏக்கர் பண்ணை உள்ளது. இந்தப் பண்ணையில் கரும்பு, மிளகாய், பருத்தி, சோயா, ராகி, வாழை ஆகியவற்றையும் பயிர் செய்கிறார். இந்தப் பண்ணையில் ஒரு டிராக்டர் உள்ளது. 20 பேர் வேலை செய்கிறார்கள். அதிகாலை 4 மணிக்கே எழுந்து விடுகிறார் இவர். பண்ணையைப் பார்வையிடுகிறார். பயிர் விளைச்சலைக் கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார். இவருக்கு வலது கரமாய் இருந்து வருபவர், இவரது அண்ணன் திரு. வெள்ளைப்பாண்டி அவர்கள்.

பயிர் விளைச்சல் போட்டியில் அமோக விளைச்சல் கண்ட திரு. எம். பூல்பாண்டி அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறினார் -

''நானும், என்னுடைய அண்ணனும் இணைந்து விவசாயம் செய்கிறோம். என்னுடைய சகோதரர் பயிர் விளைச்சலில், மாவட்ட அளவில் கடந்த இரண்டு ஆண்டுகளாக ரூ.10,000 பரிசுகள் பெற்றுள்ளார்.


''கடந்த ஆண்டு சோயா உற்பத்தியில் அதிக மகசூலுக்காக, பொள்ளாச்சி திரு. என். மகாலிங்கம் அவர்கள் மூலமாக முதல் பரிசாக ரூ.50,000 பெற்றுள்ளோம்'' என்று மகிழ்ச்சியுடன் கூறிய அவர், தம் ஆசையையும் பணிவுடன் வெளியிட்டார்:

''வேளாண்மைத்துறையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்க வேண்டும். சாதனை மேல் சாதனை குவிக்க வேண்டும். இது எங்கள் குறிக்கோளும் ஆகும்.

''எங்களைப் போன்று விவசாயப் பெருங்குடி மக்களும் முன்னேற வேண்டும். உணவு உற்பத்தியில் ஒவ்வொரு விவசாயியும் சாதனை புரிந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் உதவியாக இருக்க வேண்டும்'' என்று பெருமிதத்துடன் கூறினார் அவர்.

**மாவட்ட அளவிலான பரிசை, திரு. வெள்ளைப் பாண்டி அவர்களுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர்.வேலு, இ.ஆ.ப. அவர்கள் வழங்குகிறார். வேளாண்துறை அலுவலர்கள் உடன் உள்ளனர்.**





# மக்கள் நல்வாழ்வில் மருத்துவமனையின் பங்கு

**திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி**

**தி**ருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்த மருத்துவமனை பாளையங்கோட்டையைச் சார்ந்த ஹைகிரவுண்ட் எனப்படும் விரிவாக்க இடத்தில் 350 ஏக்கர் நிலத்தில் அமைந் துள்ளது.

1965-ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு, திருநெல்வேலியில் ஒரு மருத்துவக் கல் லூரியைத் தொடங்கத் திட்டமிட்டது. சென்னைப் பல்கலைக்கழகம் அதை அனுமதித்து 1965-66-ஆம் ஆண்டில் 75 மாணவர்களை முதலாம் ஆண்டு மருத்துவப் பட்டப்படிப்பில் சேர்த்தது. அவர்கள் இதே ஊரில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தங் களது முதலாம் ஆண்டு மருத்துவப்பட்டப் படிப்பைப் பயின்றனர்.

1966-ஆம் ஆண்டு ஜூலை மாதம் புதிதாகக் கட்டப்பட்ட உடற்கூற்றியல் துறைக் கட்டடத்தில் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் முதல் அணியாகத் தங்கள் வகுப்புகளுக்குச் செல்ல ஆரம்பித்தனர். மற்ற சிகிச்சை சாரா துறைகளான, மருந்தாக்கியல் நோய்க் குறியியல், நுண்ணுயிரியல் மற்றும் சமூகம் மற்றும் நோய்த்தடுப்பு ஆகியவை ஜனவரி 1968 முதல் செயல்படத் தொடங்கின. திருநெல்வேலி மாவட்டத் தலைமை மருத்துவமனை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மருத்துவமனையாக மாற்றப்பட்டது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டான 1967-லிருந்து 1988-ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மேற்சொன்ன பல் கலைக் கழகத்தைச் சார்ந்திருந்தது. அதற்குப் பிறகு ஜூலை 1988 முதல் இக் கல்லூரி புதிதாக அமைக்கப்பட்ட டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல் கலைக் கழகத்தைச் சார்ந்துள்ளது. இக் கல்லூரி வளாகத்தினுள் மருத்துவ மாணவ மாணவியருக்கான தனித்தனி தங்கும் விடுதிகள் கட்டப்பட்டு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

இக்கல்லூரி 1978-ஆம் ஆண்டு புதுடில்லியிலுள்ள இந்திய மருத்துவக் கவுன்சிலின் அங்கீகாரம் பெற்றது.

11.8.80-இல் இம்மருத்துவக் கல்லூரி யில் மாணவர்கள் சேர்க்கை இடங்களை 75-லிருந்து 100 ஆக உயர்த்தி ஆணை யிட்டுள்ளது. மேலும் 1980-ஆம் ஆண்டு முதல் மருத்துவப் பட்டப்படிப்பில் சேரும் மாணவர்களுக்கான குறைந்த அளவு கல்வித் தகுதி மேல்நிலைப் பள்ளிப் படிப்பில் தேர்ச்சிப் பெற்றால் போது மானது என்றும் அனுமதித்துள்ளது.

இக்கல்லூரியில் எல்லா வசதிகளுடன் கூடிய நூலகம் ஒன்று உள்ளது. பட்டப் படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு மாண வர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகி யோரின் தேவைகளுக்கேற்ப போதுமான பாடப்புத்தகங்கள், நாளிதழ்கள், பல வகையான மருத்துவ விவரங்களை உள்ள டக்கிய காலமுறை ஏடுகள் ஆகியவை வாங்கி வைக்கப்பட்டும் மேலும் தருவிக் கப்பட்டும் வருகின்றன.

**கிராம ஒருங்கிணைந்த மருத்துவக் கல்வித் திட்டம் (ரோம்)**

ரோம் திட்டம் செப்டம்பர் 1980-இல் அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டது. கீழ்க் கண்ட மூன்று ஆரம்பச் சுகாதார நிலை யங்களிலும் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சார்ந் துள்ளன.

1. ஆரம்பச் சுகாதார நிலையம், பத்தமடை
2. ஆரம்பச் சுகாதார நிலையம், தென்திருப்பேரை
3. ஆரம்பச் சுகாதார நிலையம், திசையன்விளை.

களக்காடு பிரிடா மோனியர் மருத் துவமனை 10.10.74 முதல் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சார்ந்த அரசினர் மருத்துவமனையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர்கள் மற்றும் உள்ளிருப்பு மாணவர்கள் அணி அணியாக ஆரம்பச் சுகாதார நிலையங் களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கிராமச் சூழ்நிலை பற்றி அறிந்து வரு கின்றனர். பலதுறைகளைச் சார்ந்த சிறப்பு மருத்துவர்கள் மாணவர்களுடன் அங்கு சென்று கிராமப்புற நோயாளி களுக்குச் சிகிச்சையளிப்பது பற்றி பயிற்சி யளிக்கின்றனர். சமூகம் மற்றும் நோய்த் தடுப்புத்துறைப் பேராசிரியர் இத்திட்டத் தின் பொறுப்பு அலுவலர் ஆவார்.

**நடமாடும் கண் மருத்துவ பகுதி**

கண் மருத்துவத்துறையைச் சார்ந்த இப்பகுதிப் பணியாளர்கள் திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட் டங்களைச் சார்ந்த கிராமங்கள் மற்றும் சிறிய நகரங்களில் கண் சிகிச்சை முகாம் களை அமைத்து அங்குள்ள பொது மக்களுக்கு இலவசமாகக் கண் மருத்துவச் சிகிச்சைகள் செய்து வருகின்றனர்.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 821 படுக்கை வசதி களுடன் சிறப்புத் துறைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொண் டுள்ளது. கீழ்க்கண்ட துறைகள் அண்மைக் காலத்தில் மருத்துவமனையில் தொடங்கப் பட்டுள்ளன.

1. ஒட்டுறுப்பு அறுவை மருத்துவம்
2. சிறுநீரக அறுவை மருத்துவம்
3. குழந்தைகளுக்கான அறுவை மருத்துவம்
4. நரம்பியல் மருத்துவம்
5. இதயவியல் மருத்துவம்

பலதுறை ஆராய்ச்சிகளுக்கென ஒரு அதிக அளவு இருப்பு வைக்கப்பட்ட பிராணிகள் அறையும் அவற்றிற்கான ஆய்வுக்கூடமும் உள்ளன.

## திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை

**தி**ருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 1968-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டத் தலைமை மருத்துவமனையாக இருந்துவந்த கட்டடம் மருத்துவக் கல்வித்துறைக்கு 1968-ஆம்

ஆண்டு நவம்பர் மாதம் ஒப்படைக்கப் பட்டது.

இம்மருத்துவமனை முறையே திருநெல்வேலி-கட்டபொம்மன், சிதம் பரனார் மற்றும் கன்னியாகுமரி மாவட் டங்கள், திருநெல்வேலி, பாளையங் கோட்டை, மேலப்பாளையம் ஆகிய நக ராட்சிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். மருத்துவமனையின் படுக்கைகள் 7.9.72-இல் 325-லிருந்து 407-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் 1979-ஆம் ஆண்டில் படுக்கைகளின் எண்ணிக்கை 715 ஆக உயர்ந்துள்ளது. அதன்பின்பு 715-லிருந்து 795 ஆக உயர்ந்துள்ளது. தற்சமயம் மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 821 ஆகும்.

1980-81-ஆம் ஆண்டில் இம்மருத் துவமனையில் செவிலியர் பயிற்சிப் பள்ளி தொடங்குவதற்கான கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.47.70 இலட்சங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இரண்டு அணிகளாக மொத்தம் 40 மாணவ மாணவியர் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

1981-ஆம் ஆண்டு இம்மருத்துவ மனையில் உடல் ஊனமுற்றோருக்குச் செயற்கை அவயவ மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல் பட்டு வருகிறது.

1983-ஆம் ஆண்டு பலநோக்குச் சுகாதாரப் பணியாளர்கள் பயிற்சி மையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு மாணவி யருக்குப் பயிற்சியளித்து வருகிறது. ஆண்டிற்கு 120 மாணவிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வரு கின்றனர்.

1985-ஆம் ஆண்டு நீராவிச் சலவைக் கூடம் ஒன்று கட்டுவதற்காக அரசு ரூ.20 இலட்சம் அனுமதித்துள்ளது. கட்டடம் கட்டிமுடிக்கப்பட்டு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் நிறுவப்பட்டுள்ளன. விரைவில் நீராவிச் சலவைக்கூடம் மருத்துவத்துறையினரால் எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

1986-ஆம் ஆண்டு இம்மருத்துவ மனையில் இதயவியல், நரம்பியல் மற்றும் சிறுநீரகவியல் பகுதிக் கட்டடம் கட்டுவதற் காக ரூ.10 இலட்சம் அனுமதித்துள்ளது. மேலும் மின்னேணி (லிப்ட்) அமைப்பதற் காக ரூ.6 இலட்சம் அனுமதித்துள்ளது. இம்மருத்துவமனையில் தற்போதைய படுக்கைகளின் எண்ணிக்கை 821.

கீழ்க்கண்ட சிறப்பு மருத்துவச் சிகிச்சை வசதிகள் இம்மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வருகின்றன.

1. சிறுநீரக அறுவையியல் வெளி நோயாளி மற்றும் உள்நோயாளி
2. ஒட்டுறுப்பு அறுவைச் சிகச்சை வெளிநோயாளி மற்றும் உள்நோயாளி
3. செயற்கை அவயவமையம் வெளி நோயாளி மற்றும் உள்நோயாளி
4. நரம்பியல் அறுவைச் சிகிச்சை வெளிநோயாளி மற்றும் உள்நோயாளி
5. நரம்பியல் மருத்துவம் வெளிநோயாளி
6. நெஞ்சக அறுவை மருத்துவம் வெளி நோயாளி
7. நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் வெளிநோயாளி
8. அரசுப் பதிவுறா அலுவலர் மருந்தகம்

இத்துறைக்கு என அல்ட்ரோ சோனா கிராம் என்ற நவீனக் கருவி, குளிர்சாதன அறையில் வைக்கப்பட்டுள்ளது. இது மகப்பேறு நோயாளிகளுக்கு, நோயினை உடனடியாகக் கண்டுபிடிக்க உதவியாக உள்ளது.

இம்மருத்துவமனையில் வசதிகளுடன் கூடிய குளிரூட்டல் வசதியுடன் கூடிய இரத்தச் சேமிப்பு நிலையம் செயல்பட்டு வருகிறது. 24 மணிநேர விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பகுதி மற்றும் 24 மணிநேரமும் இயங்கும் ஆய்வுக்கூடம் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. தீவிர இதயநோய்ச் சிகிச்சைப் பகுதி குளிர்சாதன அறையில், ஆறு தனித்தனி அறைகளில் அமைந்துள்ளது. இங்கு 24 மணி நேரமும் தீவிரக் கவனிப்பு உள்ளது. மானிட்டர் போன்ற நவீன வசதிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனைப் பணியாளர் களால் கண் அறுவைச் சிகிச்சை முகாம்கள் மற்றும் குடும்பநல அறுவைச் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் இட அளவு 25.8 ஏக்கர். இம்மருத்துவமனையில் ஒன்பது அறுவைச் சிகிச்சைக்கான அரங்கங்கள் உள்ளன.

சமூகநலத்துறை மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலமாக அனுப்பி வைக்கப்படும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் இம்மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்படுகிறார்கள். தேவைப்பட்டால் அறுவைச் சிகிச்சையும் முடநீக்கியல் துறையில் செய்யப்படுகிறது. இவர் களுக்காக ஒரு தனி வார்டு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஊரும் பேரும்

திருநெல்வேலி மாவட்டம்

### பேரேரி


பேரி என்னும் சொல்லை இறுதியாகவுடைய ஊர்ப் பெயர்கள் சில உள்ளன. நெல்லை நாட்டில் சீவலப்பேரி, சுண்டியப்பேரி, அலங் காரப்பேரி, விசுவநாதப்பேரி முதலிய பேரிகள் உண்டு. பேரி என்பது பேரேரி என்று பெயர் பெற்றன.

### நாவீறுடையார்

நெல்லை நாட்டில் நாவீறுடையபுரம் என்ற சிற்றூர் ஒன்று உள்ளது. நாவீறு என்பது சொல் வின் செல்வம். அச்செல்வத்தைச் சிறப்பாகப் பெற்ற நம்மாழ்வாரை நாவீறுடையார் என்று வைணவ உலகம் போற்றுகின்றது. அவர் பெயர் கொண்டு விளங்குவது நாவீறுடையபுரம்.

### சாயர்

நெல்லை நாட்டிலுள்ள மற்றொரு சிற்றூர் சாயர்புரம் என்று பெயர் பெற்றுள்ளது. அங்கும் கிருஸ்தவர்களே பெருந்தொகையினராக வசிக் கின்றார்கள். அவ்வூரில் குடியிருப்புக்கேற்ற மனை யிடங்களை விலை கொடுத்து வாங்கியவர் சாயர் என்னும் போர்ச்சுகீசிய வணிகர். கிருஸ்தவச் சங்கத்தார் நெல்லை நாட்டிற்குச் செய்த பெரும் பணிகளை அவர் மனமுவந்து ஆதரித்தார். அவர் வழங்கிய பொருளால் எழுந்த ஊர் சாயர்புரம் என்று பெயர் பெறுவதாயிற்று.



# களிமண்ணில் கைவண்ணம்

திருநெல்வேலியிலிருந்து சுமார் 30 கி.மீ. தொலையில் அமைந்துள்ளது காருக்குறிச்சிக் கிராமம். பிரபல நாதசுரக் கலைஞர் அருணாசலம் பிறந்த ஊர் இது. இந்த ஊர் மண்பாண்டத் தொழிலுக்குப் பெயர் பெற்றது. காருக்குறிச்சி மண்பாண்டக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் பல வகையான சுட்ட களிமண் பொம்மைகள் (Terracotta Indoor Decoration Materials) தயாரிக்கப்பட்டு இந்தியா முழுவதும் விநியோகம் செய்யப்படுகிறது.

கேரளாவிலிருந்து காருகுறிச்சிக்குக் குடியேறி இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள திரு. எம்.சி. மாதவன் அவர்கள், தென்னார்க்காடு மாவட்டத்தில் காதி மற்றும் கிராமத் தொழில் வாரியத்தில் உருவ ஓவியராக (Moulder-cum-Artist) சுமார் 5 ஆண்டுக்காலம் பணியாற்றிவிட்டு, பிறகு அதிலிருந்து விலகி, இப்போது சொந்தமாக இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இவர் தமது வீட்டின் அருகாமையிலேயே ஒரு சிறிய கொட்டகையில் சுட்ட களிமண் பொம்மைகள் செய்து விற்பனை செய்கிறார். இங்கு அஜந்தா குதிரைகள், கடவுள் சிலைகள், அலங்கரிக்கப்பட்ட பூந்தோட்டப் பானைகள் (Garden Pots) போன்ற பொம்மைகள் ஏராளமாக செய்து வைக்கப்பட்டுள்ளன. ஒரு அஜந்தா குதிரை செய்து முடிக்க சுமார் 1½ நாள் ஆகுமாம்.

பொதுவாக இத்தகைய பொம்மைகள் Order-ன் பேரில் செய்யப்படுவதாகவும், பொம்மைகள் செய்து முடித்தவுடன் சம்பந்தப்பட்ட நபரே பொருட்களை இங்கு வந்து எடுத்து செல்வதாகவும் கூறுகிறார் திரு. மாதவன்.

இந்த அலங்காரப் பொம்மைகள் செய்வதற்குத் தேவையான மூலப்பொருள் களிமண் காருகுறிச்சியிலிருந்து சுமார் 4 கி.மீ. தொலைவிலுள்ள பட்டங்காடு என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. சுமார் 1½ அடி உயரமுள்ள ஒரு அஜந்தா பொம்மையின் விலை ரூ.250/-.

அண்மையில், இவருடைய பொம்மைகள் INS கட்டபொம்மன் மூலம் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த நலிந்தோர்க்கு சென்னையில் நலத்திட்ட உதவிகள் வழங்கிய போது, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இங்குத் தயாரிக்கப்பட்ட யானை பொம்மைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

திரு. மாதவன் உருவ ஓவியம் மற்றும் சிறபக் கலையில் பட்டயம் பெற்றுள்ளார். இவர் கேரளா மாநிலத்தை சேர்ந்தவராக இருந்தாலும், தமிழ்ப் பெண்ணைக் கலப்புத் திருமணம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

With Best Compliments From

Grams: 'DEEYES' Phone: 2821

**M/s D ஸ்ரீநிவாச அய்யங்கார் மளிகை**

மேலவீதி, சிதம்பரம் 608 001

கிளைகள்

கீழசன்னதி - சிதம்பரம் - சன்னதித்தெரு - ஸ்ரீ முஷ்ணம்

''தங்கள் திருப்தியே எங்கள் பாக்கியம்''

தமிழரசு இதழுக்கு எங்களது உளம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

இங்ஙனம்

**எம்.எஸ். பழனி ஆண்டவர் டிரேடர்ஸ்**

நாமகிரிப்பேட்டை

ராசிபுரம்

சேலம் மாவட்டம்




## பெரியார் மாவட்டத்தில்

# அறிவொளி இயக்கம்

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு எழுத்தறிவு மிகவும் அவசியம் என்பதை உணர்ந்த சர்வதேச வல்லுநர்கள் 1965-ஆம் ஆண்டு செப்டம்பர் 8-ஆம் தேதி டெக்ரானில் கூடி முதன்முதலாக எழுத்தறிவின்மையை எப்படிப் போக்குவது என்று ஆலோசனை செய்தார்கள். பின் இந்நாள் உலக எழுத்தறிவுத் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அதை தொடர்ந்து நம் இந்திய நாடும் எழுத்தறிவைப் போக்க பல முயற்சிகள் மேற்கொண்டு, 1995-ஆம் ஆண்டு முடிவதற்குள், 80 மில்லியன் மக்கள் எழுதப்படிக்க தெரிந்தவர்களாக மாற்ற வேண்டுமென்று தேசீய எழுத்தறிவுச் சபை முடிவு செய்து படிப்படியாப் பல்வேறு மாவட்டங்களில் இதைச் செயல்படுத்தி வருகிறது.

அறிவொளி இயக்கம் பெரியார் மாவட்டத்தில் மார்ச் 14-ஆம் தேதி தொடங்கப்பட்டு, மிகுந்த சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இம் மாவட்டத்தில் மொத்த மக்கள் தொகை 23 இலட்சம், இதில் 8.5 இலட்சம் பேர் படித்தவர்களாகவும், 13 இலட்சம் பேர் படிக்காதவர்களாகவும் உள்ளனர். கிராமப் பகுதியில் 11 இலட்சம் பேர்களும், நகர்ப் பகுதியில் 2 இலட்சம் பேர்களும் படிக்காதவர்களாக உள்ளனர். இம்மாவட்டத்தில் 15-35 வயதிற் குட்பட்டவர்கள் 3.5 இலட்சம் பேர் படிக்காதவர்களாக உள்ளனர். இவர்களை எழுத்தறிவு உள்ளவர்களாக மாற்ற மாவட்ட நிர்வாக முனைப்புடன் அறிவொளி இயக்கத்தைச் செயல்படுத்தி வருகிறது.

இம்மாவட்டத்தில் அறிவொளி இயக்கத் தொடக்க விழா மார்ச் 14-ஆம் தேதி ஆயிரக்கணக்கான மாணவர்கள், பொதுமக்கள் எழுச்சி மிகு பேரணியுடன் வ.உ.சி. பூங்காவில் திரளான மக்கள் முன்னிலையில் பெரியார் மாவட்ட ஆட்சியர் திரு. ரா. கண்ணன் , இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்ப் புத்தாண்டு அன்று மாவட்டம் முழுவதும் எல்லா வீடுகளிலும் அறிவொளித் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது. அறிவொளி இயக்கத்தின் முதல் கட்டமான எழுத்தறிவின் இன்றியமையாமையை வலியுறுத்த கலைப் பயணம் தொடக்க விழா ஏப்ரல் 18-இல் பவானி

**எம்.ஆர்.லிங்கம்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெரியார் மாவட்டம்**

# புலவர் இளஞ்செழியன் அவர்களுக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருது

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பெயரால், தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றிய தமிழ்க் கவிஞருக்கு ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கப்பட்டு வருகிறது. 1993-ஆம் ஆண்டிற்குரிய பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்க புலவர் பெ.அ. இளஞ்செழியன் அவர்களை, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தேர்வு செய்துள்ளார்.

புலவர் பெ.அ. இளஞ்செழியன் அவர்கள் ''மலர்மாமணி'' என விருது அளித்துச் சிறப்பிக்கச் பெற்றவர். இவரின் ''இளஞ்செழியன் கவிதைகள்'' என்னும் நூல் தமிழ்நாடு அரசு 1991-ஆம் ஆண்டின் இரண்டாம் பரிசினைப் பெற்றுள்ளது. பாவேந்தர் பாரதிதாசன் விருதாக புலவர் பெ.அ. இளஞ்செழியன் அவர்களுக்கு ரூ.10,000 வழங்கப் படும்.



வட்டம் வைரம்பாளையம் கிராமத்தில் நடைபெற்றது. இக்கலைக்குழு மாவட்டம் முழுவதும் 153 கலை நிகழ்ச்சிகளை நடத்தி இறுதியாக மே 13-ஆம் தேதி நிறைவு விழா ஈரோடு வட்டம் காரைபாளையத்தில் மாவட்ட ஆட்சியர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., தலைமையில், யுனிசெப் அதிகாரி டாக்டர் சரளா ராவ், சட்டமன்ற உறுப்பினர் திரு. சி. மாணிக்கம் முன்னிலையில் கலைப் பயண நிறைவு விழா நடைபெற்றது.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நான்கு பேர் மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளுக்குச் சென்று அறிவொளிப் பிரச்சாரத்தைச் செய்வதை எடுத்துக் கூறினர். மே 29,30 மற்றும் 31 தேதிகளில் முதன்மைப் பயிற்சியாளர் 10 பேருக்குப் பயிற்சி கொடுக்கப் பட்டது. இவர்கள் 150 கருத்தாளர்களுக்குப் பயிற்சி கொடுக்க உள்ளனர். இவர்கள் 2000 முதன்மைப் பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கவுள்ளனர். இவர்கள் 40,000 தன்னார்வாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கவுள்ளனர். ஒரு தன்னார்வாளர் 10 பேர் கொண்ட ஒரு வகுப்பிற்கு எழுத்தறிவு இல்லாதவர்களுக்கு எழுத்தறிவு போதிக்க உள்ளார்கள்.

மாவட்டம் முழுவதும் சுவரொட்டி, கார் விளம்பரம், துண்டு அறிக்கை, சுவர் விளம்பரம், ஸ்டிக்கர் மற்றும் செய்தித்தாள் மூலம் அறிவொளி இயக்கத்தை விளம்பரப்படுத்தி மாவட்ட மக்களிடம் எழுத்தறிவு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. மாவட்ட அறிவொளி இயக்க நிர்வாகத்தில் நான் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், 25 ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்களும், 135 உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டு அறிவொளி நிர்வாகத்தினை மாவட்ட ஆட்சியர் திரு. ரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனைப் படியும், தன்னார்வ அமைப்புகள் உதவியுடனும், ஒத்துழைப்புடனும் மிகுந்த சிறப்போடு செயல்படுத்தி வருகின்றனர். உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுக்குப் பவானிசாகரில் நான்கு நாட்கள் உறைவிடப் பயிற்சி முகாம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதைத் தவிர வட்டாரங்களில் 21 கலைக்குழு தேர்வு செய்யப்பட்டு அந்த கலைக் குழுவினருக்கும் 10 நாட்கள் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இந்தக் கலைக் குழுவினர் ஒரு நாளைக்கு மூன்று நிகழ்ச்சி வீதம் ஒரு மாதம் மாவட்டம் முழுவதும் கலைப் பயணம் மேற்கொண்டு அறிவொளிப் பிரச்சாரம் செய்வார்கள்.

மாவட்ட அறிவொளி இயக்கம் இதுவரை 48 பள்ளிக்கூடங்களில் அறிவொளிப் பிரச்சாரமும், 15 நகர் மற்றும் பேரூர்களில் மாபெரும் அறிவொளி பேரணியும் நடத்தப் பட்டன. தொடக்கப்பள்ளி, நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள் மாநாட்டில் மாவட்ட அறிவொளி இயக்கம் பற்றி மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பெரியார் மாவட்ட அறிவொளி இயக்கம் பற்றி விரிவுரையாற்றினார்கள்.

மாவட்டத்தில் உள்ள பல்வேறு சத்துணவு மைய அமைப்பாளர்களிடம் அறிவொளி இயக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. ஒன்றிய ஊர்நல அலுவலர்களிடமும் அறிவொளி இயக்கம் பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

ஈரோடு சி.எஸ்.ஐ. மைதானத்தில் ஜூலை 11-ஆம் தேதி 10,000 பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்ட அறிவொளி பேரணி நடத்தப்பட்டது. ஜூலை 14-ஆம் தேதி பவானியில் மாபெரும் அறிவொளி இயக்கப் பேரணி எழுச்சியுடன் நடைபெற்றது. திங்களூர், அத்தாணி, காஞ்சிக்கோயில், அந்தியூர், தவிட்டுப்பாளையம் கிராமங்களில் அறிவொளி இயக்கம் சார்பாக விழிப்புணர்வுப் பேரணிகள் நடத்தப்பட்டது.

அறிவொளி இயக்கம் பற்றிய விழிப்புணர் மாவட்ட மக்களிடம் ஏற்படுத்திய பின் 6 மாதம் தொண்டர்கள் கல்வி அறிவில்லாத மக்களுக்குக் கல்வி போதித்து அதன் பின் மாவட்டம் முழுவதும் மதிப்பீடு செய்யப்பட்டு கற்றவர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்படும். பெரியார் மாவட்டத்தை மாநிலக் கருத்தாளர்கள் ஆய்வு செய்து முழு எழுத்தறிவு மாவட்டமாகச் செய்வதற்கு மாவட்ட அறிவொளி இயக்கமும், மாவட்ட ஆட்சியரின் ஆலோசனையில் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.



## நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்:

# பாசன வாய்க்கால் தூர்வாரும் பணிகள்

கர்நாடக மாநிலம் குடகு மலையில் உற்பத்தியாகும் காவிரியின் மூலம் முழுமையான பாசன வசதி பெறும் மாவட்டம் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம். காவிரி ஆறு பாசனத்திற்காகக் கல்லணையில் இருந்து காவேரி, வெண்ணாறு, கல்லணைக் கால்வாய், கொள்ளிடம் என்று நான்காகப் பிரிக்கப்பட்டு, பாசனத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

இதன் மூலம் தஞ்சாவூர், புதுக்கோட்டை, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்கள் பாசன வசதி பெற்றாலும் மாவட்டம் முழுவதும் உள்ள விளைநிலங்கள் முழுவதும் பாசன வசதி பெறும் மாவட்டம் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் ஒன்றே ஆகும்.

இம்மாவட்டம் காவிரி, வெண்ணாறு மூலம்தான் முழுமையான பாசன வசதி பெறுகிறது. காவிரி, வெண்ணாறு ஆகிய ஆறுகள் பாசன வசதிக்காக 'ஏ' வகுப்பு வாய்க்கால்களாகவும், 'பி' வகுப்பு வாய்க்கால்களாகவும், கிளை வாய்க்கால்களாகவும் பிரிக்கப்பட்டு பாசன வசதி செய்யப்பட்டு வருகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட வாய்க்கால்களில் நெய்வேலி காட்டு ஆமணக்குச் செடிகள் நிறைய வளர்ந்த காரணத்தினால் தண்ணீர் வீணாகி, சரிவரப் பாசன வசதி செய்ய இயலாத நிலையில் இருந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் இருந்து நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் பிரிக்கப்பட்ட பின் விவசாயிகளின் நீண்டநாள் கோரிக்கையைக் கருத்திற்கொண்டு கடந்த ஆண்டு முதல் பாசன வாய்க்கால்கள் தூர் எடுக்கும் பணி, குடிமராமத்துப் பணிகள் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணையிட்டார்.

அதன்படி இந்த ஆண்டும் பாசன வாய்க்கால்கள் தூர் வாரும் பணிகள், குடிமராமத்துப் பணிகள் போர்க்கால அடிப்படையில் செய்யப்பட்டு முடியும் தறுவாயில் உள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்தியாளர்கள் நேரில் பார்வையிட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்பேரில் பொதுப்பணித் துறையினர் ஏற்பாடு செய்து அழைத்துச் சென்றனர்.

இப்பயணத்தை நாகப்பட்டினத்தில் இருந்து தொடங்கிய செய்தியாளர்களை, முதல் கட்டமாக வெண்ணாறு கோட்டத்தில் அடங்கிய நாகப்பட்டினம் உபகோட்டத்தில் நடைபெற்றுவரும், நடந்து முடிந்த பணிகளைப் பார்வையிட அழைத்துச் சென்றனர்.

இக்கோட்டத்தில் அடங்கிய பணி முடிக்கப்பட்ட புதுச்சேரி வாய்க்காலைப் பார்வையிட்டபொழுது, இக்கால்வாயின் மூலம் பாசன வசதி பெறும் விவசாயிகளினால் அமைக்கப்பட்டுள்ள கிராம நலச்சங்கத்தின் பொருளாளர் திரு. கணபதி கூறுகையில், 40 ஆண்டுகளாகச் செய்யப்படாமல் இருந்த இப்பணி கடந்த ஆண்டு முதல் நடைபெற்று வருகிறது. ஒன்பது கிராமங்களுக்கு இந்த வாய்க்கால் பாசனத்திற்காகவும் குறிப்பாக வடிகாலாகவும் பயன்பட்டு வருகிறது.

சம்பா நடவுக்கே திணறிக் கொண்டிருந்த இப்பகுதி, மேற்கண்ட பணிகள் மேற்கொண்டதன் மூலம் குறுவைச் சாகுபடியும் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 12 ஆண்டுகளாகக் குறுவைச் சாகுபடி இல்லை. இந்த ஆண்டும் கடந்த ஆண்டைப்போல் குறுவை, சம்பா சாகுபடிகள் நன்றாக அமைய வாய்ப்புள்ளது என்று கூறினார்.

இந்த உபகோட்டத்தில் 49 குடிமராமத்துப் பணிகள் ரூ.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்

மு. பிச்சையா
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்

ளது. இதைத்தவிர, பொதுப்பணித் துறை பராமரிப்பு நிதியின் மூலம் ரூ.13 இலட்சம் செலவில் சீரமைப்புப் பணிகளும் நடைபெற்றுள்ளது.

திருத்துறைப்பூண்டி உப கோட்டத்தில் 75 குடிமராமத்துப் பணிகள் ரூ.16 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. மன்னார்குடி உப கோட்டத்தில் 45 பணிகள் ரூ.8 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. பொதுப்பணித்துறை பராமரிப்பு நிதியில் ரூ.11 இலட்சம் செலவில் பல்வேறு கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

வடவாற்றில் கடந்த ஆண்டு உடைப்பு ஏற்பட்ட இடத்தில் 5 கி.மீ தூரத்திற்கு கரைகளை உயர்த்தி செய்யப்பட்டிருந்த பணிகள் காண்போர் எல்லாம் பாராட்டும் வகையில் அமைந்திருந்தது.

காவிரி பாசன கோட்டத்தை உள்ளடக்கிய நன்னிலம் உப கோட்டத்தில் 44 குடிமராமத்துப் பணிகள் 150 கி.மீ. நீளத்திற்கு ரூ.7.27 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை உப கோட்டத்தில் 45 பணிகள் ரூ.7 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. இந்த உப கோட்டத்தைச் சேர்ந்த செம்பனார்கோவில் உபரி ஆற்றில் 'ஏ' வகுப்புக் கால்வாயில் புல்டோசர் மூலம் காட்டு ஆமணக்கு செடிகளையும், தூர்களையும் அகற்றும் பணியினை நேரில் பார்க்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

சீர்காழி உப கோட்டத்தில் 12 பணிகள் 70 கி.மீ. தூரத்திற்கு ரூ.3.85 இலட்சம் செலவில் செய்யப்பட்டுள்ளது. இந்த உப கோட்டத்தில் கொன்னத்தூர் மண்ணியாற்றில் 5 கி.மீ. தூரத்திற்குச் செய்யப்பட்டிருக்கும் பணி மிகவும் பாராட்டத்தக்க வகையில் அமைந்திருந்தது. இதேபோல் திருநகரி வாய்க்கால், ஐயாவையனாறு ஆகியவையும் பயன் அளிக்கும் வகையில் பணிகள் செய்யப்பட்டிருந்தன.

இக்கோட்டத்தில் காட்டையாறு, முடவனாறு ஆகிய வாய்க்கால்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதினால் நல்ல வடிகால்கள் பெறுவதற்கு வகை செய்யப்பட்டதன் மூலம் அப்பகுதியில் உள்ள கிராமங்களில் மழைக்காலங்களில் கிராமங்களுக்குள் தண்ணீர் புகுவது தடுக்கப்பட வாய்ப்புள்ளது என்று அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இப்பணிகளைச் செய்தியாளர்களுக்குப் பொதுப்பணித்துறை உதவி செயற் பொறியாளர்கள் திரு. ரெத்தின சபாபதி, திரு. சுந்தரேசன், திரு. பெரியசாமி, திரு. தனபாண்டியன், திரு. ஜெயராமன், திரு. பிச்சைமுத்து ஆகியோர் நேரில் அழைத்துச் சென்று நடைபெற்று வரும் பணிகளையும், முடிக்கப்பட்ட பணிகளையும் நேரில் காண்பித்தனர்.

இம்மாவட்டத்தில் கடந்த ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 145 'ஏ' வகுப்புக் கால்வாய்கள் 1034 கி.மீ. தூரத்திற்கு ரூ.10.91 இலட்சம் செலவிலும், புல்டோசர் மூலம் 163 கி.மீ. தூரத்திற்கு 33.29 இலட்சம் செலவிலும் குடிமராமத்துப் பணிகள் மற்றும் தூர் வாரும் பணிகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் 216 'ஏ' வகுப்பு வாய்க்கால்கள் 1,364 கி.மீ. நீளத்திற்கு ரூ.27.34 இலட்சம் செலவிலும், புல்டோசர் மூலம் 117.52 கி.மீ. நீளத்திற்கு ரூ.28.82 இலட்சம் செலவிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.


இம்மாவட்டத்தில் நடைபெற்று வரும் குடிமராமத்துப் பணிகள் குறுவைப் பாசனத்திற்குத் தண்ணீர் வந்து சேர்வதற்குள் முடிக்கப்பட்டு விடும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவுப்படி, இந்த ஆண்டும் கடந்த ஆண்டைப்போல் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக ஜுன் திங்கள் 12-ஆம் நாள் பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், இம்மாவட்டத்தில் குறுவை சாகுபடி அமோகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வாண்டு நடைபெற்றுள்ள குடிமராமத்துப் பணிகள் மூலம் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றுப் பயனடையும்.

இப்பணியினை நேரில் பார்வையிட்டு முடித்தபின், இம்மாவட்டம் இந்த ஆண்டு நெல் உற்பத்தியில் எக்டேருக்கு 10 டன் நெல் விளைச்சல் என்ற அரசின் கொள்கையை நிச்சயம் நிறைவேற்றும் என்பதில் சந்தேகமில்லை என்ற எண்ணம், அனைவர் மனதிலும் எழுந்தது.

## பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் நாட்டுடைமை!

மறைந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் துணைவியார் திருமதி கௌரவம்மாள் அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய பாடல்களை நாட்டுடைமையாக்குமாறு மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கை மனு ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அவரது கோரிக்கையைப் பரிசீலனை செய்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் எழுதிய அனைத்துப் பாடல்களையும் நாட்டுடைமையாக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், இதற்குரிய மேல் நடவடிக்கையை உடனடியாக எடுக்குமாறும் அரசு அலுவலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணித்துள்ளார்கள்.



# வெறிநாய்க் கடி
(RABIES)

டாக்டர் பா. சிற்றம்பலம், எம்.டி.,

**கோடைக்காலம் என்றாலே - தெரு நாய்களில் பல வெறிநாய் களாகிப் போவோர் வருவோ ரைக் கடித்துத் துன்புறுத்தக் கூடும்; அதனால், எப்படிப்பட்ட ஆபத்தெல்லாம் விளையக்கூடும்- அவற்றிலிருந்து விடுபடுவது எப்படி என்றெல்லாம் விளக் குவது இந்தக் கட்டுரை:**

மனிதரைத் தாக்கும் பல நோய்களுள், மிகவும் அச்சுறுத்தி வருவது வெறிநாய்க்டி எனும் பழம்பெரும் நோயாகும். இந்நோய் 'வைரஸ்' என்னும் நுண்கிருமியினால் மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்குகிறது. மனிதன் இந்நோயினால் பாதிக்கப்படும்போது 'ஹைட்ரோப்போபியா' (Hydrophobia) - அதாவது தண்ணீரைக் கண்டாலே பயம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு இறுதியில் இறக்கவும் நேரிடுகிறது.

**நாயினால் மட்டுமல்ல**

இந்தியாவில் நாய்கள் அதிகமாக இருப்பதால், இவற்றின் மூலம் தான், 'ரேபிஸ் நோய்' பரவுவதாக மருத்துவ நிபுணர்களால் நம்பப்படுகிறது. ஆனால், பூனை, குரங்கு, ஆடு, மாடு ஆகிய பிராணிகளாலும் இந்நோய் பரவக்கூடும்.

இந்நோயினால் ஓராண்டில் 25,000 மக்கள் இறக்கிறார்கள். நாய்களுடன் பழகுவதற்கு நாட்டம் உடையவர்கள் சிறுவர் சிறுமியர்கள் என்ற காரணத்தால், அவர்களையே பெரிதும் இந்நோய் பாதிக்கிறது.

ரேபிஸ் நுண்கிருமியானது துப்பாக்கியின் குண்டைப் போல நீள உருளை வடிவத்தில் இருக்கும். இதை 'ரேப்டோவைரஸ்' (Rhabdo Virus) என்று மருத்துவர்கள் கூறுவர். இது எளிதில் அழிக்கவல்லதன்று. இறந்த உடல்களில் கூட நீண்ட நாட்கள் உயிருடனிருந்து நோய் பரப்பும் சக்தி வாய்ந்தது, இது. அதனாலேயே இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடுபவரின் உடலைப் புதைகுழியில் போட்டு எரித்துவிட்டு, மண்ணில் மூடிவிட வேண்டும்.

மிருகங்களுடன் ஒப்பிடும்போது, மனித இனம் இந்நோயினால் பாதிக்கப்படுவது மிகக் குறைவே. உடலிலுள்ள காயங்களின் மூலம் உள்நுழையும் நுண்கிருமிகள் தசைநார்களில் வளர்ந்து, இனப்பெருக்கம் செய்து, பின் நரம்புத் திசுக்களில் புகுந்து அதன் வழியாக முதுகுத் தண்டையும், மூளையையும் சென்றடைகிறது. உமிழ்நீர் சுரப்பிகளிலும் சில தங்கிவிடுகின்றன.

**நோயின் வாய்ப்புகள்**

ஆதலால், பாதிக்கப்பட்ட மனிதன் மற்றும் மிருகங்களின் உமிழ்நீர், மற்றோர் உடலில் உள்ள காயங்கள், கீறல்கள் மேலே படும்போது, இந்நோய் மிக விரைவில் தொற்றிக் கொள்கிறது. ஆனால், இவை இரத்தத்தில் கலப்பதில்லை. இந்நோய் பரவும் தன்மையானது நுண்கிருமியின் வீரியம், எண்ணிக்கை, காயத்தின் இடம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுகிறது. எடுத்துக்காட்டாக முகத்திலிருந்து மூளையைச் சென்றடைவதற்கு நூறு சதவிகிதம் வாய்ப்பிருக்கிறது.

அதுவே கால், உடல் பகுதிகளிலிருந்து நோய் பரவுவதற்கு இரண்டே இரண்டு சதவிகிதம் வாய்ப்புத்தான் உள்ளது.

கடித்த சில நாட்களுக்குள் நோயின் அறிகுறிகள் தென்படுவதில்லை. இவை தோன்றுவதற்கு முப்பது முதல் தொண்ணூறு நாட்கள் ஆகும். சில அறிகுறிகள் போலியோ மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களில் தோன்றுபவை போன்றே இருக்கும். அவையாவன: அமைதியின்றி இருத்தல், உடல் நடுக்கம், வலிப்பு வருதல், வில் போன்று உடல் வளைதல், அதிக உமிழ்நீர் சுரத்தல், மூச்சிறைத்தல், தண்ணீர் அருந்துவதற்கு அஞ்சுதல் முதலியன. கடைசியாகக் கை, கால்கள் செயலிழந்து, மூச்சு விடுவதற்குத் துணைபுரியும் தசைகளும் செயலிழந்து, மூச்சு திணறி இறந்து போவர். அதிக

இரைச்சல், காற்று, வெளிச்சம் முதலியவை இந்த அறிகுறிகளை அதிகரிக்கும் என்பதால் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்களைத் தனியறையில் வைத்துச் சிகிச்சை அளிக்க வேண்டும். மேற்கூறிய அறிகுறிகள் நாய்களுக்கும் தென்படும்.

**பலவகைப் பரிசோதனைகள்**

உயிருடன் இருப்பவரின் உமிழ்நீர், முதுகுத்தண்டு நீர், கண் திசுக்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதன் மூலம் இந்நோயை நாம் அறியலாம். இந்நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களின் மூளை மற்றும் முதுகுத்தண்டைப் பரிசோதிப்பதன் மூலமும் அறியலாம்.

தனியறையில் வைத்து அந்தந்த அறிகுறிகளுக்கு ஏற்றவாறு சிகிச்சை அளித்து, பாதிக்கப்பட்ட மனிதன் அமைதியுடன் இறப்பதற்கு மட்டுமே மருத்துவம் உதவ முடியும்.

**நோய்த் தடுப்பு முறைகள்**

*1. முதல் உதவி முறைகள்:*

அ. காயத்தை நிறையத் தண்ணீரும், சோப்பும் கொண்டு நன்கு கழுவ வேண்டும்.

ஆ. காயத்தின் மீது கிருமி நாசினி அல்லது ஸ்பிரிட் தடவ வேண்டும்.

இ. காயத்திற்கு எக்காரணம் கொண்டும் கட்டுப் போடக்கூடாது; காயம் திறந்தே வைக்கப்பட வேண்டும்.

ஈ. காயத்தின் மீது மிளகாய்த் தூள், மஞ்சள்தூள், எண்ணெய் முதலியவற்றைத் தடவக் கூடாது.

பின்பு மருத்துவரிடம் சென்று வில்வாத ஜன்னி நோய் வராமல் தடுக்கும் TT, Tetanus Toxoid எனப் படும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். காயங்கள் பெரிதாக இருந்தால் மருத்துவரே அதற்கேற்ற சிகிச்சை அளிப்பார்.

நோய் தொற்றுவதற்கு வாய்ப் பளித்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள்:

எவ்வகையான மிருகக் கடியினை யும் நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது; காலம் தாமதிக் காமல் எவ்வளவு விரைவாக நாம் தடுப்பூசியைப் போட்டுக் கொள் கிறோமோ அவ்வளவு விரைவாக, நுண்கிருமிகளை நாம் செயலிழக்கச் செய்ய முடியும். அவை தசை நார் களில் இடம் பிடித்துவிட்டால், பின்பு அழிப்பது கடினம். நோய் மூளையைத் தாக்குவதும், உறுதி யாகி விடுகிறது.

தடுப்பூசிகளைப் போட ஆரம் பித்து, கடித்த நாய்களையும் பத்து நாட்கள் வரை கண்காணிக்கலாம். அக்காலகட்டம் முடிவுறும் வரை அவை நலமாக இருப்பின், தடுப் பூசிகள் போட்டுக் கொள்வதை நிறுத்திவிடலாம். அவ்வாறின்றி, நாய்களுக்கு நோயின் அறிகுறிகள் தென்பட்டாலோ, நோயினாலோ மற்ற காரணங்களினாலோ அது இறக்க நேரிட்டாலோ, அல்லது காணாமல் போய்விட்டாலோ, தடுப்பூசியைத் தொடர்ந்து போட்டுக் கொள்ளத்தான் வேண்டும்.

**இருவகையான நோய்த் தடுப்பூசி முறைகள்:**

*1.* உடனடியாக நோய்த் தடுப்புச் சக்தியினை அளிப்பது - பிராணிகள் மற்றும் மனிதர்களின் உடலினுள் இந்நுண்கிருமிகளைச் செலுத்தி அவற்றிற்கெதிரான நோய்த் தடுப்புச் சக்தியினை (Anti-bodies) அவை களின் இரத்தத்திலிருந்து பிரித் தெடுத்து ஊசி மூலமாகப் பாதிக்கப் பட்ட பிராணி அல்லது மனிதருக்குத் தடுப்பூசியாகப் போடுவது.

*2.* பாதிக்கப்பட்ட மனிதர்கள் அல்லது பிராணிகளின் உடலில் தடுப்புச் சக்தியினை உண்டாக்குவது.

இதற்குச் செம்மறி ஆட்டின் மூளையிலுள்ள நரம்புத் திசுக்கள், கோழி - கரு நாகத் திசுக்கள், மனித இரட்டை உயிரணுக்கள், வீரோ செல்கள் ஆகியவற்றில் இந்நுண் கிருமிகளை வளர்த்து, செயலிழக்கச் செய்து, அவற்றை ஊசியாகத் தயாரித்து உடலுக்குள் செலுத்து வதன் மூலம், நோய்த் தடுப்புச் சக்தியினை உண்டாக்கி, பாதிக்கப் பட்ட உடலிலுள்ள நுண்கிருமிகளை அழிக்கிறோம். இவ்வாறு தடுப்புச் சக்தியை உண்டாக்கப் பத்து முதல் பதினைந்து நாட்களாகும்.

செம்மறி ஆட்டின் மூளையி லுள்ள நரம்புத் திசுக்கள் மூலம் தயாரிக்கப்படும் தடுப்பூசி செம்பிள் தடுப்பூசி (Semple Vaccine) எனப் படுகிறது.

உலக சுகாதார நிறுவனம் (WHO) தடுப்பூசி போடுவதைப்பற்றி உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ள விதிமுறைகள் பின்வருமாறு:

**நோய் பரவுவதற்கு வாய்ப்பளித்த தன்மைகள்**

கடித்த பிராணியின் நிலை, தடுப்பூசி போடப்பட்டதா அல்லது இல்லையா?

நோய் பரவ வாய்ப்பளித்த நேரம், அதைத்தொடர்ந்து பத்து நாட்கள், சிகிச்சை முறைகள்

காயமின்றிப் பிராணியின் உடல் மட்டும் படுதல்; மறைமுகமாகப் படுதல், நோயினால் பாதிக்கப் பட்டது சிகிச்சை முறைகள் தேவை யில்லை, சந்தேகத்திற்குரியது நல முடன் இருத்தல்.

தோலினை நக்கியிருத்தல், கீறல்க அல்லது சுரண்டல்கள், சிறு கடிகள் (மூடியிருந்த கைகள், கால்கள், உடற்பகுதிகள்), தடுப்பூசி போட வேண்டும். நலமுடன் இருந்தால் தடுப்பூசியை நிறுத்தி விடவும்.

## ஊரும் பேரும்

திருநெல்வேலி மாவட்டம்

அரியநாயகிபுரம்

தளவாய் அரியநாத முதலி யாரால் உருவாக்கப்பட்டது இவ் வூர். அவர் கட்டிய அரியநாயகி அணை அவர் பெயரை இன்றும் சொல்லிக் கொண்டிருக்கிறது. குமர குருபரருக்கு நாயக்க மன்னர் இவ்வூரைப் பரிசாகக் கொடுத்தார் என்பது வரலாறு. முக்கூடலுக்குச் செல்லும் சாலையில் இவ்வூர் உள்ளது.

சேரன்மாதேவி

சேர மன்னன் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அரசியின் பெயரால் அமைந்தது இவ்வூர் என்பர். 'சேரன் மாதேவி சதுர்வேதி மங்கலம்' என் பதே இவ்வூரின் முழுப் பெயராகும். மிகப் பழமையான ஊரான இங்கு கோயில்களும், சோழ மன்னர்களின் கல்வெட்டுகளும் உள்ளன.

நோயினால் பாதிக்கப்பட்டது காட்டு மிருகங்கள்; பாதிக்கப்பட்டது கண்காணிக்க முடியாத மிருகம்; பாதிக்கப்பட்டதா எனத் தெரிந்தால் உடனடியாகத் தடுப்பூசி போட வேண்டும்.

பெருங்கடிகள் ஒன்றுக்கு மேல் (முகம், தலை, கழுத்து, விரல்) ஆகிய பகுதிகளில், சந்தேகத்திற் குரியது/கண்காணிக்க முடியாதவை.

செம்பிள் தடுப்பூசி வயிற்றில், தோலுக்கடியில், பத்து ஊசிகளாகப் போட வேண்டும்; நாய்க்கடிக்கு ஆளானவர் கர்ப்பிணியாக இருந் தால் மட்டும், தடுப்பூசியைத் தொடை யில் போடலாம். இத் தடுப்பு ஊசி சில பின்விளைவுகளைத் தருகிறது. இத்தடுப்பூசியே நரம்பு மண்டலத் தைத் தாக்கி, கால்களைச் செயலிழக் கச் செய்து, உணர்வுகளை இழக்கச் செய்து, நீர், மலம் கழிப்பதில் தொந்தரவு போன்றவற்றுடன் இறுதி யில் மூச்சுத் திணறி மக்கள் இறந்து விடவும் காரணமாக உள்ளது. 1:55000, முதல் 1:11000 என்ற அளவில் மக்கள் இவ்வகையில் பாதிக்கப்படுவதாகக் கணக்கிட்டுள் ளார்கள்.

இத்தடுப்பூசி போட்டு முடித்த திலிருந்து, ஆறு மாத காலம் வரை ஒருவர் அந்நோயிலிருந்து காக்கப் படுவர், அக்காலத்திற்குள் மீண்டும் பிராணிகளின் கடிக்கு ஆட்பட்டால் மீண்டும் அதே ஊசியை (பூஸ்டர் டோஸ்களைப்) போட்டுக் கொள்ள வேண்டும்.

**திசு வளர்ப்புத் தடுப்பூசிகள்**

கோழிக்கரு நார்த்திசுக்களி லிருந்து தயாரிக்கப்படும் தடுப்பூசி இந்தியாவில் Rabipur என்னும் பெயரில் விற்கப்படுகிறது. ஒன்றின் விலை ரூ.200.

சுத்திகரிக்கப்பட்ட வீரோ செல் களிலிருந்து தயாரிக்கப்படுவது (Verorab) என்னும் பெயரில் விற்கப் படுகிறது. ஒன்றின் விலை ரூ.500 ஆகும்.

இத்தடுப்பூசிகள் எவ்விதமான பின் விளைவுகளும் இல்லாதவை. இவ்வூசிகள் தோள்பட்டையில், தசைப்பகுதியில் ஆறு ஊசிகளாக 0, 3, 7, 14, 30, 90 ஆகிய நாட் களில் மூன்று மாத காலம் போடப் படுகிறது. இதில் 'ஓ' என்பது பிராணி கடித்த நாளைக் குறிப்ப தன்று, அஃது முதல் ஊசி போடப் படும் நாளைக் குறிப்பதாகும்.

இத்தடுப்பூசியைப் போட்டுக் கொண்டவர்கள் மூன்று முதல் ஐந்தாண்டுக் காலம் வரை இந் நோயிலிருந்து காக்கப்படுவர். இக் காலகட்டத்திற்குள் மீண்டும் நாயால் கடிக்கப்பட்டால் இரண்டு பூஸ்டர் டோஸ்களை ஒரு வார கால இடை வெளியில் போட்டுக்கொள்ள வேண்டும்.

3. நோய்த் தொற்றுவதற்கு வாய்ப்பளித்ததற்கு முன்பே மேற் கொள்ள வேண்டிய தடுப்பு முறைகள்:

மூன்று ஊசிகளாக 0, 7, 28 ஆகிய நாட்களில் போட்டுக் கொள்ள வேண்டும். ஒன்று முதல் மூன்று ஆண்டுக்கால இடைவெளி யில் ஒரு பூஸ்டர் டோஸைப் போட்டுக் கொள்ள வேண்டும். இத்தடுப்பு முறையினை அந்நோய் தொற்றும் வாய்ப்பு இருக்கும்வரை போட்டுக் கொள்ளுதல் நல்லது.

இம்முறைப்படி அவசியமாக போட்டுக் கொள்ள வேண்டிய வர்கள் சிலர் உள்ளனர். அவர்கள் 1. கால்நடை மருத்துவர்கள், 2. நாய்களை பழக்குபவர்கள், 3. இந் நோய் பற்றிய ஆராய்ச்சியாளர்கள், 4. மருத்துவ ஊழியரும் மற்றவர் களும், 5. இறந்த பிராணிகளைப் பதப்படுத்துவோர், 6. நகராட்சியின் கால்நடை அனுப்பு நிலைய ஊழி யர்கள், வேட்டையாடுபவர்கள், 7. தபால்காரர்கள், 8. தெருநாய் அதிகம் திரியும் பகுதிகளில் குடி யிருப்பவர்கள்.

மேற்கூறியவை நம்மைக் காத்துக் கொள்ள நாம் செய்ய வேண்டிய பணிகளாகும். பொதுமக்கள் தாமே முன்வந்து ஆற்ற வேண்டிய கடமைகள் சில உண்டு. அவை: 1. நீங்கள் வீட்டில் நாய் வளர்ப்பவராக இருந்தால், அவற்றிற்கும் முறையான மருத்துவச் சிகிச்சை தக்க சமயத்தில் தேவைப்படும்; ஆதலால் அவ்வவ் போது உங்கள் வளர்ப்புப் பிராணியை மருத்துவ சோதனைக்குட்படுத்தவும்; வெறிநாய்க்கடி நோய்த்தடுப்பூசி போட்டுக் கொண்டு செல்லவும் தவறாதீர்கள்; அது பற்றிய விவரங் களைத் தவறாமல் குறித்து வைக் கவும்.

2. தெரு நாய்கள் பற்றிய தகவல் களை, நகராட்சியினருக்குத் தெரி வித்து அவைகளைப் பிடிக்கவும் நீங்கள் உதவ வேண்டும். மறந்து விடாதீர்கள்.


**தமிழரசு**

**புதிய சந்தா விவரம்**

**'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)**

**ஆண்டுச் சந்தா ... ரூ.72**

**அரையாண்டுச் சந்தா ... ரூ.36**

**'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)**

**ஆண்டுச் சந்தா ... ரூ.36**

**சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:**

**உதவி இயக்குநர்**
**'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்**
**சென்னை-600 002.**

**தமிழரசு**

**படிக்க — பயன்பெற — பாதுகாக்க**

## பொது அறிவுத் தகவல்கள்

வைட்டமின் ''சி'' குறைந்தால் என்ன நோய் வரும்?
''ஸ்கர்வி'' என்ற நோய்.

வைட்டமின் ''சி'' அடங்கியுள்ள பொருட்கள் எவை?
பழங்கள், காய்கறிகள், முட்டைக்கோஸ்.

வைட்டமின் ''டி'' குறைந்தால் என்ன நோய் வரும்?
ரிக்கெட்ஸ் என்னும் எலும்பு நோய்.

ரோஜா எந்த நாட்டின் தேசிய சின்னமாக உள்ளது?
பிரிட்டன்.

அல்லிமலர் எந்த நாட்டின் தேசியச் சின்னமாக உள்ளது?
பிரான்ஸ்.

மனிதனுடைய உடலில் எத்தனை எலும்புகள் உள்ளன.
108.

மலேசியாவின் முக்கிய ஏற்றுமதிப் பொருள்
இரப்பர்.

பலூனைக் கண்டு பிடித்தவர்
மாண்ட் ஹோல்பா.

பருத்தி ஜவுளி உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
மகாராஷ்டிரா.

சிமெண்ட் உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
பீகார்.

தேயிலை உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
அசாம்.

குங்குமப்பூ உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
காஷ்மீர்.

முந்திரி உற்பத்தியில் முதலிடம் வகிப்பது எந்த மாநிலம்?
கேரளா.

மாணவர் பக்கம்:

# பாரில் உயர..

—எழிற்பித்தன்

நேற்று இன்று நாளை
வாழும் கால எல்லை
மாற்று இல்லை தம்பி
மனத்தில் கொள்ள வேண்டும்!

தேரும் கல்வி ஒன்று
திசைகள் எட்டு உண்டு
ஊறுமிந்த நெஞ்சில்
உயிராம் மானம் அன்றோ!

ஆறுகடல் வானம்
அழகு மலைச் சாரல்
தேரு மிந்த மண்ணின்
தேவையன்றோ மாந்தர்!


உள்ளமென்ற விளக்கு
உயரவேண்டும் நமக்கு
பள்ளம் மேடு வாழ்வில்
பழமையென்று விலக்கு!

உரிமைகொண்ட நாடு
உயர்வுதாழ்வு ஏது?
பரிவுகொண்டு பழகு
பாரில் உயர ஒழுகு!





★ நான் கடவுளை நேருக்கு நேராகக் காண விரும்புகிறேன். உண்மைதான் கடவுள் என்று எனக்குத் தெரியும். என்னைப் பொருத்தமட்டில், கடவுளை அறியப் பயன்படும் ஒரே சாதனம் அகிம்சை-அன்பு-என்பதுதான்.





மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், குண்டுவெடிப்பில் சேதமடைந்த ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தைப் பார்வையிட்டார் (9.8.93).

# படமும் - செய்தியும்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், சென்னைப் பொது மருத்துவமனையில், குண்டு வெடிப்பில் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறி மருந்து, ஹார்லிக்ஸ், பழங்கள் ஆகியவற்றை வழங்கினார் (9.8.93)

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. ராஜேஷ் பைலட் அவர்களுடன், சென்னை குண்டுவெடிப்புச் சம்பவம் குறித்து ஆலோசனை நடத்தினார் (9.8.93).



With Best Compliments From

☏: HOTEL : 2066
RES 2552

# Hotel Sundari (Lodging)

**5, Thiruvalluvar Street, Tindivanam-604 001**

திண்டிவனம் நகரின் மையத்தில் 24 மணி நேரமும் சிறந்த முறையில் தண்ணீர்
மற்றும் சுகாதார வசதியுடன் கூடிய சிறந்த லாட்ஜ்

T.V. வினாயக முதலியார்

With best compliments from

# S.R. SINGARA NAINAR CO.,

Indian Oil Dealers

76, Singavaram Road, Gingee-604 202,
South Arcot District
Phone: 2041

Prop: S. RANGANATHAN

With best compliments from

# VELU THEATRE

82, Thiruvannamalai Road
Gingee-604 202

## K. VELUGOUNDER

Proprietor

With the best compliments from

## Rtn. V. DURAISAMY

**President**
**ROTARY CLUB OF TINDIVANAM**
**5, R.S. Pillai Street**
**Tindivanam**


**Phone: 2782**
**STD: 04147**



# மானுடத்தின் ஜீவன் ஜீவா

கவிஞர் இளந்தேவன்

(அமரர் ஜீவானந்தம் பிறந்த நாள் ஆகஸ்ட் : 20)



இடிஇடிக்கும் வானமொன்று
தரையிறங்கி வந்ததோ!
ஏழை மக்கள் பகைவர் மீது
கனல் பரப்பி நின்றதோ!
குடையெடுத்த சேரமன்னன்
நடைபடைத்த பான்மையோ!
குற்றவாளி கடவுளேனும்
விட்டிடாத ஆண்மையோ!

மானுடத்தின் ஜீவனிங்கு
மனிதனாக வந்ததோ!
மதங்கள் சாதி பேதமற்ற
மனிதநீதி தந்ததோ!
ஆணவத்து மூடர் முன்பு
சிங்க மாக நின்றதோ!
ஆருமற்ற பாம ரர்க்குத்
தோழனாகி வென்றதோ!

உலக மாந்தன் என்ற போதும்
தமிழில் ஆசை கொண்டதோ!
உலக ஞானி கம்பன் என்னும்
உண்மை தன்னை விண்டதோ!
நிலவு மீது சென்றி டிக்கும்
தலைப டைத்த மானுடன்
நிகரிலாத ஆண்மை யாளன்
ஜீவா எந்தம் வாழ்கவே!







# எழில்மிகு குற்றாலத்தில் ஏற்றமிகு சாரல் விழா!

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் குற்றாலம் கலைவாணர் கலையரங்கில், அரசு சார்பில் 9 நாட்கள் 31.7.93 முதல் 8.8.93 முடிய சாரல் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இயற்கை நமக்கு அளித்துள்ள இனிய கொடையான குற்றாலத்தில் சாரல் என்றும் மகிழும் இன்பத்தை நமக்கு அளிக்கின்றது. குற்றால அருவிகளில் நீராடி அகமகிழ்வு பெறும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் மாவட்ட நிர்வாகம் செய்து கொடுத்துள்ளது. அதிலும் குறிப்பாக அண்மையில் ஏற்பட்ட இயற்கையின் சீற்றத்தால் பழுதடைந்த குற்றாலம், அரசின் சீரிய முயற்சி களினால் நவீன முறையில் புதுப் பிக்கப்பட்டுள்ளது. அருவிகளில் நீராடக் குற்றாலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் அரசின் சார்பில் சாரல் திருவிழா நிகழ்ச்சி கொண் டாடப்படுகிறது.

இந்த ஆண்டு சாரல் திருவிழா வின் தொடக்க நாள் நிகழ்ச்சிக்கு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை ஏற்க, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் சாரல் திருவிழாவினைத் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

''உலகத்தில் உள்ள முக்கியமான அருவிகளில் குற்றாலம் அருவிக்குத் தனிச்சிறப்பு உண்டு. பயணிகளின் ஐம்புலன்களுக்கும் நலன் பயக்கும் அருவி குற்றாலம்தான். நயாகரா பெரிய நீர் வீழ்ச்சி. ஆனால், அதைப் பார்க்கத்தான் முடியும்.

''இந்தியாவில் மற்ற மாநிலங் களில் உள்ள சுற்றுலா இடங்களுக்கு இல்லாத சிறப்பு குற்றாலத்துக்கு மட்டுமே உண்டு. கோடி ரூபாய் செலவு செய்தாலும் இந்தப் பெருமை கிடைக்காது. பெருமை பெற்ற குற்றாலத்தை நாம் காப்பாற்ற வேண்டும். இதன் அழகு கெடக் கூடாது. குற்றாலத்தின் பெருமை - தூய்மை பாதுகாக்கப்பட வேண்டும். குற்றாலத்தில் 2.5 கி.மீ. சுற்றள வுக்கு மரங்களை வெட்டத் தடை விதிக்க வேண்டும். நஞ்சை நிலத்தில் வீடு - பங்களா கட்ட அனுமதிக்கக் கூடாது.

குற்றாலத்தில் பொழுதுபோக்கு அம்சம் இல்லை. இந்தக் குறையைத் தீர்க்கும் வகையில் கலைக்கூடம், நூலகம், ஓவியக் கண்காட்சி போன் றவை அமைக்க வேண்டும். முதலைப் பண்ணையும் ஏற்படுத்தலாம். இதனால் அரசுக்கு வருமானமும் கிடைக்கும். குளிக்க வரும் பயணி களுக்குப் பொழுது போகும். இது போல் கூந்தகுளத்தில் பறவைகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அங்கு என்னென்ன பறவைகள் எந்தெந்த நாடுகளிலிருந்து வருகின்றன என்ற புள்ளி வவரங்களைக் கொடுத்தால், மத்திய அரசின் ஒத்துழைப்புடன் பறவைகள் சரணாலயம் அமைக்க ஏற்பாடு செய்யலாம்''.

குற்றாலம் நகரியக் குழுத் தலைவர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆர். வேலு, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு



வருகை தந்த அனைவரையும் வர வேற்றுப் பேசினார். மாநிலங் களவை உறுப்பினர் திரு. தங்கராஜ் பாண்டியன் சட்டமன்ற உறுப் பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ், திரு. தர்மலிங்கம், திரு. ஆர்.பி. ஆதித்தன், திரு. ஈஸ்வரன் ஆகி யோர் விழா நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்புரையாற்றினார்கள்.

ஒவ்வொரு நாள் நிகழ்ச்சியிலும் மக்கள் பிரதிநிதிகள் மாவட்டத் திலுள்ள அரசுத்துறை அலு வலர்கள், சேவை நிறுவனங்களின் தலைவர்கள், பல்வேறு மகளிர் அமைப்புக்களைச் சார்ந்தோர், நகரி யக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங் கினார்கள்.

மாண்புமிகு பிற்படுத்தப்பட் டோர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் 7.8.93 அன்று சாரல் திருவிழா நிகழ்ச்சியில் பங்கேற்று கலை நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார். அரசின் சார்பில் குடும்ப நலத் திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட அதிர்ஷ்ட சாலிகளில் பரிசு பெற்றவர்களுக்குத் தங்கப்பதக்கங்களை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப் பித்தார்.

சாரல் திருவிழா நிகழ்ச்சிகளில் கோ-ஆப்டெக்ஸ் தலைவர் திரு. நெல்லை பாலாஜி, தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. எஸ். கபிலன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சிப் பண் பாட்டுத் துறைச் செயலர் திரு. எஸ்.பி. இளங்கோவன், இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிரதீப் வியாஸ், இ.ஆ.ப., நீதித்துறை நடுவர்கள், காவல்துறைத் தலைவர்கள், வங்கித் துறை அலு வலர்கள், கட்டபொம்மன் போக்கு வரத்துக் கழக நிர்வாக இயக்குநர், வனத்துறை உயர் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றுச் சிறப் பித்தனர்.

சாரல் திருவிழா நிறைவு நாள் நிகழ்ச்சி, மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பெ. இளங்கோ அவர்கள் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் சாரல் திருவிழா சிறப்பு மலரை மாவட்ட வருவாய் அலுவலர் வெளியிட, மாநிலங்களவை உறுப்பினர் திரு. என். தங்கராஜ் பாண்டியன் அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் குற்றாலம் நகரியக் குழுத் துணைத் தலைவர் திரு. பிரவீன்குமார், நகரிய அலுவலர் திரு. சீன் அஜ்மல்கான் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

சாரல் திருவிழாவின்போது ஒவ் வொருநாளும் தென்மண்டலப் பண்பாட்டு மையத்தினர் வழங்கிய கலை நிகழ்ச்சிகள், நையாண்டி மேளம், ஒயிலாட்டம், மயிலாட்டம், வீரதீர விளையாட்டுக்கள், கட்ட பொம்மன் போக்குவரத்துக் குழு வினர், பாண்டியன் போக்கு வரத்துக் குழுவினர் மற்றும் காவல் துறையினரின் மெல்லிசை நிகழ்ச் சிகள், தமிழர் பண்பாட்டை எடுத் துக்காட்டும் இந்திய அரசு நேரு இளையோர் மையத்தின் கிராமிய நடனங்கள், பரத நாட்டியம், வர லாற்று நாடகங்கள், குற்றாலம் பராசக்தி கல்லூரி மாணவிகளின் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் அடங்கிய நடனங்கள், கலை நிகழ்ச் சிகள் ஆகியவை மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு சுற்றுலாப் பயணி களைப் பெரிதும் கவர்ந்தன.

விழா முடிவில், மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எம்.ஏ. லாரன்ஸ் நன்றி நவின்றார்.



**துரை. ராஜ்குமார்,**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி கட்டபொம்மன்
மாவட்டம்.

# கண் மருத்துவம்



## பதில்கள்:

**டாக்டர் வி.எம். லோகநாதன்**
இயக்குநர்,
அரசு பொது கண் மருத்துவமனை
சென்னை.

**கே. சௌந்தரராஜன்
குஜிலியம்பாறை.**

**★ என் விழிகள் எப்போதும் சிவப்பாக இருக்கின்றன; பசித்திருக்கும் வேளையிலும், மாலை நேரத்திலும் எரிச்சல் எடுக்கிறது; இதற்கு எளிய முறை வைத்தியம் ஏதாவது சொல்லுங்கள் டாக்டர்?**

வைட்டமின் சத்துக் குறைவே இதற்குக் காரணம்; பச்சைக் காய்கறிகள் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள்; நல்ல சத்தான உணவு வகைகளையே உட்கொள்ளுங்கள். நல்லது.

**சு. பெரியசாமி
வெங்கமேடு**

**★ என் கண்களைச் சாதாரணமாகத் திறக்க முடியவில்லை; இத்தனைக்கும் எந்தவிதமான வீக்கமும் இல்லை; என்ன செய்யலாம்?**

**எஸ்.பி. வேலுசாமி
சேனாபதி பாளையம்**

**★ எனக்கு வயது 50. சின்ன எழுத்துகளைப் படிக்க முடியவில்லை- இது ஏன்?**

இந்த இரண்டு கேள்விகளுக்கும் விடை- இவர்கள் இருவரும் ஒரு நல்ல கண் மருத்துவரை அணுகி முறைப்படி சிகிச்சை பெற்றுக் கொள்ளுவது நல்லது.

**சீனிவாஸ் பிரபு
சென்னை-90**

**★ சிறு குழந்தைகளுக்குக் கண்ணில் எண்ணெய் விடுவது நல்லதா?**

அப்படிப்பட்ட மூடநம்பிக்கையால் மேற்கொள்ளப்படும் தவறான காரியம் அது; தேவையற்றதும்கூட!

**★ கண்தானம் செய்வது என்றால் எப்படி?**

அருகில் உள்ள அரசு கண் மருத்துவமனைக்குச் சென்று, அதற்கான படிவம் ஒன்று வாங்கி முறைப்படி பூர்த்திசெய்து கொடுக்க வேண்டும். முக்கியமாக- நெருக்கமான உறவினர்களிடம் இதுபற்றி முன்கூட்டியே தெரிவித்துவிட வேண்டும். ஏனென்றால்- ஒருவர் இறந்த 6 மணி நேரத்திற்குள் கண்கள் எடுக்கப்பட்டாக வேண்டும்; இப்படிப்பட்ட நிலையில் உறவினர்கள் மறுத்தால் மருத்துவர்கள் மீற முடியாத நிலைமை ஏற்பட்டு விடக்கூடும்.

**கே. வெற்றிவேல்
ஈச்சங்கோடு**

**★ காலையில் எழுந்ததும் கண்களில் ஊளை தள்ளி, கண்ணீர் வடிகிறது; இதற்கு என்ன செய்யலாம் டாக்டர்?**

"Antibiotic Drops" நல்லதாக ஏதாவது வாங்கி, தொடர்ந்து போட்டுக் கொள்ளுங்கள்.

**க. கோபாலகிருஷ்ணன்
வெங்கடாம்பேட்டை**

**★ எனக்கு அதிகமாக வேலை எதுவும் இல்லை; இருந்தாலும் எனது விழிகள் அடிக்கடி உறங்க ஆரம்பித்து விடுகிறது என்ன காரணம்?**

"நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் உங்கள் கண்களில் ஏதும் கோளாறு இருக்க நியாயமில்லை; உடலில் ஏதோ நோய் இருப்பது போல் தெரிகிறது. உடனடியாகத் தகுந்த டாக்டரிடம் நீங்கள் உடலைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.

**பி. பாப்பையா
திருப்பரங்குன்றம்**

**★ "நான் 2.6.1992-இல் கேட்டராக்ட் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டேன்; கனமாகக் கண்ணாடி கொடுத்துள்ளனர். ஆனால், பரவலாகப் பல்பு வெளிச்சம் போல் தெரிகிறதே தவிர, இன்னமும் பார்வை சரிப்படவில்லை. எனக்கு வயது 68 ஆகிறது; இனிமேல் நான் வலது கண்ணில் IOL பொறுத்திக் கொள்ளலாமா?**

"Intraocular Lens" இனிமேல் இந்த வயதில் உங்களுக்குப் பொருத்துவது சிரமம். மறுபடியும் டாக்டரிடம் காட்டி ஆலோசனை பெறுங்கள்"

**வி. சென்றாயன்
கருப்பூர், சேலம்-12**

**★ பிறவிக்குருட்டைச் சரிசெய்துவிட முடியுமா?**

"பிறக்கிறபோதே சில குழந்தைக்குக் கேட்டராக்ட் இருப்பது உண்டு; அப்படியிருந்தால் (Congenital Cataract) குணப்படுத்திவிடலாம்; அப்படி இல்லாவிட்டால் அறவே சரிசெய்ய முடியாது."

ச. ஜான் ரவி
கோவில்பட்டி

**★ கண்ணாடியைத் தேவைப்படும் போது மட்டும் போட்டுக்கொண்டிருந்துவிட்டு, பிறகு கழற்றி வைத்துவிடலாமா?**

''கண்ணாடி போட்டால்தான் சரியான பார்வை கிடைக்கிறது என்று ஆகிவிட்ட பிறகு, தொடர்ந்து போட்டுக்கொள்ளத்தான் வேண்டும்; அவ்வப்போது கழற்றி வைப்பது தவறு.''

**★ ஒன்றரைக் கண்ணை நல்லபடி சரிப்படுத்தி விடமுடியுமா டாக்டர்?**

''முடியும். பார்வைக்கு எந்தப் பழுதும் ஏற்படாமல் அறுவைச் சிகிச்சை மூலம் ஒன்றரைக் கண்ணை நேர்ப் பார்வை கொண்டதாகக் குணமாக்கிவிடலாம்.''

எஸ்.பி. பச்சைமுத்து
காரைக்குடி

**★ மஞ்சள் காமாலை நோய்க்கும் கண்ணுக்கும் என்ன சம்பந்தம்?**

''ஒரு சம்பந்தமும் இல்லை; காமாலை நோயால் உடலில் ஏற்படும் மாற்றம் காரணமாக, விழி வெண்படலம் மஞ்சள் நிறமாகிவிடும்; அவ்வளவுதான்!''

எம். முருகேசன்
குட்டிச்செட்டிபட்டி

**★ இரவில் அடிக்கடி எனக்கு விழிப்பு வருகிறது; சரியான தூக்கமில்லை - இது ஏன்?**

''இதற்கும் கண்ணுக்கும் சம்பந்தமில்லை; உடம்பை ஒரு நல்ல டாக்டரிடம் காட்டிப் பரிசோதித்துக் கொள்ளவும்.''


**★ எனக்குக் கண்ணீரே வருவதில்லை; இதனால் நன்மையா, தீமையா?**

''நிச்சயம் அப்படியிருப்பது தீமைதான். நமது கருவிழியானது பரிபூரண ஒளிபெறக் காரணமே கண்ணீர்தான். கண்ணீர் இல்லையேல், விழியானது உலர்ந்துபோய் விரைவிலேயே பார்வை கெட்டுவிடும். இதை உத்தேசித்து செயற்கைக் கண்ணீரே கண்டுபிடித்திருக்கிறார்கள்; வாங்கிப் பயன்படுத்துங்கள். அல்லது அருகிலுள்ள அரசு கண் மருத்துவமனைக்குப் போய்ப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.''

மு. சுப்பிரமணியன்
நெய்வேலி-7

**● 26 வயதுள்ள நான் வெல்டராகப் பணிபுரிந்து வருகின்றேன்; கடந்த நான்காண்டுகளாகக் கண்களில் நீர் கசிகிறது; எரிச்சல் ஏற்படுகிறது; நான் பாதுகாப்புக் கவசத்தோடு வேலை பார்த்தும் இந்த நிலை - இது ஏன் டாக்டர்?**

''பாதுகாப்புக் கவசம் அணிவதாகக் கூறுகிறீர்கள்; ஆகவே விழிகளில் பாதிப்பு நேர்ந்திருக்க வழியில்லை; தகுந்த டாக்டரிடம் பரிசோதித்துக் கண்ணாடி போட்டுக்கொள்ளுங்கள். உங்கள் குறைகள் நீங்கிவிடும்.



ஆர்.கே. சிவசுப்பிரமணியம்
ஊர்க்காடு

**● என் தங்கைக்கு மாலைக்கண் நோய். இரவு 7 மணிக்கு மேல் பார்வை தெரிவதில்லை; மின்மினிப் பூச்சியைப் பிடித்து உணவோடு கொடுத்தால் பார்வை கிடைத்துவிடும் என்கிறார்கள் சிலர், நான் என்ன செய்யட்டும் டாக்டர்?**

''உங்கள் தங்கைக்கு 'RP' ஆகவும் இருக்கலாம். வைட்டமின் 'ஏ' சத்துக் குறைவினாலும் அப்படி ஆகலாம். சரியான கண் டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டி சிகிச்சை பெறச் செய்யுங்கள். அப்படியில்லாமல் மின்மினிப்பூச்சி சாப்பிட்டால் சரியாகிவிடும் என்பதெல்லாம் கட்டுக்கதை, நம்ப வேண்டாம்.

**● "Cataract" என்றால் என்ன டாக்டர்? அது ஏன் வருகிறது?**

''கண்புரை நோய் என்பதே அது; இந்நோய் கண்டவர்களுக்கு, எப்போதும் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது போலவே பார்வை இருக்கும்; இதை முறையான அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கிவிடலாம்.''

பழனிராஜன்
கோவை

**● 45 வயதுள்ள என் இடது கண்களின் கறுப்பு வட்டம், வலது கண்ணில் உள்ளதைவிடச் சற்றுப் பெரிதாக இருக்கிறது. இடது விழியால் பார்க்கவோ, படிக்கவோ முடியவில்லை. போதுமான வசதியற்ற நான் இந்தக் குறையைப் போக்க என்ன செய்யலாம்?**


''இதுவும் ஒருவகைக் கண் நோயே ஆகும்; தீவிரமான சிகிச்சை மூலம் குணப்படுத்திவிடலாம். அரசினர் கண் மருத்துவ மனையை அணுகுங்கள்; அதுவே போதுமானது; உங்கள் துன்பம் நீங்கிவிடும்.''

## மாதம் ஒரு மருத்துவர்:

'மாதம் ஒரு மருத்துவர்' வரிசையில், மனநல மருத்துவ நிபுணர்.

**டாக்டர் என். மாத்ருபூதம் அவர்கள்**

**உங்கள் கேள்விகளுக்குப் பதில் கூறுகிறார்.**



**● மனநலம் குறித்த உங்கள் கேள்விகளை, 5.9.93-க்குள் அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம். கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதினால் போதும். அனுப்ப வேண்டிய முகவரி:**

**ஆசிரியர் 'தமிழரசு'**
**அரசினர் தோட்டம்**
**சென்னை-600 002.**

# நூல் நயம்

## பாரதப் போரில் பார்த்தசாரதி

**ஆசிரியர்: டாக்டர் த. அமிர்தலிங்கம்**

**வெளியீடு:**

செவ்வேள் பதிப்பகம்,
பி-3, தாடண்டர் நகர்,
வீட்டுவசதி வாரியக்குடியிருப்பு
சைதாப்பேட்டை,
சென்னை-600 015.

பக்கம்:448 விலை:ரூ.55/-

ஐந்தாம் வேதம் என்னும் சிறப்பினைப் பெற்றது பாரதம். சங்க காலத்தில் பெருந்தேவனாரும் இடைக்காலத்தில் வில்லிபுத்தூராழ்வாரும் பாரதத்தைத் தமிழில்பாடிய பெருமக்கள். வில்லிபுத்தூராழ்வாரின் கவிதையாற்றலை, விருத்தப்பாடலின் வித்தகத்தை வியாவாதார் இல்லை. பாட்டிலே இயன்ற அந்தப் பனுவலை ஏட்டிலே உரை வடிவத்தில் கொண்டுவர எடுத்த முயற்சிதான் இந்தநூல்.

பாரதக் கதையை, தெள்ளிய நீரோடை போன்ற உரைநடையில், ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம் அவர்கள் சொல்கிற நேர்த்தி பாராட்டத்தக்கது.

பல்வேறு பாத்திரங்களைப் பாரதக் கதை கொண்டிருந்தாலும், எல்லாரையும் இணைக்கின்ற நூலாக இருந்தவன் பார்த்தசாரதி. கட்டுவிக்கும் நூலாக மட்டுமல்லாமல், ஆட்டுவிக்கும் ஆளாகவும் அவனே அமைவதால் பாரதப் போரில் பார்த்தசாரதி என்னும் புதுத்தலைப்பிலே, காவியச் செய்திகளைக் கருத்துக்கு விருந்தாக்கி மகிழ்கிறார் ஆசிரியர்.

கல்வி, கேள்வி, சிந்தனை, கவிஞர்க்குரிய கற்பனை- இவையனைத்தும் கொண்ட டாக்டர் த. அமிர்தலிங்கத்தின் இந்த அரிய நூலில், எளிமை, இனிமை, உண்மை, தெளிவு- இவையனைத்தையும் காணலாம்.

—இளந்தேவன்

## வள்ளுவத்தில் காதல் கணிதம்

**ஆசிரியர்: பொறிஞர் இரா. சிதம்பரம்**

**வெளியீடு:**

திலகம் பதிப்பகம்
2/35, ஆயில் மாங்கர் தெரு
சென்னை-14

பக்கம்:144 விலை:ரூ.20/-

முப்பால் என எப்பாலும் போற்றும் திருக்குறளில், காமத்துப்பாலின் சிறப்பை விளக்குகிறது இந்நூல்.

'மனித குலத்தின் நல்வாழ்வுக்கு, வள்ளுவரது காதல் கணிதம் எவ்வாறு தேன் மருந்தாய் அமைகிறது' என்பதை அழகுற எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். பல்வேறு மேற்கோள்களுடன் குறளையும் இணைத்து, தாம் எடுத்துக் கொண்ட பொருளிலிருந்து சற்றும் வழுவாமல் மிகக் கச்சிதமாகச் செய்திருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

இன்பத்தின் அடிப்படைக் கூறு பாடுகளை வாழ்வியலின் இயற்கை ஓட்டத்தோடு ஆய்ந்து, பெண்மை குறித்து வள்ளுவத்தின் கருத்தை நிலைநாட்டு கிறார். தமிழ் ஆர்வலருக்கும், ஆராய்ச்சி இளைஞர்கட்கும் இந்நூல் சிறந்த கையேடாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

— பி.வி.ஜி.

## மூலநோய்க்கு நவீன வைத்தியம்

**ஆசிரியர்: சூரியநாத்**

**வெளியீடு:**

கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-600 026.

பக்கம்:96 விலை:ரூ.12/-

நமது உணவுப் பழக்க வழக்கங்களே நம்முடைய நோய்களுக்கு மூல காரண மாக அமைகின்றன.

மூல நோய்க்கு மூல காரணமே, மலச் சிக்கல்தான் என்பது மருத்துவர் கருத்து. அளவோடு உண்டால் எந்த நோயும் நம் அண்டாது என்பதை நாம் உணர வேண்டும்.

மூலநோய்க்குக் காரணங்களை மட்டும் கூறாமல், அதைப் போக்கும் வழி முறைகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

எளிய மூலிகை மருத்துவம் மூலம் இந்நோயைக் குணப்படுத்தலாம் என்பது டன், யோகாசனப் பயிற்சிகளும் இதற்கு உதவும் என்று கூறுகிறார் ஆசிரியர்.

அதற்கான விளக்கப் படங்களும் உள்ளன.

—மறைமலை

## 'விஞ்ஞான விந்தைகளும் அறிவியல் வளர்ச்சியும்'

**ஆசிரியர்:**

**இலக்கியச் சித்தர்**
**தங்கவயல் லோகிதாசனார்**

**வெளியீடு:**

பாண்டியன் பதிப்பகம்,
20, எஸ்.பி.எஸ். முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை-14.

பக்கம்:120 விலை:ரூ.16/-

பழமைகளும் (சூரியன், எரிமலை, நட்சத்திரம்) புதுமைகளும் (ரெடினா ஸ்கேனர், ரேடார், பிளானடோரியம்) தோன்றிய விதம், அவற்றின் தரம், பயன் என்று மிக விளக்கமாக, எளிமையாகக் கூறும் நூல்.

அறிவியலில் வளர்ச்சிகள் கணக்கிட முடியாதவை. அனைத்தையும் சொல்ல இயலாது என்றாலும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய சிலவற்றைப் பற்றி இந்நூல் விவரிக்கிறது. எதையும் காரண காரியங்களோடு அறிந்து கொள்ள விரும்புபவர்கள். மாணவர்கள் ஆகியோ ருக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளது.

## பனியைத் துரத்தும் சூரியன்

**ஆசிரியர்: இன்பவாணன்**

**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
த.பெ. எண். 501
பூங்கா நகர், சென்னை-600 003.

பக்கம்:88 விலை:ரூ.23/-

சின்னஞ்சிறு கதைகளின் தொகுப்பு. ஒவ்வொரு கதையும் சாதாரண மனிதனில் இருந்து 'சபை குரு' வரையிலுள்ளவர் களின் ஆசை, பாசம், பொறாமை, கோபம், சந்தேகம் போன்ற உணர்வு களை மையமாக வைத்து, தெய்வ நம் பிக்கையை வலியுறுத்தி எழுதப்பட்டவை யாகும்.

எளிய நடை, நாம் ஒவ்வொருவரும் அன்றாடம் சந்திக்கும் சம்பவங்கள், பிரச்சினைகள், அவை தீர்க்கப்படும் முறைகள் என்று கதைகள் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன.

அவளுக்கு வேலை கிடைத்து விட்டது, திருமறைப் பேச்சாளர், புகை மண்டினால், காலத்தின் கைகள் போன்ற கதைகள் நினைவில் நிற்பவை.

—என். குமாரசாமி

ஆசிரியரும் வெளியிடுபவரும்: இரா. சம்பத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!






கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

தமிழரசு



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

